ISBN:978-81-687272-0-5

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



தி க சிவசங்கரன்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/123.%20%E0%AE%A4%E0%AE%BF.%E0%AE%95.%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%9A%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B0%E0%AE%A9%E0%AF%8D_1925

செந்தமிழ்சிற்பிகள்

தி.க.சிவசங்கரன் (1925 - 2014)



அறிமுகம்

தி. க. சிவசங்கரன் (Thi. Ka. Sivasankaran, 30 மார்ச் 1925 - 25 மார்ச் 2014), மார்க்சிய திறனாய்வாளர். திருநெல்வேலி நகரில் பிறந்தவர். சிறு வயதிலேயே இவரது இளமைப் பருவ நண்பரான வல்லிக்கண்ணனுடன் இணைந்து முற்போக்கு இலக்கியச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். ப.ஜீவானந்தத்தால் இலக்கிய வழிகாட்டுதல் பெற்றார். இந்திய பொதுவுடைமைக் கட்சி இலக்கிய இதழான தாமரையில் 1960 முதல் 1964 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். 1964ல் சோவியத்து கலாச்சார நிலையத்தில் செய்தித் துறையில் சென்னையில் பணியாற்றி 1990ல் ஓய்வுபெற்றார். தி.க.சிவசங்கரனின் மகன் வண்ணதாசன் என்ற கல்யாணசுந்தரம் எழுத்தாளரும், தமிழில் முக்கியமான சிறுகதையாசிரியரும் ஆவார்.

இதழாசிரியர் பணி

டிசம்பர் 14,1964இல் வங்கி வேலையை ராஜினாமா செய்து விட்டு, தோழர்.ஏ.எஸ்.மூர்த்தியின் பரிந்துரையின் பேரில், சோவியத் செய்திதுறை ஆசிரியர் குழுவில் இணைந்தார். இங்கு பணியாற்றிய காலத்திலேயே, 'தாமரை'யின் பொறுப்பாசிரியராக கடமையாற்றும் பேறையும் அவர் பெற்றார். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை சோவியத் செய்தித்துறையிலும், மாலை வேளைகளில் 'தாமரை' யின் பணிகளிலும் அவர் ஈடுபட்டு வந்தார்.

1965 முதல் 1972 வரை 'தாமரை'யின் நூறு இதழ்களுக்கு ஆசிரியராக திகழ்ந்து, நசிவு இலக்கியங்களுக்கு எதிரான இயக்கத்தை தோற்றுவித்தார். 'வியட்நாம் போராட்டச் சிறப்பிதழ், சிறுகதை சிறப்பிதழ், கரிசல் சிறப்பிதழ், மொழிபெயர்ப்பு சிறப்பிதழ்' என பல சிறப்பிதழ்களை கொண்டு வந்தார். அதே போல், சோவியத் செய்தித்துறையில் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணிபுரிந்து 1990இல் ஒய்வு பெற்றார்.

சாகித்ய அகாதமி விருது

'விமர்சனங்கள் மதிப்புரைகள் பேட்டிகள்' நூலுக்காக 2000 ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது.

ஆவணப்படம்

தி.க.சி.யின் வாழ்க்கை குறித்தும்-எழுத்துலகம் குறித்தும் 2007-ஆம் ஆண்டு சென்னையில் இயங்கி வரும் தமிழ்க்கூடம் என்ற கலை-இலக்கிய அமைப்பு ஒரு ஆவணப் படத்தை உருவாக்கியது. "21-இ,சுடலை மாடன் தெரு,திருநெல்வேலி டவுன்" என்று பெயர் சூட்டப்பட்ட இப்படத்தை எழுத்தாளரும் இயக்குநருமான எஸ். ராஜகுமாரன் எழுதி-இயக்கியுள்ளார். திருப்பூர் மத்திய அரிமா சங்கத்தின் 2008-க்கான சிறந்த ஆவணப்பட விருது மற்றும் தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர்கள்-கலைஞர்கள் சங்கத்தின் சிறந்த ஆவணப்பட விருது-2008 ஆகிய விருதுகள் இந்த ஆவணப்படத்திற்கு கிடைத்தன.

மறைவு

சிவசங்கரன் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் பாளையங்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், 2014 மார்ச் 25 இரவு 11.30 மணியளவில் காலமானார். மறைந்த தி.க.சிவசங்கரனுக்கு 3 மகள்கள் மற்றும் எழுத்தாளர் வண்ணதாசன் உள்பட 3 மகன்கள் உள்ளனர்.

(😊)(😊)(😊) ＠＠＠＠＠＠＠＠＠＠＠ (😊)(😊)(😊)

தி.க.சிவசங்கரன் எனும்

தி.க.சி.யின் நூற்றாண்டை நோக்கி…

வீ.அரசு

https://keetru.com/index.php/2020-09-25-12-16-5/pudhumalar-jul2024/47516-2024-11-27-06-51-13

தாமரை இதழ்வழி (1965-1972) தி.க.சி கட்டமைத்த இடதுசாரிக் கருத்துருவாக்கம்

“… சென்ற பதினைந்து ஆண்டுகளாக (1945--1960), ஆரம்பத்தில் அத்தி பூத்தது போலவும், பிறகு இங்கொன்று அங்கொன்றாகவும், அப்பால் ஆண்டுதோறும் கணிசமான அளவிலும் நடந்த, பாரதி, கம்பன், வள்ளுவன், இளங்கோ விழாக்களிலும், அண்மையில் வள்ளலார், வேதநாயகம் பிள்ளை, மனோன்மணியம் சுந்தரனார், மறைமலையடிகள், கவிமணி, புதுமைப்பித்தன், கல்கி, டி.கே.சி நினைவு நாட்களிலும் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் முதலியார், என்.எஸ்.கே. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் விழாக்களிலும் ஜீவா, ரகுநாதன், எஸ்.ஆர்.கே., முகவை போன்றோரும் மற்றவர்களும் கலந்துகொண்டு புதிய முறையில் விமர்சனக் கருத்துகளை வழங்கி வந்தார்கள். இந்தக் கருத்துக்களில் சில பல நூல் வடிவம் பெற்றன. மேற்கூறியவர்களோடு ஒரு திசைப் பயணிகளாக மேலும் பலர் - குறிப்பாக எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் அணிவகுத்து நின்றனர். ‘ஜனநாயகம்’, ‘சாந்தி’, ‘சரஸ்வதி’, ‘தாமரை’ போன்ற கலை - இலக்கிய இதழ்களின் வழியாக, கலை - இலக்கிய வளர்ச்சிக்குப் புதுநெறி காட்டப் போராடினர்.” (ஜீவா.தலையங்கம்.தாமரை ஜூலை.1961.- தமிழகக் கலை இலக்கிய மகாநாட்டு மலர்)

தோழர் தி.க.சி. என்று எல்லோராலும் அழைக்கப்படும் தி.க. சிவசங்கரன் (1925-2014) அவர்களின் ஆளுமை உருவாக்கம் உருப்பெறத் தொடங்கிய காலம்தான், மேலே ஜீவா விவரித்திருக்கும் காலம் ஆகும். தமிழ்ச்சூழலில், இடதுசாரி கருத்துசார்ந்த நிலைப்பாட்டில் வாழ்ந்த பல்வேறு ஆளுமைகள் குறித்த, விரிவான பதிவுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. அவர்கள் வாழ்ந்த காலம் நெருக்கடிக்குள்ளான காலம். தகவல்கள் விரிவாகப் பதிவு செய்யப்படாத காலம். இன்றைய சூழலில் பல்வேறு இடதுசாரி ஆளுமைகள் குறித்தத் தேடலை மேற்கொண்டு, அவர்கள் குறித்தப் பதிவுகளைச் செய்யவேண்டிய கடமை நமக்குண்டு. ஆதாரபூர்வமான தரவுகளை முன்னெடுத்து இடதுசாரிக்கருத்து நிலையாளர்களைப் பொதுவெளியில் கொண்டாட வேண்டும். அந்தக் கொண்டாட்டம் புதிய வரலாறுகளை அறிதலாகவும் இளம் செயற்பாட்டாளர்களுக்கு உற்சாகம் தரும் அநுபவமாகவும் அமையக்கூடும். இந்தக் கண்ணோட்டத்தில் தி.க.சி. என்ற ஆளுமையை இங்கு பதிவு செய்ய முயலுகிறேன். தி.க.சி.யின் நூற்றாண்டை நோக்கிய (30.03.2025 இல் நூற்றாண்டு தொடங்குகிறது) இத்தருணத்தில், அவரைப் போற்றிப் பேசும் நல்வாய்ப்பாக இப்பதிவைச் செய்கிறேன்.

தி.க.சி.யின் ஆளுமையைப் புரிந்துகொள்ள அவரது வாழ்க்கை நிகழ்வுகளைப் பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்வோம்.

- **-நெல்லை வாலிபர் சங்கத்துடன் இணைந்து, நண்பர்களுடன் 'இளந்தமிழன்' கையெழுத்துப் பத்திரிக்கை நடத்துதல் மற்றும் வல்லிக் கண்ணன் அவர்களோடு தொடர்புகொண்டு செயல்பட்ட தி.க.சி (1941-1946).**

-• நெல்லையில் 'கலைஞர் கழகம்' என்னும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் செயல்பட்ட தி.க.சி (1947-1954).

-• நெல்லையில் 'முற்போக்கு எழுத்தாளர் மன்றம்' என்னும் அமைப்பில் நண்பர்களோடு செயல்பட்ட தி.க.சி. (1955-1958)

- **சிந்துபூந்துறை சண்முகம் அண்ணாச்சி அவர்களுடன் இணைந்து நூல் வெளியீட்டுத் துறையில் செயல்பட்ட தி.க.சி (1952-1962).**

-• வங்கி ஊழியராக (1948-1964) வாழ்ந்த தி.க.சி. அவ்வமைப்பின் தொழிற்சங்கட் பணிகளில் ஈடுபட்டு வாழ்ந்த காலம்.

தமது ஏழாவது வயதில் தந்தையை இழந்த தி.க.சி. தனது தாயின் அரவணைப்பில் வளர்ந்ததாகக் கூறுகிறார். இந்துக் கல்லூரியோடு தொடர்புடைய நெல்லை வாலிபர் சங்கத்துடன் இணைந்து செயல்படத் தொடங்குகிறார். கையெழுத்துப் பத்திரிக்கை நடத்துகிறார்கள். ‘இதய ஒலி’ எனும் கையெழுத்துப் பத்திரிக்கையை நடத்திக் கொண்டிருந்த வல்லிக்கண்ணனை நண்பர்களுடன் சந்திக்கிறார். தி.க.சி நண்பர்களுடன் இணைந்து நடத்தும் ‘இளந்தமிழன்’ இதழில் வல்லிக்கண்ணன் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். அரசாங்க வேலையை உதறிவிட்டு முழுநேர எழுத்தாளராக செயல்பட்டுக் கொண்டிருந்த வல்லிக்கண்ணன் அவர்களோடு 1941இல் தி.க.சிக்குதொடர்பு ஏற்படுகிறது. இவரது ஆளுமை வளர்ச்சியில் வல்லிக்கண்ணன் பெரும் தாக்கம் செலுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. தி.க.சி. வல்லிக்கண்ணனைத் தமது குருநாதர் என்றே சொல்லிக்கொண்டார்.

தி.க.சி.யோடு பேசும் வாய்ப்பு ஏற்பட்டால், வல்லிக்கண்ணன் பற்றி பேசாமல் இருக்கமாட்டார். அதைப்போல் வல்லிக்கண்ணன் அவர்களைச் சந்தித்தால், தி.க.சி. பற்றி நிறையப் பேசுவார். சோசலிசக் கருத்தாக்கம் மீது நம்பிக்கைகொண்ட நண்பர்களாக இவர்கள் வாழ்ந்தனர். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, சென்னை நகரத்தில் நடைபெறும் முற்போக்கான கலை இலக்கிய நிகழ்வுகள் அனைத்திலும் இவ்விருவரைக் காண முடியும். சென்னை நகரத்தில் கலை இலக்கியம் தொடர்பான ஈடுபாடு உடைய இளைஞர்களிடத்தில், இவ்விருவரது தாக்கம் கணிசமான அளவில் உண்டென்றே கூறமுடியும்.

இளைஞனாக வளரும்போதே, வாசிப்பதில் மிகுந்த ஈடுபாடு உடையவராகவும் ஒரு கட்டத்திற்குப் பிறகு பாரதி மீது ஆழ்ந்த ஈடுபாடு மிக்கவராக மாறி, வாழத் தொடங்கினார் தி.க.சி. 1940-1950 காலச்சூழல் என்பது பிரித்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும் காலமாக இருந்த அதே நேரத்தில், இடதுசாரி இயக்கங்கள் வீரியத்தோடு வளர்ந்த

கொண்டிருந்த காலம் அது. தி.க.சி. இடதுசாரி கருத்துநிலைகளை உள்வாங்கிய இளைஞனாகவே வளரத் தொடங்கினார்.

1947இல் தொ.மு.சி. ரகுநாதன் அவர்களுடனும் இணைந்து 'கலைஞர் கழகம்' என்னும் அமைப்பில் பல நண்பர்களுடனும் செயல்படத் தொடங்கினார். இந்த அமைப்பு குறித்து தி.க.சி.தனது 1948ஆம் ஆண்டு (4.1.1948) நாட்குறிப்பேட்டில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"இன்றைய கழகக் கூட்டத்திற்கு (கலைஞர் கழகம்) சம்பந்த மூர்த்தி தலைமை வகித்தார். கு.ஸ்ரீனிவாசனின் நாடகத்தை கு.ஸ்ரீ.யே வாசித்தார். சபாபதியின் (கோவில்பட்டி பஞ்சப் பிரதேசத்துக்குத் தலைவர் சுற்றுப்பிரயாணம் செய்த விஷயத்தைப் பற்றிய கண்டனத் தீர்மானம் கடுமையான விவாதம் நடந்து வாபஸாயிற்று". (தி.க.சி. நாட்குறிப்புகள்: 26:2014).

மேற்குறித்த செய்தியின் மூலம் கலை இலக்கியத்துறையில் தி.க.சி.யின் செயல்பாடுகள் எவ்வகையில் இருந்தன? என்பது பற்றித் தெரிந்து கொள்ளமுடிகிறது. கோவில்பட்டிப் பகுதியில் உள்ள பஞ்சம் குறித்த விவாதத்தையும் இக்குழுவினர் மேற்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. நாட்குறிப்பேட்டில் கோவில்பட்டிப் பஞ்சம் தொடர்பான விரிவான செய்திகள் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

'தி.க.சி. நாட்குறிப்புகள்' (தொகுப்பு: வே. முத்துக்குமார்) எனும் நூலின் மூலம் தி.க.சி என்ற மனிதரின் அரசியல் செயல்பாடுகள், தொழிற்சங்கச் செயல்பாடுகள், வாசிப்பு முறைமைகள், அவரது ஈடுபாடுகள், குடும்ப உறவுகள் ஆகிய பல செய்திகளின் விரிவான பரிமாணத்தை அறிய முடிகிறது. 1940கள் தொடங்கி அந்தப் பத்தாண்டுகளின் இறுதிக் காலங்களில் தி.க.சி.யின் செயல்பாடுகளை அறிய உதவும் இந்த ஆவணத்தில் மூலம், அவரது இயல்பான பண்புகள், மனிதாபிமான அணுகுமுறைகள் ஆகிய பல கூறுகளை அறிவதற்கான தரவாக இந்த நாட்குறிப்பேடு அமைந்திருக்கிறது.

தொ.மு.சி. தமது பேட்டி ஒன்றில் (இரா. சீனிவாசன்: 'சாந்தி' இதழ் குறித்த ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு.1989). கலைஞர் கழகம் குறித்தும் அதில்

டி.செல்வராஜ் மற்றும் தி.க.சி. ஆகியோர் குறித்தும் கூறியிருக்கிறார். அந்தப் பேட்டியில் 1954இல் தி.க.சி., டி. செல்வராஜ் ஆகியோரோடு இணைந்து நெல்லையில் 'முற்போக்கு எழுத்தாளர் மன்றம்' உருவாக்கியது குறித்தும் பதிவு செய்துள்ளார். இம்மன்றத்தின் மூலமாக 'புதுமைப்பித்தன் நினைவு சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தினர். இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட 'சாந்தி' இதழில் வெளிவந்த, சுந்தர ராமசாமி அவர்களின் 'தண்ணீர்' கதைக்கு ரூ. 100 பரிசளிக்கப்பட்டது. இவ்விழா நாடகக்கலைஞர் தி.க. சண்முகம் அவர்கள் தலைமையில் 1955இல் நடந்தது. இவ்வமைப்பில் ப.சீனிவாசன், நா. வானமாமலை ஆகியோரும் இணைந்து செயல்பட்டனர். தொ.மு.சி.ரகுநாதன், நா.வானமாமலை ஆகியோருடன் இணைந்து இக்காலங்களில் தி.க.சி. செயல்பட்டார். திருநெல்வேலிப் பகுதியில் இடதுசாரி கண்ணோட்டத்துடன், கலை இலக்கியங்களில் ஈடுபடுபவர்களாக அக்காலத்தில் கி.ராஜநாராயணன், சுந்தரராமசாமி ஆகியோர் செயல்பட்டனர். இவர்களுடைய செயல்பாடு நெல்லை முற்போக்கு எழுத்தாளர் மன்றத்துடன் தொடர்புடையதாக இருந்தது. 1954இல் ரகுநாதன் நடத்திய 'சாந்தி' இதழில் வெளியான 40 கதைகளில் 10 கதைகள் சுந்தரராமசாமியின் கதைகள் என்பதை அறியமுடிகிறது. அன்றைய இடதுசாரி இயக்கத்தின் விவசாயத் தொழிலாளர் இயக்கத்தில் கி. ராஜ நாரயணன் முக்கியப் பங்கு எடுத்துச் செயல்பட்டார். இந்தச் சூழலை அடிப்படையாகக் கொண்டே தி.க.சியை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நெல்லை சிந்து பூந்துறையில் வாழ்ந்த தோழர் சண்முகம் அண்ணாச்சி, தமிழில் இடதுசாரி மரபுசார்ந்த எழுத்துக்களை அச்சிட்டு, 'நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்' மூலம் வெளிக்கொண்டு வந்தார். அவருக்கு உறுதுணையாக இருந்து செயல்பட்டவர் தி.க.சி.. இப்பதிப்பகத்தின் மூலம் அடிப்படையான மார்க்சிய நூல்கள் பல தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டன. ஜனசக்தி பிரசுரலாயம் 1940களில் செய்து கொண்டிருந்த பணியை 1950களில் இப்பதிப்பகம் செய்தது. அவர்கள் வெளியிட்ட சில நூல்கள் வருமாறு: 'அரசியல் போதனை மலர்கள்', 'பாட்டாளி வர்க்கமும் பாட்டாளிக் கட்சியும்' மற்றும் பல்வேறு லெனின் நூல்கள்; வீர நினைவுகள் (ஜீலியஸ் பூசிக்), நீல விழியாள் ('சாந்தி' கதைகள்),

மற்றும் பல்வேறு படைப்புகள் வெளிவந்தன. சீன இலக்கியங்களை தி.க.சி இக்காலத்தில் மொழியாக்கம் செய்தார். அவை மேற்குறிப்பிட்ட பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தன. நா.வா. மொழியாக்கம் செய்த நூல்களும் இப்பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தன. தோத்தாத்ரி எழுதிய அறிவியல் நூல்களையும் இவர்கள் வெளியிட்டனர். 1950களில் வளமான இடதுசாரி மரபு சார்ந்த அச்சு ஊடகம் நெல்லையில் செயல்படுவதற்கு தி.க.சி.யின் பங்களிப்பு முதன்மையானது. இவ்வகையான தகவல்கள் பொதுவெளியில் விரிவாகப் பதிவாகவில்லை. அவை முழுமையாக வெளிவரும்போது தி.க.சியின் பங்களிப்பை புரிந்துகொள்ள முடியும்.

'அறிவு' (1936) என்னும் இதழ் சாத்தான் குளம். அ. இராகவன் மற்றும் தோழர்.ப. ஜீவா ஆகியோர்களால் நடத்தப்பட்ட முதல் இடதுசாரி கருத்துநிலை சார்ந்த இதழ் என்று கூறமுடியும். 1937இல் ஜனசக்தி அப்பணியைத் தொடர்ந்து நடந்தத் தொடங்கியது. 1940களில் இறுதியில் 'ஜனயுகம்', 'ஜனநாயகம்', 'முன்னணி' ஆகிய இதழ்கள் கம்யூனிஸ்ட்கட்சியால் நடத்தப்பெற்றவை. 'ஜனயுகம்' இதழைத் தான் ஆசிரியராக இருந்து நடத்தியதாகத் தோழர், கவிஞர் தமிழ்ஒளி பதிவு செய்துள்ளார். இவ்விதழ்களின் தொடர்ச்சியாக, இஸ்மத் பாஷாவின் 'சமரன்' (1952), கே.சி.எஸ். நடத்திய 'நீதி', தொ.மு.சி. ரகுநாதனின் 'சாந்தி' (1954), விஜய பாஸ்கரனின் அவர்களின் 'சரஸ்வதி' (1954) ஆகிய இதழ்கள் ஐம்பதுகளில் வெளிவந்தன. இவற்றின் உச்ச வளர்ச்சியாக 'தாமரை' (1959) வெளிவரத் தொடங்கியது. இவ்வகையான இடதுசாரி இதழ்களோடு தி.க.சி. கொண்டிருந்த உறவு ஆழமானது. இவ்விதழ்களில் இவர் மேற்கொண்ட பல்வேறு விவாதங்கள், இடதுசாரிச் கருத்துநிலை சார்ந்தவர்களிடத்தில் தாக்கங்களை உருவாக்கின. எடுத்துக்காட்டாக 'சரஸ்வதி'யில் நடந்த விவாதத்தைக் கூறமுடியும். 'வீர வழிபாடு வேண்டாம்' என்று புதுமைப்பித்தனை விமர்சனம் செய்து தி.க.சி. சரஸ்வதியில் எழுதினார். புதுமைப்பித்தன் மறைந்தபின் 1952 இல் புதுமைப்பித்தன் மலரைச் சுந்தரராமசாமி கொண்டு வந்தார். 1948இல் புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாற்றை தொ.மு.சி. எழுதி வெளியிட்டார். இந்தச் சூழலில் புதுமைப்பித்தன் குறித்த தி.க.சி.யின் விவாதங்கள்

பல்வேறு தரப்பிலும் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டது. புதுமைப்பித்தன் ஆக்கங்களில் உள்ள "நம்பிக்கை வறட்சி" எனும் கருத்துநிலையை சோசலிச எதார்த்தவாதக் கண்ணோட்டத்தில் தி.க.சி. அணுகினார். இவ்வகையில் 1950களில் நிகழ்ந்த இடதுசாரி கருத்துநிலை சார்ந்த அனைத்துப் பணிகளிலும் கம்யூனிஸ்ட்கட்சி சார்ந்து செயல்பட்டவராகத் தி.க.சி.யைச் கூறமுடியும். விரிவான விவரங்களுடன் இத்தன்மை குறித்து விவாதிக்கும் தேவை இருப்பதாகக் கருகிறேன்.

கலை இலக்கியம் தொடர்பான இயக்கப் பணிகள் மற்றும் அச்சு ஊடகம் சார்ந்த செயல்பாடுகள் குறித்து மட்டும் நம்மால் ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது. 1945-1964 காலத்தில் வங்கி ஊழியராகச் செயல்பட்ட போது நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளமுடியாத, தொழிற்சங்கவாதியாக தி.க.சி. செயல்பட்டார். அவரது 1948ஆம் ஆண்டு நாட்குறிப்பேட்டில் இச்செயல்பாடுகள் குறித்த சில பதிவுகள் உள்ளன. இது தொடர்பாக தி.க.சி. பின்வரும் பதிவைச் செய்துள்ளார். "19 ஆண்டுகளாக, 1945 - 1964 வரை வங்கி ஊழியராகவும் தொழிற்சங்கவாதியாகவும் தமிழகத்திலும் கேரளத்திலும் நான் பெற்ற அனுபவங்களை ஒரு நாவலாகச் சித்திரிக்க வேண்டும் என்கிற எனது பேராசை, பல்வேறு காரணங்களால் இன்று வரையில் நிறைவேறவே இல்லை". (தி.க.சி. நாட்குறிப்பு 16:2014) தி.க.சியின் இந்தப் பக்கம் குறித்து அறியாமல் போனது பெரும் இழப்பு. தொழிற்சங்க ஈடுபட்டால் பல்வேறு ஊர்களுக்கும் அவர் இடமாற்றம் செய்யப்பட்டதும் இறுதியாக அந்த வாழ்க்கையின் கொடுமையிலிருந்து 1964இல் வெளியேறவும் செய்தார். தொழிற்சங்க தி.க.சியைத் திறனாய்வாளர் தி.க.சி.க்குள் காண இயலாமல் போனதைப் புரிந்துகொள்ள வேண்டும். அன்றைய தொழிற்சங்க வரலாறு என்பது இடதுசாரி இயக்க வரலாறுகளோடு இணைந்தது. இதில் தி.க.சி.யின் பல்வேறு பயணங்களை அறிந்துகொள்ள முடிகிறது.

தி.க.சி எனும் ஆளுமையைப் புரிந்துகொள்ள, இளமைக்கால இயக்கச் செயல்பாடுகளில் ஈடுபடத் தொடங்கிய காலம் தொடங்கி, வங்கிப் பணியைத் துறந்து சென்னையில் சோவியத் செய்தித்துறை அலுவலராகப் பணியேற்பதோடு (1941&1963) ஒரு தொகுப்பாகக் கொள்ளலாம். சென்னை வாழ்க்கையில், சோவியத் நாடு அலுவலகம், மற்றும் 'தாமரை

இதழ்ப்பணி (1965&1972) ஆகிய காலத்தை, இன்னொரு தொகுப்பாகக் கொள்ளலாம். இதில் சோவியத் செய்தித்துறைக் குறித்த தி.க.சி.யின் பதிவு வருமாறு.

"சோவியத் செய்தித்துறையில் தோழர் ஏ.எஸ். மூர்த்தியின் (சம்பந்த மூர்த்தி) இடையறாத ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் 'சரஸ்வதி, விஜய பாஸ்கரன், தொ.மு.சி. ரகுநாதன், மாஜினி, கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் மற்றும் பல நண்பர்களுடன் இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றியதை ஓர் ஆவணமாகப் பதிவு செய்யலாம். அதுவும் என்னால் இயலவில்லை. மிக வருந்துகிறேன்." (தி.க.சி. நாட்குறிப்பு. 18:2014).

தி.க.சி.யின் தொழிற்சங்க வாழ்க்கை குறித்து அறிய இயலாமல் போனது போலவே அவரது சோவியத் செய்தித்துறை சார்ந்த வாழ்க்கையும் நமக்குக் கிடைக்கவில்லை. தன்னைச் சமூகத்திற்கு ஒப்படைத்த மனிதர்களின் வாழ்க்கை குறித்தத் தரவுகள் இவ்வாறு அறிய முடியாமல் போகிறது. தி.க.சி.யின் 'தாமரை' இதழ்ப் பங்களிப்பு அனைத்துத் தரப்பிலும் விதந்து பேசப்படுகிறது. அவரது 'தாமரை' இதழ் சார்ந்த பணிகளின் மூலம், அறியலாகும் ஆளுமைக் கூறுகளை பின்கண்டவாறு தொகுக்கலாம்.

- **-1950களில் பல்வேறு இடதுசாரி கலை இலக்கிய அமைப்புகளின் செயல்பாட்டில் தன்னை இணைத்துக் கொண்டவர் தி.க.சி. இந்த மரபின் தொடர்ச்சியாக, தாமரை இதழ் மூலம் அவர் பதிவு செய்திருக்கும் பல்வேறு கலை இலக்கிய அமைப்புகள் தொடர்பான விவரணங்கள்.**

-• -பாரதி மீது அவருக்கிருந்த ஈடுபாடு காரணமாக 'தாமரை' இதழ் வழி கட்டமைந்த 'பாரதி இயல்' குறித்த ஆக்கங்கள்.

-• -சோவியத் செய்தித்துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பதை வாய்ப்பாகப் பயன்படுத்தி, சோவியத் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகிய பிற குறித்தப் பதிவுகளை 'தாமரை' இதழில் இடம் பெறச் செய்தமை.

-• -கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட்ட பல்வேறு தலைவர்களின் அரிய ஆக்கங்களைத் 'தாமரை'யில் வெளிவரச் செய்த அரிய பதிவுகள்.

-• -தமிழ் இலக்கியம் படித்துக் கொண்டிருந்த மற்றும் பயிற்றுவித்த தமிழாசிரியர்களின் ஆக்கங்களை வெளியிட்டுள்ள பாங்கு.

- -'கதைக்கு கரு' என்னும் தொடர் மூலம் பல்வேறு படைப்பாளிகளின் படைப்புச் சூழல் குறித்துப் பதிவாகியுள்ள படைப்பு வரலாறு.

-• -ஈழத்துப் படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு முதன்மை கொடுத்து வெளியிட்ட சிறப்பு.

-• -அட்டைப்படங்களில் படைப்பாளிகளின் நிழற்படங்களை வெளியிட்டு அங்கீகரித்த தன்மை.

-• -'எழுத்து' இதழ் (1959) வழி உருவான புதுக்கவிதை மரபின் இன்னொரு பிரிவினரை, முதன்மைப்படுத்திக் கவிதைகளை

வெளியிட்டதன் மூலம், புதுக்கவிதை மரபில் புதிய மரபுகளை இனம் காட்டியமை.

- --'மலரும் அரும்புகள்' எனும் தலைப்பில் முகமறியாத புதிய சிறுகதைப் படைப்பாளிகளை இனம் கண்டு அவர்களது ஆக்கங்களை வெளியிட்ட மிக அரிய நிகழ்வு.

தி.க.சி.பொறுப்பில் (1965-1972) எட்டு ஆண்டு 'தாமரை' இதழ் வெளிவந்திருப்பதைக் காண முடிகிறது. மேலே தரப்பட்டுள்ள பல்வேறு கூறுகளையும் உரையாடலுக்குப்படுத்த தி.க.சி. பொறுப்பாசிரியராக இருந்த 'தாமரை' இதழ் தரவாக அமைகிறது. தமிழக இடதுசாரிக் கண்ணோட்டம் சார்ந்த ஆக்கங்கள் குறித்த வரலாற்றில், இவை பெறுமிடம் குறித்த உரையாடலை மேற்கொள்ளும் தேவையுண்டு.

பொது வெளியில் செயல்படத் தொடங்கிய காலம் முதல் இயக்கம் சார்ந்து செயல்படுவதில் நம்பிக்கையுடையவராக தி.க.சி. இருந்தார். 1947-1964 இடைப்பட்ட காலத்தில் அவரது செயல்பாடுகள் மூலம் இதனைப் புரிந்துகொள்ள பல்வேறு நிகழ்வுகளை முன்பகுதியில் விவாதித்தோம். அவர் 'தாமரை'யில் பணியாற்றிய காலத்தில், இத்தன்மையை மேலும் வளர்த்தெடுத்துள்ளார்.

தமிழ்நாடு வாசகர் பேரவை (தாமரை: மார்ச்.1968), பூம்பொழில் இலக்கிய வட்டம் (நவம்.1968) ஸ்ரீவில்லிப்புத்தூர் இலக்கிய வட்டம் (அக்.1970), பொள்ளாச்சி மக்கள் எழுத்தாளர் மன்றம். (அக் 1970), திருச்சி மக்கள் இலக்கியக் குழு (அக். 1970), இராசபாளையம் இலக்கிய வாசகர் குழு (மே 1970), பரமக்குடி மக்கள் இலக்கிய மன்றம் (மே 1970), தமிழ் இலக்கியப் பேரவை (ஜூன் 1970) சென்னை மக்கள் எழுத்தாளர் சங்கம் (ஜூலை 1971), ஆகிய அமைப்புகள், கலை இலக்கியம் தொடர்பாகச் செயல்பட்ட பதிவுகள் 'தாமரை' இதழ்களில் பதிவாகியுள்ளன. இவ்வமைப்புகளில் 'தாமரை' இதழ்கள் குறித்த விமர்சனக் கூட்டங்கள் நடைபெற்றதை அறிகிறோம். சமகாலத்தில் வெளிவந்த நாவல்கள் குறித்த திறனாய்வுக் கூட்டங்கள் நடைபெற்றதை அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக, திருச்சி மக்கள் இலக்கியக்குழு, ஈழத்து எழுத்தாளர் செ. கணேசலிங்கம் அவர்களோடு நடத்திய உரையாடல் பதிவாகியுள்ளது. மதுரை வாசகர் வட்டத்தில் 'தீபம்' இதழில் தொடராக வெளிவந்த அசோகமித்திரனின் 'கரைந்த நிழல்கள்' குறித்த விமர்சனக் கூட்டம் நடைபெற்றதை அறிகிறோம். இதைப்போல் தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலை அந்த ஆண்டின் சிறந்த நாவலாக இக்குழு பரிந்துரை செய்த செய்தியும் இடம்பெற்றுள்ளது. கோவையில் இயங்கிய பூம்பொழில் -வட்டம், புதுக்கவிதைகள் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கம் நடத்தியிருப்பதை அறிகிறோம். இதனை முல்லை ஆதவன் முன்னின்று நடத்தியுள்ளார்.

மேலே குறித்துள்ள சிறுசிறு அமைப்புகளின் செயல்பாடுகளை தி.க.சி. பதிவு செய்துள்ளார். இவ்வமைப்புகளில் செயல்பட்டவர்கள் பின்னர் இடதுசாரிக் கண்ணோட்டமுடையவர்களாகச் செயல்படத் தொடங்கி-யிருப்பதைக் காண்கிறோம். கலை இலக்கியச் செயல்பாடுகளை மிக விரிந்த தளத்தில், இடதுசாரிப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டவர்களைத் 'தாமரை' இதழின் மூலம் பதிவு செய்த செயல், மிக முக்கியமானது. இவ்வகையான அமைப்புகள், தமிழில் இடதுசாரி மரபு சார்ந்த ஆக்கங்கள் வளருவதற்குத் தளம் அமைத்ததை, நுணுக்கமான விவரங்கள் மற்றும் கள ஆய்வுகள் வழி உறதிப்படுத்தமுடியும். தி.க.சி. என்ற ஆளுமையின் தொலைநோக்காக இதனைக் கருதமுடியும்.

"தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு" (1975) என்று சி.எஸ்.சுப்பிரமணியன் (1910-2011) எழுதியுள்ள சிங்காரவேலர் வாழ்க்கை வரலாற்று நூலில், 1927&1930 ஆம் ஆண்டுகளில் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் நூற்றுக்கணக்கான படிப்பகங்கள், தலைவர்களின் பெயர்களில் தமிழகத்தில் உருவாக்கப்பட்டது குறித்துப் பதிவு செய்துள்ளார். தமிழ்ச் சூழலில் அன்று உருவாகிய சுயமரியாதை இயக்க எழுச்சியையும் 1960களில் உருவான இடதுசாரிக் கண்ணோட்ட ஆக்க இலக்கிய உருவாக்கத்தையும் இணைத்துக் காண வேண்டும். இதன் மூலம் தமிழ்ச் சமூகத்தின் நுண் அலகுகளில் உருவான மாற்றங்களைப் புரிந்து சொல்ல முடியும். அவை மேலும் மேலும் தொடர்ந்தனவா? என்பது வேறு விவாதம். ஆனால் இவ்வகையான கலை இலக்கிய அமைப்புகள் குறித்த பதிவைத் 'தாமரை' இதழ் செய்திருப்பதும் அதற்கு மூலமாக தி.க.சி. இருந்ததும் இன்றைய சூழலில் விதந்து பேச வேண்டிய ஒன்றாகக் கருதவேண்டும்.

பாரதி மீது தி.க.சி. கொண்டிருந்த ஆழமான ஈடுபாட்டின் மூலம், ஜீவா வளர்த்தெடுத்த பாரதி இயலை அதன் அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத் 'தாமரை' இதழ் பாரதி தொடர்பான இதழாகவே வெளிவந்திருப்பதைக் காண்கிறோம். 1950களில் 'சரஸ்வதி' இதழ் மூலம் பாரதி ஆய்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தொ.மு.சி, 'தாமரை' இதழ்களில் பாரதி ஆய்வுகளை மிக விரிவாக மேற்கொண்டிருக்கிறார். பாரதி இயலில் தொ.மு.சியின் தனித்த இடத்தை அவரது "பாரதி: காலமும் கருத்தும்" நூல்வழி அறியமுடியும். அதில் இடம்பெற்றுள்ள பல கட்டுரைகள் 'தாமரை' இதழ்களில், தி.க.சி. பொறுப்பாக இருந்தபோது வெளிவந்தவை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்; செப்.1966 பாரதி மலரில் பாரதி குறித்துக் கட்டுரை எழுதியவர்கள், ரகுநாதன், எஸ்.இராமநாதன், இளம்பாரதி, ஆர். சூடாமணி, நா. பார்த்தசாரதி, பெ.நா. அப்புசாமி உள்ளிட்ட 12 பேர். இது ஒர் எடுத்துக்காட்டு மட்டுமே. இவ்வகையில் ஜீவாவுக்குப் பிறகு பாரதி குறித்த ஆய்வில் மிகப்பெரும் வீச்சை உருவாக்கியது 'தாமரை' என்று சொல்லமுடியும். இதற்கும் மூலமாக தி.க.சி இருந்திருக்கிறார்.

1967 செப். தாமரை பாரதிதாசன் மலராக வெளிவந்தது. இடதுசாரிச் கண்ணோட்டத்தை முதன்மைப்படுத்திப் பேசியவர்கள், பாரதிதாசனை மிகவும் காலம் கழித்தே அங்கீகரித்தார்கள். ஆனால் தி.க.சி. தனது குருநாதர் வல்லிக்கண்ணன் மரபில் பாரதிதாசனைத் தொடர்ந்து கொண்டாடினார். இதன் வெளிப்பாடே பாரதிதாசன் மலர். பாரதிதாசன் குறித்து இம்மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் விதந்து பேசத்தக்கவை. பாரதிதாசனும் இடதுசாரி இயக்கமும் என்று நாம் அடையாளப்படுத்துவோமானால் அதில் முதல் நபராக தி.க.சி.செயல்பட்டிருப்பது வரலாற்றுப் போக்கில் தனித்துப் பேசத்தக்கது.

1967 அக். தாமரை இதழ் 'சோவியத்' யூனியன் பொன்விழா மலராக வெளிவந்தது. சோவியத் படைப்பாளிகள் பலரது ஆக்கங்களை வெளியிட்டதோடு, சோவியத் இலக்கியங்கள் தொடர்பான விமர்சனக் கட்டுரைகள் 'தாமரை' இதழில் இந்தக் காலத்தில் தொடர்ந்து வெளிவந்தன. சோசலிச எதார்த்தவாதம், சோசலிச எதார்த்த விமரிசனவாதம் ஆகிய பல கோட்பாடுகள் குறித்து பல கட்டுரைகள் வெளிவந்தன. தமிழ் இலக்கியம் மற்றும் கலை குறித்து ஆய்வு செய்த சோவியத் ஆய்வாளர்கள் 'தாமரை'யில் அறிமுகப்படுத்தப்பட்டனர். கார்க்கியின் கதைகள் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டன. சோவியத் செய்தித் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்ததன் மூலம் பெற்ற வாய்ப்புக்களை தி.க.சி. 'தாமரை'யில் பதிவு செய்திருக்கிறார். 1950களில் தமிழ்ச் சூழலில் பரவலாக அறியப்பட்டிருந்த சோவியத் கலை இலக்கியம் தொடர்பான கூறுகள் 1960களில் 'தாமரை' மூலமாக நிலைபேறு கொள்வதில் தி.க.சி.யின் இடம் தனித்தது. இத்தன்மை மிக முக்கியமானது.

கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேரத் தொண்டர்களாகவும் தலைவர்களாகவும் பணியாற்றிய பலரின் ஆக்கங்களை 'தாமரை' வெளிக்கொண்டு வந்துள்ளது. பேரா.நா. வானமாமலை, தோழர் சிந்துபூந்துறை சண்முகம், தோழர்கள் ப. மாணிக்கம், மணலி.கந்தசாமி கே. பாலதண்டாயுதம், ஆர். நல்லகண்ணு, கே.பி.கே. தங்கமணி, கே.இராமநாதன் மற்றும் தோழர்கள் தா.பாண்டியன், பொன்னீலன் ஆகியோர் இக்காலத்தில் தாமரையில் தொடர்ந்து எழுதியிருப்பதைக் காண்கிறோம். கட்சியில் நேரடியாகச் செயல்படும்

தோழர்கள் கலை - இலக்கிய மரபு குறித்துக் கொண்டிருந்த கருத்துநிலைகள் பதிவாகியுள்ளது. தோழர் கே.பாலதண்டாயுதம் அவர்களின் தத்துவார்த்த உரையாடல்கள் சார்ந்த கட்டுரைகள் தரம் மிக்கவை. தாமரையில் அக்காலத்தில் அவர் எழுதியவை பின்னர் நூல்வடிவில் வெளிவந்தன. மனிதநேயம் என்பதைத் தத்துவ நிலைப்பாட்டிலிருந்து உரையாடலுக்கு உட்படுத்தியது அவரது எழுத்து.

தமிழ் மாணவர்களாகவும் தமிழாசிரியர்களாகவும் இருந்த பலர் 'தாமரை இதழில் எழுதினர். எழில் முதல்வன், அழகப்பன், முல்லை ஆதவன், தா.வே. வீரசாமி, க.ப. அறவாணன், கி.நாச்சிமுத்து ப.மருதநாயகம், அ.அ.மணவாளன் ஆகிய பிறர் இக்காலங்களில் பல்வேறு கட்டுரைகளைத் 'தாமரை'யில் எழுதினர். நாட்டார் வழக்காற்றியல், கவிதை, பிற துறைச் கட்டுரைகள் அவைகளாகும். 1959-இல் 'தாமரை' தொடங்கியபோதே, தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களைத் தோழர்.ஜீவா தாமரையில் எழுதச் செய்திருப்பதைக் காண்கிறோம். அந்த மரபைத் தி.க.சியும் தொடர்ந்து செயல்படுத்தி வந்திருப்பதைக் காண்கிறோம்.

நவீனப் படைப்பாளிகள் கதை எழுதும் சூழல், மனநிலை ஆகிய பிறவற்றைப் பதிவு செய்யும் 'கதைக்கரு' எனும் தொடரை எழுத்தாளர்களை எழுதச் செய்து வெளியிட்டார். கி.ராஜநாரயணன் தொடங்கி பல எழுத்தாளர்கள் இப்பகுதியில் எழுதியுள்ளனர். இப்பகுதியை தொகுத்து தனியாகக் கொண்டு வரும் தேவை இருக்கிறது. ஈழத்துப் படைப்பாளர்கள் பலரும் தாமரையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். செ.கணேசலிங்கன், கே.டேனியல், ஆழியான், பெணடிக் பாலன், செ.யோகநாதன், மல்லிகை டொமினிக் ஜீவா, நீர்வை. பொன்னையன் ஆகியோருடைய சிறுகதைகள் தாமரையில் வெளிவந்துள்ளன. 'மலரும் அரும்பு' எனும் பகுதியிலும் சிறுகதை மலரிலும் (1967-ஜூலை) இவர்களுடைய கதைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்தில் இடதுசாரிக் கண்ணோட்டம் சார்ந்த ஆக்கங்களை வெளிக்கொண்டு வருவதற்கான சூழல் குறைவாக இருந்தபோது, 'தாமரை' அந்த இடத்தை நிறைவு செய்தது. செ. கணேசலிங்கம், கே.டேனியல் போன்றோர் ஆக்கங்கள் தமிழக இதழ்களில் மிகுதியாக வெளிவந்தன. இதில் 'தாமரை'யின் இடம் தனித்தது.

இவ்விதமான நிகழ்வுக்குப் பின்புலமாகத் தி.க.சி. என்ற மனிதர் இருந்தார் என்பதை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது அதன் முக்கியத்துவத்தை இன்று நாம் உணரமுடிகிறது.

இக்காலத்தில் 'தாமரை' அட்டைப்படங்களில் பெரும்பாலான படைப்பாளிகளின் படங்கள் இடம்பெறத் தொடங்கியது. பல்வேறு சோவியத் படைப்பாளர்கள், பாரதி, பாரதிதாசன் படங்களை வெளியிட்டதை நாம் தனித்த ஒன்றாகக் கருதமுடியாது. ஆனால், கே.சி.எஸ். அருணாச்சலம், கு.அழகிரிசாமி, ஆர். சண்முகசுந்தரம், நா.வானமாமலை, டொமினிக் ஜீவா, வில்லிசைக் கலைஞர் கார்க்கி மற்றும் சிந்துபூந்துறை அண்ணாச்சி ஆகியோரின் படங்கள் இடம்பெற்ற நிகழ்வைத் தனித்துப் பார்க்கும் தேவை இருப்பதாகக் கருகிறேன். சமகாலத்தில் செயல்படுவோரை இவ்வகையில் அங்கீகாரம் செய்யும் மரபு, இடதுசாரி இயக்கங்களில் குறைவாகவே இருந்துள்ளது. சமகாலத்தில் செயல்படுவோரைக் கொண்டாடுவதன் மூலம், இயக்கச் செயல்பாடுகள் வீரியமாக வளர வாய்ப்பு உண்டு. இந்தப் பணியை தி.க.சி. செய்தார். ஆளுமைகளின் ஐம்பது ஆண்டு அகவைக் கொண்டாடும் அட்டைப்பட மரபு விதந்து பேசவேண்டியதாகக் கருதலாம்.

1959இல் வெளிவரத் தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதை மரபில் தனக்கென தனி இடத்தைக் கொண்டு செயல்பட்டது. இந்த மரபின் தொடர்ச்சியாகவும் அதே வேளையில் மாற்றாகவும் செயல்பட்ட பாங்கு தி.க.சி. பொறுப்பாசிரியராக இருந்த 'தாமரை'க்கு உண்டு. நா. காமராசன், மீரா. புவியரசு, சிற்பி, பரிணாமன், கே. முருகையன், கோவேந்தன் ஆகிய பலரின் கவிதைகளை வெளியிட்டதோடு, நா. காமராசன் கவிதைகள் குறித்த விரிவான விமர்சனங்களும் 'தாமரை'யில் வெளிவந்தன. இடதுசாரி கண்ணோட்டமுடைய அறிஞர்களான நா. வானமாலை போன்றோர் புதுக்கவிதை பற்றிக் கொண்டிருந்த விமரிசனங்களை உள்வாங்கியதோடு, அந்த மரபு அடுத்த நிலைக்கு வளருவதற்குத் 'தாமரை' கால்கோள் செய்தது. இக்கவிஞர்கள் குறித்த தி.க.சி.யின் பதிவுகள் சிறப்பாகவே இருந்ததைக் காணமுடிகிறது. நா.காமராசன் ஆக்கங்கள் குறித்துத் தி.க.சி. செய்துள்ள பதிவு வருமாறு:

"பகுத்தறிவு, சோசலிசம் என்கிற அடிப்படை இலட்சியங்கள் எனக்குண்டு. அவற்றைக் கலாபோதையோடு நான் பாடுவேன்" என்று கருப்பு மலர்கள் முன்னுரையில் காமராசன் கூறுகிறார். இதை நான் உளமார வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்தக் 'கலாபோதை' அவரை மாயாவாதம் (Mysticism), அப்பாலைத் தத்துவம் (Meta Physics) என்ற சரிவுப் பாதைகளில் சில வேளை தள்ளி விடுகிறது என்பதையும், இந்தத் தத்துவங்கள் சோசலிசத்திற்கும் பகுத்தறிவுக்கும் முரணானவை என்பதையும் தோழமை உணர்வோடு நான் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்." (தாமரை: ஜூலை.1971).

தி.க.சி. நா.காமராசன் ஆக்கங்களில் நம்பிக்கை வாதமும் நம்பிக்கையின்மை வாதமும் மாறிமாறி வருவதையும் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வகையில் உருவான நா.காமராசன், மீரா, புவியரசு போன்றவர்கள் பின்னர் உருவான வானாம்பாடிக் கவி மரபில் மிகத் தாக்கம் செலுத்தினார்கள். 'எழுத்து' இதழ்க் கவி மரபுக்கு மாற்றான 'வானம்பாடி'க் கவிமரபு உருவானது. இதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததில் இக்கால 'தாமரை'யின் பங்கு மிக முக்கியமானது. நவீன தமிழ்க் கவிதை வரலாற்றில், 'எழுத்து' மரபிற்கு மாற்றான 'வானம்பாடி' உருவாக்க மரபு என்ற வரலாற்றை 'தாமரை' சாத்தியப்படுத்தியிருப்பதை நாம் இதுவரை பதிவு செய்யாமல் விட்டுவிட்டோம். இந்த வரலாற்றுக்கு மூலமாக தி.க.சி. செயல்பட்டிருப்பதை பதிவு செய்யும் கடமை நமக்குண்டு.

கே.டேனியல், வல்லிக்கண்ணன், வீர.வேலுச்சாமி, சார்வாகன், நீல.பத்மநாதன், கி.ராஜநாராயணன், கர்ணன், வை.ரங்கநாதன், செ.கணேசலிங்கம், பெணடிக், அசோகமித்திரன், ஆர்.சூடாமணி, ம.இிராஜராம், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, உ.ரா.வரதராசன், பா.செயப்பிரகாசம், வண்ண நிலவன், ஆழியான், தஞ்சை பிரகாஷ், பொன்னீலன், ம.ந. ராமசாமி, செ.யோகநாதன், சே.இராமசாமி, ஆ.பழனியப்பன், பூமணி, சி.ஆர்.இரவீந்திரன், டி. செல்வராஜ், முத்தானந்தம், அகஸ்தியர், நீர்வை. பொன்னையா, நாகை.ப.ஜீவா எனப் பலரின் சிறுகதைகள் தாமரையில் இக்காலகட்டத்தில் வெளிவந்துள்ளன. இப்பட்டியல் முழுமையானது அன்று. விடுபாடுகள் உள்ளன. தனது முதல் ஆக்கத்தை வெளி-

யிடுபவர்களை 'மலரும் அரும்பு' என்னும் தலைப்பில் அவர்களது கதைகள் வெளியிடப்பட்டன. இப்பகுதியில், இப்பட்டியலில் உள்ள வீர வேலுச்சாமி, உ.ரா.வரதராசன், வண்ண நிலவன், பூமணி, வேந்தன், ப. ஜீவா, வள்ளி, ம.ந.ராமசாமி, ஆகிய பலர் உள்ளனர். இதுவும் முழுமையன்று. முன்னரே கதை எழுதியவர்களோடு முதன் முதலாகக் கதை எழுதியவர்களை 'மலரும் அரும்பு' என்னும் அடைமொழியோடு வெளியிட்ட தாமரையின் செயல்பாடு, தமிழ்ப் படைப்பு வரலாற்றில் மிகவும் விதந்து பேச வேண்டிய ஒன்று. இதற்குப் பின்புலமாக தி.க.சி. இருந்தார். இப்படைப்பாளிகள் யார்? என்ற உரையாடல் முக்கியமானது.

1930கள் தொடங்கி தமிழில் உருவாகி வந்த ஆக்க இலக்கிய வாணர்கள் என்போர், ஆங்கில மொழி வழி வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள், அதனையே பழக்கமாகவும் கொண்டிருந்தனர். தமிழ்ப்புனைவுலகம் உருப்பெற்ற சூழலில், அத்தன்மையின் தாக்கம் தவிர்க்க முடியாத ஒன்று. இயல்பான நடைமுறையும்கூட. இந்தத் தொடர்ச்சியில்தான் இந்தியாவில் உள்ள பிறமொழி இலக்கியங்கள், ஆங்கிலமொழி இலக்கியங்கள், சோவியத், சீனம் போன்ற நாடுகளிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்ட இலக்கியங்கள் தமிழ்ச்சூழலில் வாசிக்கப்பட்டன. தமிழில் உருவான புதிய புனைகதையாளர்களும் இந்தப் பின்புலத்தோடுதான் உருவானார்கள். 'தாமரை' அறிமுகப்படுத்திய படைப்பாளிகள் மேற்குறித்த நிலையில் முற்றிலும் வேறானவர்கள். ஆங்கிலமொழி வாசிப்பதற்கான வாய்ப்போ, பயிற்சியோ இவர்களுக்குக் கிடைக்கவில்லை. புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, கி.ராஜநாராயணன் மரபுசார்ந்த கதைகளை வாசித்தவர்கள் இவர்கள். முதல் தலைமுறை எழுத்துப்பயிற்சி பெற்றவர்கள். குக்கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய ஆக்கங்கள், புதுமைப்பித்தன் மரபின் தொடர்ச்சியாக உருப்பெற்றவை. இதில் 'தாமரை' முன்னத்தி ஏர்ப்பிடித்தது. இதற்கு மூலமாக இருந்தவர் தி.க.சி.. தி.க.சி.யின் இந்தப் பங்களிப்பைத் தமிழ்ச்சமூகம் அங்கீகரித்துள்ளதா? என்ற கேள்வியை எழுப்ப முடியும். தமிழ்ப் படைப்புலக வரலாற்றில் தி.க.சி.க்குத் தனித்த இடமிருக்கிறது. தமிழ்ப்புனைவு மரபை மடைமாற்றம் செய்த மரபு இதுவாகும். இந்த மரபே பின்னர் பெரும் மரபாக வடிவம் பெற்றுள்ளது.

இந்தப் பின்புலத்தில் தி.க.சி என்னும் ஆளுமை தமிழ்ப் புனைவு உலகை ஆல்போல் தழைக்கச் செய்தாலும் ஆலமரத்தின் கீழுள்ள விதையாக அவர் மறைந்து, ஒதுங்கி, தன்னை முன்னிலைப்படுத்தாத, அவரது அற மரபை தமிழ்ச்சமூகம் கொண்டாட வேண்டும். இத்தன்மை குறித்து தி.க.சி. அவர்களின் பதிவு பின்வருமாறு.

"நான் சோவியத் செய்தித்துறை ஆசிரியர் குழுவில் ஒருவனாகப் பணியேற்றேன். இங்கு பணியாற்றிய காலத்திலேயே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கலை - இலக்கிய இதழான ஜீவாவின் 'தாமரை'யில் 1965&1972 வரையில் பொதுப்பதிப்பாசிரியனாக கடமையாற்றும் பேறும் எனக்குக் கிடைத்தது. இந்த மகத்தான பொறுப்பை எனக்களித்த கட்சித் தலைமைக்கு என்னுடைய நன்றி என்றும் உரியது. 'தாமரையுகம்' என்ற பெயரில், தாமரையின் சாதனைகள் பற்றியும் முற்போக்கு கலை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு பற்றியும் ஒரு தனி நூலே எழுதலாம். அந்தப் பொறுப்பை இலக்கிய வளர்ச்சியைப் பதிவுசெய்யும் ஆய்வாளர்கள் வசம் விட்டுவிடுகிறேன்." (தி.க.சி.டைரி குறிப்புகள். 18:2014).

தி.க.சி.யின் இந்த வேண்டுகோளை நிறைவேற்றும் பொறுப்பு நமக்குண்டு. அன்றைய சூழலில் எழுத்து (சி.சு.செல்லப்பா) 'தீபம்' (1965- நா.பார்த்தசாரதி) இலக்கியவட்டம் (1964. க.நா.சு) 'கணையாழி' (1965) கண்ணதாசன் (1968) ஆகிய பல இதழ்கள் வெளிவந்தன. இதே காலத்தில் தி.க.சி.யின் 'தாமரை'யும் வெளிவந்தது. மேற்குறித்த இதழ்களிலிருந்து 'தாமரை' எங்கே வேறுபட்டு எங்கே ஒன்றிணைந்து தமிழ்ச் சூழலில் செயல்பட்டது. அத்தன்மை எவ்வகையில் இடதுசாரிக் கருத்துநிலை மரபை உருவாக்கியது என்ற உரையாடலை நிகழ்த்துவது அவசியம். அதில் தி.க.சி என்னும் மனிதன் எவ்வாறு செயல்பட்டு இருக்கிறார் என்ற புரிதல் அவசியம். 'தாமரை'யின் ஒன்பதாம் ஆண்டு நிறைவில் அதில் எழுதப்பட்ட தலையங்கம் பின்வருமாறு அமைகிறது.

"புதிய சிந்தனைகள், புதிய வடிவங்கள், புதிய முயற்சிகள் அத்தனைக்கும் தாமரை இடம் கொடுத்துள்ளது. இலக்கியத் தரம் மிக்க கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஆராய்ச்சிகள் முதலிய பல்சுவைப்

படைப்புகளையும் தாமரை வாசகர்களுக்கு ஈந்துள்ளது. தரமுள்ள எழுத்துக்கும் தமிழ் இலக்கிய உலகில் இடம் உண்டு என்ற நம்பிக்கையை படைப்பாளிகளிடையில் தோற்றுவித்ததுதான் தனது பெரும் கடமையாக தாமரை எண்ணுகிறது."

ஜூலை 1968இல் இந்தப் பதிவை தி.க.சி. செய்திருக்கலாம். இந்தத் தன்மை முழுமையாகத் 'தாமரை'யில் நடமுறைப்படுத்தப்பட்டதை தி.க.சி எனும் ஆளுமையின் அடையாளமாகக் கருத இயலும்.

'தாமரை'யில் இக்காலத்தில் தி.க.சி எழுதியது குறைவு. எழுதச் செய்யும் பணியே அவரது நோக்கமாக இருந்தது. மேலே 1941-1964 காலத்தின் தி.க.சி மற்றும் 1965&1972 கால தி.க.சியை நாம் மேலே உரையாடலுக்கு உட்படுத்தினோம். 1972-2014 என்ற பிற்கால அவரது வாழ்க்கைக்குறித்து எழுதுவதற்காகத் தரவுகளைத் தேட வேண்டியுள்ளது. விரிவான தேடலில் அதனைப் பதிவு செய்யவேண்டும். தரவுகளின்றி எப்படிப் பதிவு செய்வது? ஆனால் இந்தக் காலம் குறித்து தி.க.சி கூறியுள்ள பதிவை இங்கு நினைவுப்படுத்திக்கொள்ளலாம். அப்பகுதி வருமாறு:

"இந்தக் கால் நூற்றாண்டில் வெளிவந்த 'தீபம்', 'கணையாழி', 'கண்ணதாசன்', சி.சு.செல்லப்பாவின் 'எழுத்து', க.நா.சு.வின் 'இலக்கிய வட்டம்', கோமலின் 'சுபமங்களா', 'செம்மலர்', கோவையிலிருந்து வெளிவந்த 'வானம்பாடி' முதலிய இதழ்களின் வளர்ச்சிக்கும் எனது பங்களிப்பை செலுத்தியதில் நான் மிகுந்த மனநிறைவடைகிறேன். அதேபோல் மதிப்பிற்குரிய தமிழ் இலக்கிய அன்பர்கள் ப.லட்சுமணன் மற்றும் பாரதி நடத்தி வந்த 'இலக்கியச் சிந்தனை' அமைப்பின் மாதாந்திர கூட்டங்களில் எழுத்தாளர் என்.ஆர்.தாசன் போன்ற நண்பர்களுடன் நான் பங்கேற்றதுண்டு. இந்த வருடங்களில் தான் எனது தேடல்களும் படைப்பாற்றல்களும் பகிர்தல்களும் சிகரத்தை நோக்கி சென்றன. தமிழ்ப்படைப்பாளிகள், பதிப்பாளர்கள், ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள் ஆகியோரின் பேரன்பையும் அங்கீகாரத்தையும் நான் பெற்றேன்". (தி.க.சி.நாட்குறிப்புகள் 18-10-2014).

இந்த பதிவு மூலம் ஓரளவு இந்த காலத்தின் தி.க.சியைப் புரிந்துகொள்ளலாம். தமிழ்த் தேசிய மரபிலிருந்து இந்திய தேசிய மரபை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் தமது இறுதிக் காலங்களில் அவர்

பதிவு செய்துள்ளார். இது தொடர்பான தரவுகளைக் கொண்டு இக்கட்டுரையை வேறொரு சந்தர்ப்பத்தில் விரித்து எழுத வேண்டும். தி.க.சி.என்னும் ஆளுமை தமிழ்ச் சமூக வரலாற்றில் என்றும் பேசப்படும் ஆளுமை என்பதே அவருக்கான அடையாளமாகப் பதிவு செய்வோம். நூறு ஆண்டுகள் நிறைவுபெறும் தி.க.சி.நம்மோடு வாழ்கிறார்.

இக்கட்டுரை எழுத உதவிய தரவுகள்:

- **தாமரை இதழ்கள். 1965-1972. 'கல்மரம்' நூலகச் சேகரிப்பு.**

• முத்துக்குமார்.வே.(தொகுப்பு) தி.க.சியின் நாட்குறிப்புகள். சந்தியா பதிப்பகம். சென்னை.83.

குறிப்பு :

தி.க.சி. 25.03.2014 இல் மறைந்தபோது, பனுவல் புத்தக அரங்கில் நடந்த அஞ்சல் உரையின் திருத்தப்பட்ட வடிவம் இக்கட்டுரை. பத்தாண்டுகள் கழித்து தி.க.சி. நூற்றாண்டை நோக்கியப் பதிவாகச் செய்ய மூலமாக அமைந்த தோழர் கண.குறிஞ்சி அவர்களுக்கும், தி.க.சி நூல்களை வெளியிட்ட சந்தியா நடராசன் அவர்களுக்கும், தி.க.சி. ஆக்கங்களைத் தொடர்ந்து பதிப்பித்துக் கொண்டுவரும் வே. முத்துக்குமார் அவர்களுக்கும், இரங்கல் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த பனுவல் அமுதரசன் மற்றும் சிவ.செந்தில்நாதன் ஆகியோருக்கும் நன்றி. தி.க.சி. நூற்றாண்டைக் கொண்டாட இப்பதிவு மூலமாக அமையட்டும். நன்றி.

- பேராசிரியர் வீ.அரசு

kalki online

தி.க.சிவசங்கரன் - தி.க.சி எனும் பேரன்புப் பெருந்தகை!

தி.க.சிவசங்கரன் தி.க.சி நூற்றாண்டு (1925-2025)

வேலாயுத முத்துக்குமார்

https://kalkionline.com/magazines/kalki/thika-sivasankaran-centenary-year-writer-literary-activist-and-thinker



தாமிரபரணி தீரத்தில் பிறந்த இலக்கிய கர்த்தாக்கள் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியவை. அவர்களில் குறிப்பிடத்தக்கவராக எழுத்தாளரும், இலக்கிய விமர்சகரும், மூத்த இலக்கியச் செயற்பாட்டாளருமான தி.க.சி என்கிற தி.க.சிவசங்கரனை சொல்லலாம். இலக்கியத்துறையின் பொதுவான முற்போக்கு வளர்ச்சிக்கு சகல சக்திகளையும் உள்ளடக்கி நிற்கும் ஓர் இயக்கப் போக்கே இன்றைய வரலாற்றுச் சூழலில் பொருத்தமானது என்கிற சிந்தனையைக் கொண்டிருந்த தி.க.சி.யின் நூற்றாண்டு மார்ச் 30, 2025 அன்று நிறைவு பெற்றது.

தி.க.சி.யுடன் உரையாடுவது ஓர் ஆனந்த அனுபவம். அப்போதுதான் அறிமுகமான புதிய மனிதரிடத்தில் கூட, எந்த விகல்பமுமின்றி நெடுநாட்கள் பழகிய மனிதரிடத்தில் பேசுவது போன்று உரையாடுவது அவரின் தனித்த இயல்பு. ஒரு குறிப்பிட்ட நிகழ்வைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போதே, அந்நிகழ்வு சார்ந்த வேறொரு ஞாபகக்கூறல், அஞ்ஞாபகக்கூறல் தொடர்புடைய மற்றொரு சம்பவம் எனத் தங்குதடையின்றி, தொய்வின்றி, சரளமாக, உற்சாகமாக உரையாடுவது அவரின் தொனி. அவருடன் உரையாடித் திரும்புவர்களிடத்தில் தன்னிகரில்லாத உற்சாகம் தொற்றிக் கொள்ளும். கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும் நிரம்பியவர்கள் கூட அவரை உணர்வுபூர்வமாக

நேசித்ததை, அவருடைய அசாதாரண ஆளுமையின் தனித்த வெளிப்பாடாக குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஒருமுறை தி.க.சி.யை சந்திக்கச் சென்ற போது, கையடக்க டிரான்ஸ்சிஸ்டரில், அன்றைய தின இரவு 7.15 மணி செய்தியை கேட்டுக் கொண்டிருந்தார். சைகையால் மடக்கு நாற்காலியை எடுத்துப் போட்டு உட்காரச் சொல்லி சில இதழ்களை வாசிக்கக் கொடுத்தார். சில நிமிட இடைவெளியில் செய்திகள் நிறைவுற்ற பிறகு, டிரான்ஸ்சிஸ்டரை அணைத்து விட்டு என்னிடம், 'புதுமலர் தொட்டுச் செல்லும் காற்றை நிறுத்து'ன்னு ஒரு திரைப்பாடல் உள்ளதே, அது எந்தப் படத்தில் இடம்பெற்றதென கேட்டார். 'செய்தி ஒலிப்பரப்புக்கு முன்னாடி இந்தப் பாட்டை போட்டாங்க. இந்தப் பாட்டு எனக்குப் பிடிச்சிருந்தது. இலங்கையில் நடக்குற யுத்தம் நிறுத்து, எனக்கு காதல் வந்ததே..'ன்னு ஒரு வரி வந்துச்சு. இதுக்கே இந்தப் பாட்டுக்கு நூறு மார்க் கொடுக்கலாம்..' என்றார்.

தி.க.சி.யின் 90-வது வயதில், அவர் இயற்கை எய்துவதற்கு ஆறேழு நாட்களுக்கு முன்பு அவரது கைகளில் கிடைக்கப்பெற்ற 'தி.க.சி. நாட்குறிப்புகள்' நூலின் முன்னுரையில் ஓர் இடத்தில் 'தனிமையை தான் விரும்புவதாகவும், அதை ஒரு வரமாக கருதி, ஏகாந்தமாக அனுபவிப்பதாகவும்' சொல்லியிருப்பார். நூலின் உள்ளே ஏப்ரல் 13,1948-ஆம் தேதியிட்ட நாட்குறிப்புப் பகுதியில் 'தனிமை மனிதனைக் கொன்றுவிடும் என்பது என் முடிவு. மனிதன் கூட்டாக வாழும் பிராணியல்லவா..?' எனக் குறிப்பிட்டிருப்பார். இம்முரண்பாட்டை பற்றி அவரிடம் நான் குறிப்பிட்டுச் சொல்லிக் கேட்ட போது, 'கலைஞன் என்பவன் முரண்பட வேண்டும். இந்த தொண்ணூறுல தனிமை எனக்கு ஏகாந்தமாயிருக்கு. ஆனா அந்த இருபத்தியோரு வயசுல தனிமை கொடுமையா இருந்திருக்கு. இந்த முரண்பாடு தானே ஒரு கலைஞனை பக்குவப்படுத்துகிறது...' என்றார்.

தனது இந்த நாட்குறிப்பு நூலுக்கு முன்னுரை எழுதுவதற்கு அவர் மிகுந்த பிரயத்தனப்பட்டார். ஏதேனும் ஓர் உள்ளுணர்வு அவருக்குள்

இருந்திருக்கும் போல. மூன்று கட்டங்களாக அமர்ந்து அவர் சொல்ல சொல்ல அந்த நூலுக்கு முன்னுரை எழுதியது எனக்கொரு பேரனுபவம். எழுதுகின்ற சமயத்தில் தனது ஆரம்ப கால வாழ்க்கை சம்பவங்களை நினைவு கூர்கின்ற போது உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் மல்கச் சொன்னார். இம்முன்னுரைக்கு முதலில் அவர் வைத்திருந்த தலைப்பு, 'விட்டு விடுதலையாகி..'. பிறகென்ன நினைத்தாரோ தெரியவில்லை, 'தேடல்-படைத்தல்-பகிர்தல்' எனத் தலைப்பை மாற்றச் சொன்னார். 'நம்ம சமாச்சாரம் ஊசிப் போகாதது. என்னைக்கும் அதுக்கொரு வேல்யூ உண்டு' என்றார். இந்நூல் வெளிவந்து பெரும்பாலானவர்களின் கவனத்திற்கு உள்ளான போது அவர் சொன்னதையே நினைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

'தாமரை' இதழாசிரியராக அவர் பணியாற்றிய சமயத்தில், தி.ஜானகிராமன் அவரை சந்திக்க வந்திருந்ததைப் பற்றியும், அவருடனான உரையாடல்கள் குறித்தும் நினைவுபடுத்தி ஒரு முறை நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். தி.ஜ.ரா.வின் 'அம்மா வந்தாள்' நாவல் வெளிவந்த சமயத்தில் மிகுந்த எதிர்ப்புக்கிடையில் அவரது புகைப்படத்தை 'தாமரை' இதழின் அட்டைப்படத்தில் வெளியிட்டதைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார். ரொம்ப சுவாரஸ்யமான உரையாடல் அது.

அதனை மையப்படுத்தி, அவரது பன்நெடுங்கால இலக்கிய வாழ்வு குறித்தும், இலக்கிய நண்பர்கள் குறித்தும் ஒரு நூல் எழுதலாமே என்கிற என்னுடைய விருப்பத்தை அவரிடம் சொன்னேன். 'அதை அப்புறம் பார்த்துக்கலாம், விடுங்க..' என்றார். இந்நூல் குறித்து நான் தொடர்ந்து அவரை வற்புறுத்தி வரவே, ஒருநாள் இரவு என்னை வரச் சொன்னார். ஒரு புத்தக வெளியீட்டு விழா அழைப்பிதழின் பின்பக்கத்தில் தான் எழுத நினைக்கின்ற இருபத்தியோரு இலக்கிய நண்பர்களின் பெயர் பட்டியலை குறித்து வைத்திருந்ததை அப்படியே வாசித்துக் காண்பித்தார். 'தி.க.சி.யாகிய நான்..' அல்லது 'நான் தி.க.சி..' என்ற தலைப்பில் இப்புத்தகம் எழுதப்பட்டால் நன்றாக இருக்குமென என்னுடைய விருப்பத்தை அவரிடம் தெரிவித்தேன். தலைப்பில் அவருக்கு உடன்பாடில்லை. 'நான்' என்கிற தனிப்பட்ட சொல்லை அவர் வெறுத்தார். 'தலைப்பை அப்புறம்

பாத்துக்கலாம். உங்களுக்கு நேரம் அனுமதித்தால் மாதம் இரண்டு நாட்கள் உட்கார்ந்து எழுதி விடுவோம்..' என்றார்.

2013ஆம் ஆண்டு ஏப்ரல் 30ந் தேதி இரவு என்னை அலைபேசியில் அழைத்து முன்னர் சொன்ன நூல் குறித்து எழுதுவதற்கு வரச் சொன்னார். மறுநாள் மே 1, 2013 அன்று அவரது வீட்டிற்கு சென்றேன்...

'இன்று மே 1. எனக்குப் பிடித்தமான தொழிலாளர் தினம். நூலுக்கான முன்னுரையை இன்று தொடங்கி விடுவோம்..' எனச் சொல்லி, 'வாக்குமூலம்' என்ற தலைப்பில் அம்முன்னுரையை எழுதச் சொன்னார். அவர் சொல்லச் சொல்ல எழுதிய நான்கு பத்தியோடு அப்படியே முற்றுப் பெறாமல் நிற்கிறது அந்த முன்னுரை. பின் தொடர்ந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் இந்நூலினை அவர் எழுதவில்லை. இந்நூல் முழுமை பெற்றிருந்தால் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு நல்ல, அரிய வரவாக அமைந்திருக்கும்.



தி.க.சி.யைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அந்த 90வது வயதிலும் அவரிடமிருந்த திடநம்பிக்கையையே எண்ணிக் கொள்ளத் தோன்றும். அவரது வளவு வீட்டின் தெற்கு மூலையிலிருந்த அந்த

[illegible] இருந்து கொண்டு இந்தப் பிரபஞ்சத்தை இயக்க முடியும் என அவர் திடமாக நம்பினார்.

ஒருமுறை அவர் சொன்னார். "எப்போதுமே, நான் ஒரு Optimist. ஒளியில் நம்பிக்கை கொண்டவன். எதிர்காலம் இருளடைந்து கிடப்பதாக நான் என்றைக்குமே சொன்னதில்லை. 'தமிழன்னை மலடி அல்ல' என்று ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறேன்."

பல்வேறு சந்தர்ப்பங்களில் இடையறாத உரையாடலை தனக்கே உரித்தான உடல்மொழியில் அவர் வெளிப்படுத்தி வந்த கணங்களிலெல்லாம், மரணமெல்லாம் ஒருபோதும் அவரை அண்டவே அண்டாது என்று நான் எண்ணிக் கொண்டதுண்டு. அவரது பேச்சிலும், செயலிலும் எப்போதும் ஒரு கனிந்த முதுமை இருக்கும்.

ஓர் மூத்த படைப்பாளி - வாசகன் என்கிற நிலையைத் தாண்டி, என்னளவில் எந்த மனத்தடையுமின்றி நினைத்ததை பகிர்வதற்குரிய மனிதராகவே அவர் இருந்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் அவரிடம் பேசி விட்டு திரும்புகையில், வாசல் வரை வந்து வழியனுப்புகிற வழக்கத்தையுடைய அவர், அந்தச் சொற்றொடரை கேட்பார்.. 'அய்யா.. பேச வந்த விஷயம் வேறெதையும் பேச மறந்திரலையே...?'

பேரன்புப் பெருந்தகை அவர். (மார்ச் 30, 2025 - தி.க.சி நூற்றாண்டு நிறைவு)

இந்து தமிழ் திசை

தி.க.சிவசங்கரன்

https://www.hindutamil.in/news/blogs/222259-10.html

இலக்கியத் திறனாய்வாளர், படைப்பாளி

முற்போக்கு இலக்கியத் திறனாய்வாளரும் சிறந்த படைப்பாளியுமான தி.க.சிவசங்கரன் (Thi.Ka.Sivasankaran) பிறந்த தினம் இன்று (மார்ச் 30). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* திருநெல்வேலியில் பிறந்தவர் (1925). 6 வயதில் தந்தையையும் 7 வயதில் தாயையும் இழந்தார். தாத்தாவிடம் வளர்ந்தார். சிறுவயது முதலே வாசிப்பில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். காந்திய நூல்கள் இவரை மிகவும் கவர்ந்தன.

* 15 வயதில் தன் வயதுடைய சிறுவர் களுடன் இணைந்து 'நெல்லை வாலிபர் சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். இந்த அமைப்பின் சார்பாக 'இளந்தமிழன்' என்ற கையெழுத்துப் பிரதி தொடங்கப் பட்டது. தங்கள் இதழுக்கு எழுதிக்கொடுக்கும்படி வல்லிக்கண்ண னிடம் இந்த இளைஞர்கள் கேட்டுக்கொண்டனர். அவரும் இதில் எழுதிவந்தார்.

* அப்போது ஒரு கதையை எழுதி வல்லிக்கண்ணனிடம் இவர் கொடுக்க, அது 'பிரசண்ட விகட'னில் பிரசுரமாக அவர் ஏற்பாடு செய்தார். அதன்பிறகு கதை, கவிதை என நிறைய எழுத ஆரம்பித்தார். 1945-ல் வங்கி ஊழியராக வேலைக்குச் சேர்ந்தார்.

* பல்வேறு இலக்கிய அமைப்புகள், இலக்கிய ஆர்வலர்களோடு இணைந்து இலக்கியப் பணிகளை ஆற்றிவந்தார். பாரதியாரைத் தனது ஆதர்ச குருவாக வரித்துக்கொண்டு இலக்கிய வாழ்வைத் தொடங்கினார்.

* சிறந்த மொழிபெயர்ப்பாளரான இவர், பிரபல இலக்கியவாதி ஜார்ஜி குலியா எழுதிய நீண்ட நாவலை, 'வசந்தகாலத்தில்' என்று தமிழில் மொழிபெயர்த்துள்ளார். பின்னர் இதழ்களில் விமர்சனங்கள் எழுதத் தொடங்கினார். தலித்தியம், பெண்ணியம், தமிழியம், சூழலி யல், மார்க்சியம் உள்ளிட்ட முற்போக்குக் கொள்கைகள் சார்ந்தே இவரது இலக்கிய மதிப்பீடுகளும் செயல்பாடுகளும் இருந்தன.

* 1965-ல் தன் வங்கிப் பணியை விட்டுவிட்டு, சோவியத் கலாச்சார மையத்தில் செய்தித் துறையின் ஆசிரியர் குழுவில் இணைந்தார். சோவியத் செய்திக் கட்டுரைகளை வேகமாகவும் சரளமாகவும் மொழிபெயர்ப்பார்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 'தாமரை' இலக்கிய இதழில் பொறுப்பாசிரியராகப் பணியாற்றினார்.

* எழுத்தாளர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரபலங் கள், பலதரப்பட்ட வாசகர்கள் எனப் பரந்த நட்பு வட்டாரத்தைக் கொண்டிருந்தார். அவர்களால் 'தி.க.சி.' என அழைக்கப்பட்டார். தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் இலக்கியம், இலக்கியவாதிகள், இலக்கிய அமைப்புகள் குறித்து உணர்வுபூர்வமாகவும் உற்சாக மாகவும் பேசுவார்.

* தமிழில் வெளியாகும் பெரும்பாலான இலக்கியப் படைப்புகளை வாசித்து, அவற்றை எழுதிய ஆசிரியர்களைத் தொடர்புகொண்டு பாராட்டும் வழக்கம் கொண்டிருந்தார். இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கு அஞ்சலட்டையில் கடிதம் எழுதுவார். பல புதிய எழுத்தாளர்கள் தோன்றக் காரணமாக இருந்தார்.

* மாதாந்தர, வாராந்தர பத்திரிகைகள், செய்தித்தாள்கள் உட்பட ஏராளமான நூல்களையும் வாசித்தார். கதை, கவிதை, நாடகம், இலக்கிய விமர்சனம், திறனாய்வு என இலக்கியத்தின் பல்வேறு களங்களில் முத்திரை பதித்தார். மதிப்புரைகள், கட்டுரைகள் ஆகியவை 'தி.க.சி. கட்டுரைகள்' என இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. இவற்றுக்கு 2000-ம் ஆண்டில் சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.

OBJ இவரது வாழ்க்கை, எழுத்துப் பணிகள் குறித்து சென்னையில் இயங்கிவரும் தமிழ்க்கூடம் என்ற கலை - இலக்கிய அமைப்பு 2007-ம் ஆண்டு ஒரு ஆவணப்படம் தயாரித்தது. படைப்பாளர், இதழாசிரியர், மொழிபெயர்ப்பாளர், இலக்கிய, திரைப்பட விமர்சகர் எனப் பன்முகப் பரிமாணம் கொண்டிருந்த தி.க.சிவசங்கரன் 2014-ம் ஆண்டு 89-வது வயதில் மறைந்தார்.

தி க சிவசங்கரன் என்ற தி க சி

வண்ணநிலவன் மார்ச் 31, 2014

https://solvanam.com/2014/03/31/%e0%ae%a4%e0%ae%bf-%e0%ae%95-%e0%ae%9a%e0%ae%bf%e0%ae%b5%e0%ae%9a%e0%ae%99%e0%af%8d%e0%ae%95%e0%ae%b0%e0%ae%a9%e0%af%8d-%e0%ae%8e%e0%ae%a9%e0%af%8d%e0%ae%b1-%e0%ae%a4%e0%ae%bf-%e0%ae%95-%e0%ae%9a/

தி க சி யின் மரணம் அவர் நினைத்தபடியே நடந்தது என்றால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் இதுதான் உண்மை. தனது மரணம் சமீபித்துவிட்டது என்பதை அவர் அறிந்திருந்தார்கள். 29.12.13 அன்று மதியம் 12 மணி சுமாருக்கு நானும் என் மனைவியும் திருநெல்வேலி சென்றிருந்த போது, அவர்களது 23, சுடலைமாடன் கோவில் தெரு வீட்டில் சந்தித்தோம். பழங்கள் (இனிப்பு கூடாது என்பதால்) காரவகைகளுடன் சென்றிருந்தோம். எதையோ படித்துக் கொண்டிருந்த தி.க.சி. எங்களைப் பார்த்ததும் சந்தோஷத்துடன் “வாங்கய்யா” என்று வரவேற்றார்கள். மிகவும் மெலிந்திருந்தார்கள் என்றாலும் முகத்தில் அயர்ச்சியோ சோர்வோ இல்லை.

என் கையில் கையினால் எழுதப்பட்ட ஒரு காகிதத்தைக் கொடுத்தார்கள். “படியுங்க” என்றார்கள். அந்த பேப்பரில் “இதயம் பலவீனமாக இருக்கிறது. அதனால் சத்தமாகப் பேசவேண்டாம். கடலைமாவு பலகாரங்கள் கொடுக்கவேண்டாம். அதிக நேரம் பேசவைக்காதீர்கள்” என்றெல்லாம் எழுதப்பட்டிருந்தது.

படித்துவிட்டு நிமிர்ந்த என்னைப் பார்த்து சிரித்தார்கள். “டாக்டரோட யோசனைகள்” என்றார்கள். என் மனைவி கையில் வைத்திருந்த ப்லாஸ்டிக் பையைப் பார்த்து “எதுக்கு இதெல்லாம். ஒண்ணும் சாப்பிடத்தான் கூடாதே” என்று கூறிவிட்டு வீட்டில் எல்லோரையும் நலம் விசாரித்தார்கள். சுவரோரத்தில் மெஸ்ஸிலிருந்து வந்த மதிய சாப்பாடு இருந்தது. மேஜை மீதும் தரையிலும் பத்திரிகைகள், புத்தகங்கள்.

காது மந்தமாகி வெகுகாலமாகி விட்டது. நாம் பேசுவதை வாயசைவை வைத்துதான் புரிந்து கொள்வார்கள். நான் அவர்கள் பேசுவதை மட்டுமே

கேட்டுக்கொண்டிருந்தேன். நான் குறுக்கிட்டு ஏதாவது பேசினால் அவர்களுக்குக் கேட்பது சிரமமாக இருக்கும் என்பதால் பொதுவாக நான் அவர்களிடம் தேவையிருந்தால் தவிர பேசுவதில்லை. அன்றும் அப்படித்தான் நடந்தது.

இடையே என் மனைவி நாங்கள் வாங்கி வந்திருந்த ஆப்பிள்கள் காரவகைகளை ஒருபுறமாக ஒதுக்கி வைத்துவிட்டு "வாழைப்பழமாவது வாங்கி வருகிறேன். நீங்கள் பேசிக்கொண்டு இருங்கள்" என்று சென்றுவிட்டாள். அவள் வாழைப்பழங்களை வாங்கிக்கொண்டு வந்ததைப் பார்த்து, "எதுக்கும்மா இது? ...இதற்காகவா போனே?" என்றார்கள். நாங்கள் அவர்களுக்கு அதிகம் தொந்திரவு கொடுக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டு விடைபெற எழுந்தோம். அப்போதுதான் அதைச் சொன்னார்கள் தி.க.சி.

"ராமசந்திரன்...மார்ச் முப்பதிலே எனக்கு 90 வயசாகுது. கல்லறையிலே ஒரு காலை எடுத்து வச்சுட்டேன். பிழைத்துக் கிடந்தால் அன்னைக்குப் பார்ப்போம்..." என்றார்கள்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க...அதெல்லாம் இருப்பீங்க..." என்றேன். ஆனால் நான் சொன்னது பலிக்கவில்லை. அவர்களே அவர்களது மரணத்தை உணர்ந்து சொன்னதுதான் கடைசியில் பலித்தது. அந்த மார்ச் முப்பதை நெருங்கிக் கொண்டிருக்கும்போதே காலமாகி விட்டார்கள்.



திருநெல்வேலி டவுனில் நான் ஆறாவது படிக்கிற காலத்திலேயே தி.க.சி வீடு இருக்கிற அந்த வளைவு(காம்பவுண்ட்)க்குச் சென்றிருக்கிறேன். தி.க.சி வீட்டுக்கு எதிர்வீடுதான் தி.க.சி.யுடைய சிற்றப்பா வீடு. தி.க.சியின் சிற்றப்பா மகன் சிவசங்கரன் என்னுடன் அதே ஆறாம் வகுப்பில்தான் படித்தான் அவனைப் பார்ப்பதற்காக 1958-59ல் அவன் வீட்டுக்கு அடிக்கடி செல்வேன். அப்போது எதிர்வீட்டில்தான் தி.க.சி. இருக்கிறார்கள், தி.க.சி தமிழின் முக்கியமான விமர்சகர் என்பதெல்லாம் தெரியாது.

ஆனால் அதே 23, சுடலைமாடன் கோவில் தெரு வீட்டுடன், தி.க.சி வீட்டுடன், பூரவ்ஜென்ம பந்தம் போல இன்றளவும் எனது உறவு தொடர்கிறது. நான் படித்த அதே தெற்குப் புதுத்தெருப் பள்ளியில்தான் தி.க.சி.யின் இரண்டாவது புதல்வரான கல்யாணசுந்தரம் என்கிற வண்ணதாசனும், எனக்கு மேலே இரண்டு வகுப்புகள் தாண்டிப் படித்தார் அப்போதெல்லாம் வண்ணதாசனுடன் பழக்கம் ஏற்படவில்லை.

1970-ல் “தீபம்” பத்திரிகையில் எழுதுகிற வண்ணதாசன்தான், என் பால்யகால நண்பன் சிவசங்கரன் வீட்டுக்கு எதிர்வீட்டுக்காரர் என்பது தெரிய வந்தது. ஒரு வாசகனாகத்தான் வண்ணதாசனை 1970 ஜூனில் சந்தித்தேன். அப்போதுதான் தாமரையின் பொறுப்பாசிரியரும், சென்னை சோவியத்லாண்ட் பத்திரிகையில் பணியாற்றுபவருமான தி.க.சி.தான் வண்ணதாசனின் தந்தை என்பதும் தெரியவந்தது.

நான் முதல்முதலாக தி.க.சி.யை நேரில் சந்தித்தது வண்ணதாசனின் தங்கை ஜெயாவின் திருமணத்தின்போதுதான். அதற்கு முன்பே தி.க.சி தாமரையில் எனது ‘யுகதர்மம்’ என்ற சிறுகதையை வெளியிட்டு, கதையைப் பற்றிச கடிதமும் எழுதியிருந்தார்கள். தன் மகள் திருமண வீட்டில் என்னை திருமணத்திற்கு வந்திருந்த கி.ராஜநாராயணன், ராஜபாளையம் எழுத்தாளர்கள் எல்லோரிடமும் சந்தோஷத்துடன் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

தி.க.சி. “தாமரை”யின் பொறுப்பாசிரியராக சுமார் ஐந்தாண்டுகாலம் செயல்பட்டார்கள். தி.க.சி.யை விமர்சகராகத்தான் உலகம் அறியும். ஆனால் தி.க.சி ஒரு அபாரமான கலாரசிகர். நல்ல ரசிகன்தான் நல்ல விமர்சகனாகவும்

செயல்படமுடியும் என்பது தி.க.சி விஷயத்தில் முழு உண்மை. தி.க.சி. நல்ல கர்நாடக சங்கீத ரசிகர்.

73-ல் முதல்முதலாக சென்னைக்கு நான் வந்தபோது, சித்ரா விஸ்வேஸ்வரனின் நடன் நிகழ்ச்சிக்கு என்னை அழைத்துச் சென்றது தி.க.சி.தான். அதே 73-ல்தான் சென்னை சோவியத் கலாசாரநிலையத்தில் அடூர் கோபாலகிருஷ்ணனின் 'சுயம்வரம்' படத்தின் ப்ரிவ்யூ நடந்தது. அதற்கும் தி.க.சி. என்னை அழைத்துச் சென்றார்கள். அந்தப் ப்ரிவ்யூவுக்கு அன்று அடூரும் வந்திருந்தார். முக்கியத் திரைப்படங்களை எல்லாம் தி.க.சி பார்த்துவிடுவார்கள். அது பற்றிய விமர்சனங்களை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வார்கள். அவர்கள் "தாமரை' யின் பொறுப்பாசிரியராக இருந்த காலத்தை தாமரையின் பொற்காலம் என்றே சொல்லவேண்டும். தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் இருந்த பல இளம் எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கேட்டுவாங்கி தி.க.சி. தாமரையில் பிரசுரித்தார்கள். தி.க.சி ஒரு மார்க்ஸிஸ்ட். அவரது இலக்கிய விமர்சன அணுகுமுறை மார்க்ஸிய கோட்பாடு சார்ந்தது. இலக்கியத்தை முற்போக்கு, பிற்போக்கு என்று அணுகியவர்கள் தி.க.சி.

கோட்பாடு, தத்துவம் என்றாலே வறட்சியானதுதான். இந்த வறட்டுத்தன்மை மார்க்ஸியத்திலும் உண்டு. தாமரை சி.பி.ஐ.யின் இலக்கியப் பத்திரிகை. அதில் வெளிவரும் சிறுகதை, கவிதைகளில் தி.க.சி பொறுப்பேற்பதற்கு முன்பு ஒருவிதமான வறட்டுத்தனமும் கட்டுப்பெட்டித்தனமும் இருந்தது. ஆனால் தி.க.சி. பொறுப்பேற்ற பிறகு கலாபூர்வமான படைப்புகள் தாமரையில் இடம்பெறலாயின.

எனது யுகதர்மம், மயானகாண்டம், கிரிமினல், பூமணியின் 'வயிறுகள்', கி.ராஜநாராயணனின் 'வேட்டி', பா.ஜெயப்பிரகாசத்தின் 'அம்பலக்காரர் வீடு' போன்ற கலாபூர்வமான பல சிறுகதைகள் தி.க.சி. பொறுப்பேற்றிருந்த காலத்தில்தான் தாமரையில் வெளியாகின. அக்காலத்தில் இலங்கை எழுத்தாளர்களான டொமினிக் ஜீவா, கதிர் காமநாதன், செ.யோகநாதன்,டேனியல், திக்குவல்லைகமால் போன்ற பல இளம் படைப்பாளிகளின் படைப்புகளை தி.க.சி. கேட்டுவாங்கி தாமரையில் பிரசுரித்தார்கள். வண்ணதாசனும் 'சிவ.கல்யாணசுந்தரம்' என்ற தனது இயற்பெயரிலேயே பல கவிதைகளை தாமரையில் எழுதியிருக்கிறார்.

கவிஞர் ஞானக்கூத்தன் எந்த முற்போக்கு முகாமிலும் சேராதவர். அவர் மார்க்ஸிஸ்டும் அல்ல. அவர் கவிதையின் அழகியல் சார்ந்து இயங்கிய கவிஞர். ஆனால், தி.க.சி. ஞானக்கூத்தனின் கவிதை பற்றிய கட்டுரை ஒன்றை தாமரையில் பிரசுரித்தார்கள். அந்தளவுக்குத் திறந்த மனதுடனும், கலை அழகியல் உணர்வுடனும் தி.க.சி. இயங்கியதால்தான் அந்தத் தாமரை இதழ்கள் மிகத் தரமாக இருந்தன.


தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை அதன் ஆரம்பக் காலத்தில் நிறுவி, வளர்த்த பெருமையும் தி.க.சி.க்கு உண்டு. 70-களில் சென்னை எல்.எல்.ஏ பில்டிங்கில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கூட்டங்கள் மாதந்தோறும் நடைபெற்றன. இக்கூட்டங்கள் பெரும்பாலும் தி.க.சி.யால் ஏற்பாடு செய்யப்பட்டன.

தி.க.சி. நல்ல மொழிபெயர்ப்பாளரும்கூட. ஜார்ஜி குலியாவின் 'வசந்தகாலத்தில்' என்ற நீண்ட நாவலை தி.க.சி மொழிபெயர்த்திருக்கிறர்கள். சோவியத் செய்திக்கட்டுரைகளை அவர்கள் மொழிபெயர்ப்பதை பலமுறை நேரிலிருந்து பார்த்திருக்கிறேன். வேகமாகவும், அதே சமயம் சரளமாகவும் தி.க.சி. மொழிபெயர்ப்பார்கள்.

பெண்ணியம், தலித்தியம், போன்ற தற்கால இலக்கியப் போக்குகள் மீது தி.க.சி.க்குப் பிடிப்பு இருந்தது. இவை பற்றிய கருத்துக்களை தனது நேர்ப்பேச்சிலும், பத்திரிகைகளிலும் பகிர்ந்துகொண்டுள்ளார்கள். நான் எப்போது திருநெல்வேலிக்குச் சென்றாலும் தி.க.சி.யைப் பார்க்காமலிருக்க மாட்டேன். நல்லகண்ணு, வைகோ முதலான அரசியல்வாதிகள் முதல் தன்னைத் தேடிவரும் வாசகர்கள் வரை தி.க.சி.க்கு விரிந்து பரந்த நட்பு வட்டம் இருந்தது.

தி.க.சி.யின் மறைவு இலக்கிய உலகுக்கும், பல நண்பர்களுக்கும் பேரிழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பு.

எழுத்துப் பணி



இலக்கிய ஈடுபாடு

1941-ல் வல்லிக்கண்ணன் நெல்லைக்கு இடம் பெயர்ந்தார். அவரும் தி.க.சியின் வீட்டின் அருகே வசித்தார். அப்போது நெல்லை வாலிபர் சங்கம் மூலம் "இளந்தமிழன்" என்ற பெயரில் கையெழுத்துப் பத்திரிகையைத் தி.க.சி.யும் அவரது நண்பர்களும் நடத்தி வந்தனர். வல்லிக்கண்ணனின் இலக்கியப் பற்றை அறிந்த தி.க.சி அவரைச் சென்று சந்தித்தார். அவர்களது சந்திப்பிற்கு பின் வல்லிக்கண்ணனை "இளந்தமிழன்" இதழுக்கு ஆசிரியர் ஆக்கினார். அவ்விதழ் ஓராண்டு காலம் நடைபெற்றது. அப்போது தொடங்கி மறையும் வரை தி.க.சியும் வல்லிக்கண்ணனும் "இரட்டையர்கள்" என்று அறியப்படும் அளவிற்கு தோழமை கொண்டிருந்தனர். தி.க.சி. பல இடங்களில் வல்லிக்கண்ணனை தன் இலக்கிய ஆசான் என்றே குறிப்பிடுகிறார்.

இக்காலக்கட்டத்தில் ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார்ரை தி.க.சி சந்தித்தார். வல்லிக்கண்ணன், கே. வேலாயுதம், தி.க.சி மூவரும் ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாரின் வட்டத்தொட்டி அமைப்பில் பங்கெடுத்து இலக்கிய விவாதங்களை அறிந்தனர்.

படைப்புச் செயல்பாடு

தி.க.சி வல்லிக்கண்ணனின் ஊக்குவிப்பால் படைப்பிலக்கியத்தில் ஈடுபாடு கொண்டார். தி.க.சியின் முதல் சிறுகதை வண்டிக்காரன் வல்லிக்கண்ணன் முயற்சியால் 1942-ம் ஆண்டு 'பிரசண்ட விகடன்' இதழில் வெளிவந்தது. பின் கிராம ஊழியனில் தொடர்ந்து கவிதைகள் படைக்கத் தொடங்கினார். கலாமோகினி இதழிலும் எழுதினார்.

தொடக்கத்தில் படைப்பிலக்கியத்தில் செயல்பட்டு வந்த தி.க.சி அதன்பின் தன் எழுத்து பயணத்தை விமர்சனம் நோக்கி திருப்பினார். கிராம ஊழியனில் அவர் எழுதிய திரை விமர்சனங்கள் தி.க.சி.யைப் பரவலாக அறிமுகப்படுத்தின. அதன் பின் நாடகங்களையும் எழுதினார். திரை விமர்சனங்களில் இருந்து தி.க.சி.யை இலக்கியத் திறனாய்வு நோக்கி பேராசிரியர் நா. வானமாமலை திருப்பினார்.

1952-ல் நா. வானமாமலையுடன் இணைந்து சிந்துபூந்துறை சண்முகம் அண்ணாச்சி "நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்" என்னும் வெளியீட்டகத்தைத் தொடங்கினார். இதற்கு தி.க.சி எல்லா வகையிலும் உதவினார். தமிழ்ப் புத்தகாலயம் திரு. கண. முத்தையாவின் கோரிக்கைப்படி அரசியல், ரஷ்யா, சீன இலக்கிய நூல்கள் ஆகியவற்றை மொழிபெயர்த்தார். இந்த அனுபவம் பின்னாளில் சோவியத் செய்தித்துறையில் பணியில் சேர அடிப்படையாய் அமைந்தது.

கடித இலக்கியம்

திகசி தமிழில் கடித இலக்கியத்தை வளர்த்தவர்களில் ஒருவராக அடையாளம் காணப்படுகிறார். அஞ்சலட்டைகளில் தொடர்ச்சியாக இளம்படைப்பாளிகளுக்கும் சகபடைப்பாளிகளுக்கும் கடிதங்கள் எழுதிவந்தார். இலக்கிய விமர்சனங்கள், இலக்கிய விவாதங்களை அக்கடிதங்கள்

புதுமைப்பித்தன் விவாதம்

திகசி புதுமைப்பித்தன் படைப்புகளை விமர்சனம் செய்து 'வீரவணக்கம் வேண்டாம்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரை தமிழ் இலக்கியச் சூழலில் விவாதத்தை உருவாக்கியது. அதில் புதுமைப்பித்தனை

நச்சிலக்கியவாதி என அடையாளப்படுத்தியிருந்தார். ஆனால் பின்னாளில் அக்கருத்துக்களை மாற்றிக்கொண்டார்.

இலக்கிய இடம்

தி.க.சி ஒரு மார்க்ஸிய இலக்கிய விமர்சகர். தன்னுடைய பார்வை முற்போக்கு இலக்கியம் எனப்படும் சோஷலிச யதார்த்தவாதம் சார்ந்தது என்று திகசி சொல்லிக்கொண்டாலும் கட்சிச்சார்பு அவருடைய முதன்மை அளவுகோலாக இருந்தது. தமிழகத்தின் இடதுசாரி முகாமைச் சார்ந்த எழுத்தாளர்களை முன்வைப்பதிலும், இலக்கியம் சார்ந்த கட்சிநிலைபாடுகளை வலியுறுத்துவதிலும் முக்கால்நூற்றாண்டுக்காலம் தீவிரமாகவே செயல்பட்டார். ஆனால் எல்லா முகாமைச் சேர்ந்தவர்களுடனும் தனிப்பட்ட நட்புணர்வுடனும் இருந்தார்.

திகசி ஆரம்பகாலத்தில் புதுமைப்பித்தன், மௌனி, ந.பிச்சமூர்த்தி உள்ளிட்ட நவீனத்துவ எழுத்தாளர்கள் மேல் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து, இலக்கியத்தின் சமூகவிமர்சனத் தன்மை மற்றும் சமூகப்பொறுப்பை வலியுறுத்தி எழுதினார். பிற்காலத்தில் நவீனத்துவ முன்னோடிகளான எழுத்தாளர்களிடமுள்ள முற்போக்குக் கூறுகளைச் சுட்டிக்காட்டுபவராக ஆனார். திகசியின் அணுகுமுறை மதிப்புரைகள் மற்றும் இலக்கியப்பூசல் தன்மைகொண்ட கட்டுரைகளை எழுதுவது. இலக்கியவிமர்சனத்திற்குரிய விரிவான ஆய்வுக்கட்டுரைகளை அவர் எழுதவில்லை.

திகசியின் முதன்மைச் சாதனை தாமரை இதழ் வழியாக புதிய தலைமுறை எழுத்தாளர்களைக் கண்டடைந்து ஊக்கப்படுத்தியது. அவர்களில் பலர் பின்னாளில் முதன்மையான படைப்பாளிகளாக ஆனார்கள். "தாமரை சி.பி.ஐ.யின் இலக்கியப் பத்திரிகை. அதில் வெளிவரும் சிறுகதை, கவிதைகளில் தி.க.சி. பொறுப்பேற்பதற்கு முன்பு ஒருவிதமான வறட்டுத்தனமும், கட்டுப்பெட்டித்தனமும் இருந்தது. ஆனால் தி.க.சி. பொறுப்பேற்ற பிறகு கலாபூர்வமான படைப்புகள் தாமரையில்

இடம்பெறலாயின" என்று வண்ணதாசன் திகசியின் பங்களிப்பை குறிப்பிடுகிறார்.

நூல்கள்

- தி.க.சி யின் திறனாய்வுகள் (கிறிஸ்துவ இலக்கியச் சங்கம், 1993)
- விமர்சனத் தமிழ் (அன்னம், சிவகங்கை, 1993)
- விமர்சனங்கள், பேட்டிகள், மதிப்புரைகள் (விஜயா பதிப்பகம், கோவை, 1994)
- மனக்குகை ஓவியங்கள் (பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1999)
- தமிழில் விமர்சனத்துறை - சில போக்குகள் (2001)
- கடல்படு மணல் (நிவேதிதா புத்தகப் பூங்கா, சென்னை, 2010)
- தி.க.சி. யின் நேர்காணல்கள் (தொகுத்தவர் வே. முத்துக்குமார், உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, 2011)
- காலத்தின் குரல் (ஆவாரம்பூ, நெல்லை, 2012)
- தி.க.சி யின் நாட்குறிப்புகள் (தொகுத்தவர் வே. முத்துக்குமார், உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, 2014)
- தி.க.சி. திறனாய்வுக் களஞ்சியம் (தொகுத்தவர் கழனியூரன், முழுத் திறனாய்வுகள், காவ்யா பதிப்பகம், சென்னை, 2015)
- தி.க.சி. கவிதைகள் (தொகுத்தவர் வே. முத்துக்குமார், ஆவாரம்பூ, நெல்லை, 2017)
- தி.க.சி. நாடகங்கள் (தொகுத்தவர் வே. முத்துக்குமார், ஆவாரம்பூ, நெல்லை, 2017)
- தி.க.சி. திரை விமர்சனங்கள், (தொகுத்தவர் வே. முத்துக்குமார், ஆவாரம்பூ, நெல்லை, 2017)
- நினைவோடைக் குறிப்புகள், (தொகுத்தவர் வே. முத்துக்குமார், சந்தியா பதிப்பகம், சென்னை, 2018)
- தி.க.சி மொழிபெயர்ப்புகள் (தொகுப்பாசிரியர்: வே.முத்துக்குமார், சந்தியா பதிப்பகம், சென்னை 2020)

Inside Look at T.K. Sivasankaran's Life

Part 1 தி.க.சிஆவணப்படம்/ஒளிப்பதிவு, இரா.சண்முகசுந்தரம்.MFA

https://www.youtube.com/watch?v=vfkCPExDhaU [14:23]

மிகச்சிறந்த தி.க.சிஆவணப்படம். வரும் தலைமுறையினர் திரு.தி.க.சி.அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள பேருதவியாக வர் வாழும் காலத்திலேயே அவரது வாழ்வை ஆவணப்படுத்திய அசாதாரண ஆவணப்படம், தமிழ இலக்கியம் படிக்கும் மாணவர்கள் ஆய்வாளர்கள் யாவரும் அவசியம் பார்க்கவேண்டிய சிறந்த ஆவணப்படம்..

தி.க.சி.யின் நினைவில்

வெங்கட் சாமிநாதன்

https://solvanam.com/2014/06/15/%e0%ae%a4%e0%ae%bf-%e0%ae%95-%e0%ae%9a%e0%ae%bf-%e0%ae%af%e0%ae%bf%e0%ae%a9%e0%af%8d-%e0%ae%a8%e0%ae%bf%e0%ae%a9%e0%af%88%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d/

என்னை மிகவும் திகைப்புக்கும் ஆச்சரியத்துக்கும் உள்ளாக்கிய மனித சமீபத்தில் மறைந்த தி.க.சி. அறுபதுகளின் இடை வருடங்களிலிருந்து தான் தி.க.சி. எனக்குத் தெரிய வந்ததே. ***தாமரை*** என்னும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகையின் ஆசிரியராக. தமிழ் நாட்டு முற்போக்கு எழுத்தாளர்களுக்கு ஆதரவாளராக, கட்சிச் கோட்பாடுகளுக்கு ;பிரசாரகராக, வழிகாட்டியாக. இவையெல்லாம் அவரது வெளித்தெரிந்த ரூபங்கள் பலவென்றாலும் அதிகம் கேட்கப்படும் குரல் ஒன்று தான். பின்னிருந்து தூண்டும் சக்தியும் ஒன்றுதான். இவை எதுவும் எனக்கு பிடித்தமான காரியங்கள் அல்ல. அதே காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த, ***எழுத்து, இலக்கிய வட்டம்*** போன்ற பத்திரிகைகள் எனக்குப் பிடித்த மானவையாக, என் பார்வைக்கு ஒத்திசைவு கொண்டவையாக இருந்தன. *தாமரை* அல்ல.

ஆனால், இந்த முற்போக்கு முகாமில் இருப்பவர்கள் பற்றியோ அவர்கள் செயல்பாடுகள் பற்றியோ எதுவும் கறாராகச் சொல்லி விட முடிந்ததில்லை.

வல்லிக்கண்ணன், ***தாமரை*** இதழ் கட்சிக்கென தொடங்கப் பட்டதே விஜய பாஸ்கரன் நடத்தி வந்த ***சரஸ்வதி***யின் திறந்த மனப்போக்கும் செயல்பாடுகளும் ஜீவாவுக்குப் பிடிக்காமல் போய்விடவே, கட்சியின் குரலை முழுக்க பதிவு செய்வதற்கென்றே தொடங்கப்பட்டது தான் ***தாமரை*** என்று சொல்லியிருக்கிறார். இதை அவர் சொன்னது, ***தாமரை*** தொடங்கப்பட்ட போது அல்ல. வெகு காலம் பின்பு. அனேகமாக, என் நினைவு சரியெனில், ***தீபம்*** பத்திரிகையில், ***சரஸ்வதி காலம்*** என்னும் தொடரின் கடைசி பக்கங்களில் அதன் மரணத்தைப் பற்றிச் சொல்லும் போது இந்த திரைக்குப் பின் நடந்த கதையைச் சொல்கிறார். ***சரஸ்வதி*** பத்திரிகை அச்சாகி வந்த ***ஜனசக்தி*** பிரஸ்ஸில் அதைத் தாமதப் படுத்தியே ஜீவா ***சரஸ்வதி***யை கடை மூட வைத்தாராம். அவர் சொல்லியிராவிட்டால் இந்த ரகசியங்கள் வெளிவராமலே போயிருக்கும். வல்லிக்கண்ணன் தைரியமாக தன் மனதில் பட்டதை, தான் பார்த்த உண்மைகளைப் பதிவு செய்த மிக அரிதான சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று. இன்னொன்றையும் சொல்லி விடுகிறேனே. விஜய பாஸ்கரனின் ***சமரன்*** என்ற இதழில் திமுகவையும் அதன் தலைவர்களையும் சாட்டையடி என்று தான் அந்த விளாசலைச் சொல்ல வேண்டும். அப்படி விளாசியவர் தான் அதற்கு முன்னரும் மௌனம். பின்னரும் சுமார் 50 வருடங்களுக்கு வாயைத் திறக்கவில்லை. இவை யெல்லாம் எப்படி நிகழ்கின்றன என்பது எனக்கு இன்னமும் புரியாத புதிராக, ஆச்சரியமாக இருந்து வருகிறது.

விஜய பாஸ்கரன் தன் ***சரஸ்வதி*** இதழில் தன்னை ஒரு செஞ்சட்டை அணிந்த தெருக்களில் கட்சி கோஷமிட்டுச் செல்பவராகக் காணவில்லை. அதில் க.நா.சு. சி.சு. செல்லப்பா, ஈழத்து கே டேனியல், டொமினிக் ஜீவா, என எல்லோருக்கும் இடமிருந்தது. மறக்கப்பட்டிருந்த ***மௌனியின் கதைகள்*** தொகுக்கப்பட்டதே கூட மௌனி வழிபாடாகிவிட்டதாக குற்றம் சாட்டிய ஈழத்துப் பேராசிரியர் ஏ ஜெ. கனகரத்னா வின் ***மௌனி வழிபாடு*** என்ற ஒரு கண்டன கட்டுரைக்குக் கூட இடம்

இருந்தது. ***சரஸ்வதி***யில் வெளிவந்த ரகுநாதனின் எழுத்துக்களில் கட்சி கோஷங்கள் இருக்கவில்லை.

ஏன், முதன் முதலாக செல்லப்பா என்னை ***சரஸ்வதி*** காரியாலயத்துக்கு அழைத்துச் சென்ற போது (1961) விஜய பாஸ்கரன் என்னையும் ***சரஸ்வதி***க்கு எழுதச் சொன்னார். யாரை? யாருக்கு அந்த அழைப்பு? அமெரிக்க முதலாளித்துவத்துக்கும், ஏகாதிபத்யத்துக்கும் அடிவருடியும், சி.ஐ.ஏ. ஏஜெண்ட்டும், ஆன என்னை, அமெரிக்காவிலிருந்து மணிஆர்டரில் பணம் பெற்றுவருவதாக முற்போக்குகள் எல்லாம் ஒரே குரலாக விடாது குற்றம் சாட்டி வந்த என்னைத் தான் எழுதச் சொன்னார். அது ஆரம்ப காலம். நான் என்னங்க எழுதப் போறேன்?" என்று சொல்லி என்னை அறியாதே பின்னர் அந்தக் கட்சிக்குள் ஒரு பயங்கர சுனாமி புயல் வீசக்கூடும் அபாயத்தைத் தடுத்துவிட்டேன்.

அப்படியும் கூட, ஜீவா ஒன்றும் ஒரு பயங்கர புரட்சித் தீ கக்கும் கோஷங்களே அறிந்த கட்சிக் காரரர் இல்லை. இலக்கியத்தில் தோய்ந்தவர். பாரதி பற்றி மணிக்கணக்கில் பேசுபவர். கட்சிப் பிரசாரம் என்று வந்து விட்டால், அது வேறு விஷயம். ஏழை விவசாயியின் வாழ்க்கையில் ஒரு ட்ராக்டரின் வருகை எத்தகைய முக மலர்ச்சியைத் தரும் என்று கிட்டத்தட்ட கருணாநிதி பாணி வசனத்தில் வர்ணித்து மாய்ந்து போவார். இப்படி அவர் எழுத்தைப் படித்த ஞாபகம் இருக்கிறது எனக்கு. சின்னப் பையன் சுந்தர ராமசாமியை, "*நீ பூணூல் போட்டுக்கணும்*" என்று உபதேசித்து, "*எங்கே, ந சந்தியா வந்தன மந்திரம் சொல்லு பாப்பம்*" என்றும் கேட்பார். நல்ல மனிதர் ஆனால் அப்பப்போ கட்சி தான் அவரை சாமியாடச் சொல்லும் போலும். என்ன செய்ய?, வல்லிக்கண்ணன் சொல்வதை நம்பித் தான் ஆகணும்.

ஆனால், தி.க.சியின் ஆசிரியத்வத்தில் வந்த ***தாமரை*** தன்னை ஒரு கட்சிப் பத்திரிகை என்று பிரகடனப்படுத்துவதற்கான சமாசாரங்களையும் தவறாது பிரசுரித்து வந்தாலும்,(அச்சாவது ஜனசக்தி பிரஸ்ஸிலாக்கும்) பூமணி, பா. செயப்ரகாசம், கி. ராஜநாராயணன், பிரபஞ்சன், ஆ.பழனியப்பன் (பெயர் சரிதானா?) சார்வாஹன், வண்ணநிலவன், இப்படி பலர், அதில்

எழுதினார்கள். தஞ்சை பிரகாஷ் ***நாடோடிக் கதைகள்*** நிறைய எழுதினார் என்று நினைவு. இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் ***எழுத்து*** பத்திரிகையும் க.நா.சு.வின் ***இலக்கிய வட்டமும்*** புதுக்கவிதைக்கு களம் தந்ததும் அதை தீவிரமாக எதிர்த்து வந்த சிதம்பர ரகுநாதன், நா.வானமாமலை, கலாநிதி கைலாசபதி எம்.ஏ. பிஹெச் டி ஆகியோரின் புதுக்கவிதைக்கு எதிரான தொடர்ந்த பிரசாரத்துக்கும் இடம் தந்தது. அத்தோடு, நிற்கவில்லை. வானம்பாடிகளின் "புதுக்கவிதைகளும்(?):" அதில் பிரசுரமாயின. சி.மணி நா.வானமாமலையின் புதுக்கவிதை எதிர்ப்புக்கு பதிலளித்த கட்டுரையையும் *தாமரை* பிரசுரித்தது. தருமு சிவராமூவின் E = mc2 என்னும் கவிதைக்கு வானம்பாடிகளின் ஆசிரியக் குழுவினரும் முற்போக்கு கவிஞருமான சிற்பி அவர்களின் நீண்ட பாஷ்யத்தையும் பிரசுரித்தது. யாருடைய கவிதையை?, அராஜக வாதியும், இருள்மய வாதியும் மாயாவாதியும் இன்னும் என்னென்னவோ வாதியும் மட்ட ரக புளுகனும், அற்ப புத்தி படைத்த அவதூறுக்காரனும், (எல்லாம் திகசி அவர்கள் கொடுத்த பட்டங்கள் தாம்) ஆன, அரூப் சீவராம் என்று தனக்கு அந்த சில நாட்களில் பெயர் சூட்டிக்கொண்ட இன்றைய பிரமிள் கவிதையை. பிரமீள் ஒவ்வொரு முறையும் எழுத உட்காரும்போது தன் பெயரை, அல்லது அதன் உச்சரிப்பை மாற்றிக் கொள்வார். வேறு வழியின்றி பிரமிள் என்ற பெயர் நிலைத்தது அவர் மறைவுக்குப் பிறகு தான்.

இதற்கிடையில் புதுக்கவிதையை ஏதொ கொள்கை என்று அவர் கற்பித்துக் கொண்டவகையில் எதிர்த்து வந்த கலாநிதி கைலாசபதி எம்.ஏ. பிஎச் டி அவர்கள், வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவரான தமிழன்பனின் ***தோணி*** என்ற தலைப்பின் "புதுக்கவிதை" தொகுப்புக்கு பாராட்டுக்களும் தன் ரசனையும் நிறைந்த நீண்ட முன்னுரை ஒன்று எழுதி ஆசீர்வதித்து இருந்தார். தமிழன்பனுக்கும் அவர் கட்சியின் வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்ற பட்டம் கிடைத்த சந்தோஷம். ஆனால் யாருமே ***தாமரை*** பிரசுரித்த சார்வாகனின் கவிதைகளைப் பற்றி மூச்சு விடவில்லை. ***தாமரை***யில் எழுதுவதால் அவர் முற்போக்காகத் தானே இருக்க வேண்டும், திகசி யும் தீர விசாரிக்காமல் போட்டிருக்க மாட்டாரே என்ற நினைப்பில் கட்சிப் பெரியவர்கள் ஏதும் மறுப்பு

சொல்லவில்லை. கா. சிவத்தம்பிக்கு கலாநிதி கைலாசபதி எம். ஏ. பிஹெச். டியின் புதுக்கவிதை எதிர்ப்புப் பிரசாரத்தையும் ஆதரித்துப் பேசவேண்டும். ***தாமரையில்*** புதுக்கவிதைத் தோற்றம் தரும் சமாசாரங்களுக்கும் சமாதானம் சொல்லவேண்டும் என்னும் திக்குமுக்காடலில் தவிப்பு. இப்படியா?, அப்படியா? என்ற தீர்மானத்துக்கு வரமுடியாமல் தவித்தார். *தாமரை* ஆசிரியர் தி.க.சியைச் சாடமுடியுமோ? அல்லது தன் சித்தாந்த மூலவரான கலாநிதி கைலாசபதிக்குத் தான் எதிராக ஒரு நிலை எடுக்கமுடியுமோ? எனவே,"முன்னாலே பாத்தா செட்டியார் குதிரை, பின்னாலே பாத்தா கௌண்டர் குதிரையாட்டும் தெரியுது? என்ற அவரது ஒரு சமாளிப்பைக் கீழே பார்க்கலாம்.

"எனவே, முற்போக்குக் கடப்பாடுடைய தாமரை புதுக்கவிதைக்குத் தரும் முதலிடம் ஆராயப்படவேண்டியதொன்றாகும். தமிழ் நாட்டில் கிராமீயக் கலை ஆய்வுக்கு இலக்கியத் தளம் அமைத்துக்கொடுத்த தாமரை, இன்று புதுக்கவிதை பயில்வுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. இது மேனிலைத் தழுவலா (elitism-ஆ) அன்றேல் அடிநிலை மக்களை ஆற்றுப்படுத்தலா என்பது பற்றிய கருத்துத் தெளிவு எனக்கு ஏற்படவில்லை. ஆகஸ்ட் 1973 மல்லிகை இதழில் கா.சிவத்தம்பி)

கா. சிவத்தம்பி நல்ல படிப்பாளி, கைலாசபதி எம்.ஏ.பிஎச் டிக்கு இல்லாத இலக்கிய உணர்வும் ரசனையும் வாய்க்கப் பெற்றவர் என்றாலும் கலாநிதிக்கு ஒத்து ஊதியே பழக்கப் பட்டவர். அந்தப் பழக்கத்தின் காரணமாக, செம்மொழி மாநாட்டுக்கு வந்து கருணாநிதி புகழ்பாடியும் சென்றார். கருணாநிதி சாதாரண பாராட்டுக்களில் திருப்தி அடைபவரில்லை என்பது உலகம் அறியும்.

என்னமோ என்று நான் நினைத்திருந்த தி.க.சி. தன் ***தாமரை*** ஆசிரியத்வத்தில் பெரிய பெரிய அறிஞர் பெருமக்களை எல்லாம் கழைக்கூத்தாட வைத்துள்ளார் என்று பார்க்கும் போது, எனக்கு எல்லாம் தமாஷாகத் தான் இருந்தது. நான் ரசித்தேன். வேறு யாரும் நினைவு படுத்தாதையெல்லாம் நான் இப்போது நினைவு படுத்துகிறேன்.

வெகு ஆச்சரியமான நிகழ்வுகள் இவை. க.நா.சுவின் ***இலக்கிய வட்டம்*** 1948 – 1964 கால கட்டத்திய இலக்கிய நிகழ்வுகள் குறித்து சாதனை இதழ் என்றோ என்னவோ பெயரில் வெளியிட்டிருந்தது. அதில் நானோ, நகுலனோ, க.நா.சு. வோ எழுதியது பெரிய விஷயம் இல்லை. எனக்கு ஆச்சரியம் தந்தது தி.க. சியும் அதில் ஒரு மிக மிக நீண்ட கட்டுரை எழுதியிருந்தார். நினைவிலிருந்து எழுதுகிறேன். அதில் வணிக பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் செய்யும் நாசவேலைகளுக்கு "மரண அடி" தந்தது மட்டுமல்லாமல் முதலாளித்துவத்துக்கு எதிராக, சோஷலிஸ சமுதாய உருவாக்கத்துக்கு எழுத்தாளர் பாடு படவேண்டும் என்றோ என்னவோ எழுதி, சில நல்ல எழுத்துக்களையும் குறிப்பிட்டு எழுதியிருந்தார். அவர் பாராட்டுக்கள், எழுத்து மக்களுக்காகவே தானே ஒழிய, வணிகத்துக்காக அல்ல, கலையும் உழைக்கும் பாட்டாளி மக்களின் எழுச்சிக்காக.......வகையறா வகையறாவாக வே இருந்ததாக என் நினைப்பு. பிராபல்யங்களை எதிர்த்த வரையில் சரி என்பது என் நினைப்பாக இருந்தது. கூரான இலக்கியப் பார்வை இல்லாத ஒரு நீண்ட கட்டுரைக்கு க.நா.சு இடம் கொடுத்ததும், அதிகப் பேர் எழுதாத போது எழுதக் கேட்டு வந்ததை மறுப்பானேன் என்றும் இருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் மாறாக, தி.க.சி. எல்லோரிடமும் சகஜ பாவத்தோடு பழகி வந்தவர் தன்னோடு கொள்கையளவில் மாறுபட்டு விரோதம் கொண்டவர்களுடனும் சினேகம் கொண்டிருந்தார் என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை.

கடுமையான, காரசாரமான வாத விவாதங்கள் புதுக்கவிதை பற்றி நிகழ்ந்து வந்த கட்டம் அது. வானமாமலைக்கு ***எழுத்து*** பத்திரிகையிலும் அவரது புதுக்கவிதை எதிர்ப்புக்கு நீண்ட பதில் தந்திருந்தார் செல்லப்பா அதற்கு முன்னோ பின்னோ நான் விடுமுறையில் தெற்கே வந்திருந்த போது சென்னையில் செல்லப்பாவைப் பார்க்க வந்த போது அங்கு அவர் வீட்டில் சார்வாகனையும் தி.க.சியையும் செல்லப்பாவுடன் வெகு கால சினேகிதர்கள் போல உரையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். செல்லப்பா அவர்கள் இருவருக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

அப்போது நான் சார்வாஹனிடம் சொன்னேன். " இங்கு தி.க.சியை இங்கு பார்ப்பதும் அவர் வெகு சகஜ பாவத்தோடு உங்களோடும்

செல்லப்பாவோடும் உரையாடிக்கொண்டிருப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. சந்தோஷமாக இருக்கிறது" என்றேன். அதற்கு சார்வாஹன் சொன்னார். "தாமரையே இப்போதெல்லாம் அவ்வளவு கடுமையாக இல்லையே" என்றார். "ஆமாம், கட்சியையும் மீறி சில விஷயங்கள் அதில் வருகின்றன, பார்த்தேன்" என்றேன்

ஜெயகாந்தன் முற்போக்கு எழுத்தாளர்களின் கட்சிக்காரர்களின் சூழலில் வளர்ந்தவர். சிறு வயதிலிருந்தே அவரை ஆதரித்தவர்கள் அவர்கள் தான்.

உன்னைப் போல் ஒருவன் படம் தில்லியில் ஷீலா தியேட்டரில் ஒரு நாள் திரையிடப்பட்டது. பார்த்தேன். வெகு தைரியமான தீவிர முயற்சி என்று எனக்குப் பட்டது. அதற்கு உதவியவர்கள், படத்தில் பேராசிரியராக நடித்தவர் எல்லோரும் முற்போக்கு முகாமைச் சேர்ந்தவர்கள். தில்லியில் இருந்தவர் ஒருவர் சோவியத் லாண்ட் பத்திரிகையில் வேலை பார்த்தவர். அவர் வீட்டில் தான் ஜெயகாந்தன் கரோல்பாகில் தங்கியிருந்தார். அவரை வரவேற்றுப் பாராட்டிப் பேசிய கூட்டத்தில் தலைமை தாங்கிய பால தண்டாயுதமும் இருந்தார். ஜெயகாந்தன் பேசும் போது, ஏதோ ஒரு கட்டத்தில் "பாலா அவர்கள் சார்ந்திருக்கும் இயக்கம்". என்று தன்னை அன்னியப்படுத்திக் கொண்டு பேசினார். எனக்கு இது என்ன புதிர் என்று பட்டது. சில வருடங்களுக்குப் பின் ***கசடதபற*** இதழில் நான் ஜெயகாந்தனைக் கடுமையாகத் தாக்கி எழுத நேர்ந்தது. அப்போது திகசி எனக்கு எழுதிய கடிதத்தில் "இதற்கெல்லாம் காரணம் நீங்களும் உங்களைப் போன்றவர்களும் தான். நீங்கள் வளர்த்து விட்ட ஜெயகாந்தன் வேறு எப்படி நடந்து கொள்வார்?" என்ற அர்த்தத்தில் எழுதியிருந்தார். ஜெயகாந்தன் தன்னை முற்போக்கு முகாமிலிருந்து விலக்கிக் கொண்டுவிட்டார் என்று தெரிந்தது. ஆனந்த ***விகடனிலும்*** சாவியின் ஆசிரியத்வத்தில் இருந்த ***தினமணிக் கதிரிலும்*** வெகுவேகமாக ஜெயகாந்தன் வளர்ந்துவிட்டதன் விளைவு என்று நினைத்துக்கொண்டேன். இந்தக் கடிதம் ***கசடதபற*** பத்திரிகையோடு நிகழ்ந்த சர்ச்சையில் அதற்கு எதிராக தருமு சிவராமு எழுதிய ***"கோணல்கள்"*** கட்டுரையில் பிரசுரமானது. கட்சியின் தலைமைக்கு திகசி எழுதிய கடிதம் சம்மதமாக இருக்கவில்லை என்று பின்னர் தெரிய வந்தது பேச்சு வாக்கில் தான்.

இதெல்லாம் பெரிய விஷயமில்லை. சின்ன சின்ன உரசல்கள். திகசியையும் கட்சியின் தலைமையையும் பொருத்த வரை. திகசியின் பொறுப்பில் ***தாமரை*** கட்சிப் பத்திரிகை என்ற பெயர் பெற்றிருந்தாலும், கட்சி சார்பும் கொள்கை விளக்கங்களும் நன்கு வெளித்தெரிய இருந்தாலும், திகசி அவர் காலத்திய இளைய தலைமுறை எழுத்தாளர்களிடையே தம்மை ஊக்குவிக்கும் பெரியவர் என்ற ஸ்தானம் பெற்றவராக இருந்தார். வல்லிக்கண்ணனிட மிருந்தும் கூட தன்னை ஊக்குவிக்கும் ஒரு கார்டு கட்டாயம் வந்து விடும் தான். ஆனால் திகசி ***தாமரை***யில் இடமும் கொடுப்பாரே. பிரசுரமும் ஆகுமே.

"நன்றாக எழுதுகிறீர்கள். தொடர்ந்து எழுதுங்கள் பாட்டாளி மக்கள் புரட்சிக்கு உங்கள் எழுத்து வித்திடும்", என்று வேறு ஊக்குவித்து நேரிலும் சொல்வார். ஒரு கார்டும் வந்து சாட்சியம் சொல்லுமே. அவரை நன்றியுடன் பார்க்கும் ஒரு பெரிய இளைஞர் பட்டாளமே உருவானது அவர் காலத்தில். அந்த பழக்கம் அவர் ***தாமரை*** ஆசிரியத்வத்தில் இல்லாத போதும் தொடர்ந்தது. அதிலும் திருநெல்வேலி இளைஞர் கூட்டத்துடன் திர்நேலி தமிழில் பேரப்புள்ளைகளை உற்சாகப் படுத்துவது இருக்கே அது மிக இனிமையும் வாத்சல்ய பாவமும் கொண்டது. பின்னாட்களில் அவரைச் சந்தித்தவர் தரும் புகைப்படங்களில் அவர் தன் சுடலை மாடன் தெரு வீட்டின் தாழ்வாரத்தில் தன் அறைக்கு எதிரில் ஒரு நாற்காலியில் அமர்ந்து குனிந்த வண்ணம் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருக்கும் காட்சியே காணக் கிடைக்கும். காந்தி என்றால் சர்க்காவில் நூல் நூற்கும் காட்சி. சிவாஜி என்றால் முறுக்கிய மீசையும் வாளேந்திய கையுமாக நிமிர்ந்து நிற்கும் கட்டபொம்மன் வேஷம் தரித்து, தி.க.சி.க்கு தன் இளைய தலைமுறைக்கு கடிதம் எழுதும் காட்சி.

தி.க.சியின் ஆரம்பங்கள், நாற்பதுகளில், ***தாமரையில்*** நாம் கண்ட தி.க.சி உருவாவதற்கான ஆரம்பங்கள் இல்லையென என் நினைப்பு. அப்போது அவர் தொடர்புகள், கு.ப.ரா. ***கிராம ஊழியன்*** என்று எப்படி இருந்திருக்க முடியும்?. ***வென்றிலன் என்ற போதும், ஐந்தாம் படை*** போன்ற கதைகள் எழுதிய ரகுநாதன் தான் பின்னர் தீவிர முற்போக்கு ஆனார். இந்த மாயம் எல்லாம் எப்படி நடக்கிறது என்பதை ஆராய்வது கஷ்டம். ***சோமன***

துடி மாதிரி ஏன் தமிழில் ஒரு திரைப்படம் வருவதில்லை என்று ஒரு இடத்தில் ஏங்கும் தி.க.சி. தான், அகிலனின் ***சித்திரப் பாவை*** நாவலுக்கு ஞானபீடப் பரிசு கிடைத்ததும், "*இது தமிழ் இலக்கியத்துக்குப் பெருமை சேர்ப்பது, என்றும், அகிலன், சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் சோஷலிஸம் ஆகிய லட்சியங்களுக்காக போராடுகிறவர்*" என்று பாராட்டுக்களை அள்ளிச் சொரிந்தார். வேடிக்கை இல்லை. சிரிக்க வேண்டாம். நிஜமாகவே தான். ஒரு வேளை இடைப்பட்ட காலத்தில் அகிலனுக்கு சோவியத் ரஷ்ய அழைப்பு விடுத்து அவருக்கு ரஷ்ய சுற்றுப் பயணத்துக்கு உதவியதால் ஒரு வேளை திடீரென அகிலனை இந்த புஷ்பார்ச்சனைக்கு தகுதியாக்கியிருக்கலாம். அகிலனும் தன் பங்குக்கு தன் ரஷ்ய பயணம் பற்றி வெகு பரவசம் அடைந்து ரஷ்ய புகழ் பாடி கட்டுரைகள் எழுதினார். ஆனால் அத்தோடு அந்தக் கதை சரி.

ஆனாலும் தன் கட்சி ஆசான்களும் கட்சியும் புதுக்கவிதைக்கு எதிராக தொடர்ந்த பிரசாரம் நடத்திக்கொண்டிருக்கும் போது ***தாமரை***யில் புதுக்கவிதை தோற்றம் அளிக்கும் வானம்பாடிகளுக்கும் இன்னம் மற்றோருக்கும் தொடர்ந்து இடமளித்து அதுபற்றி விவாதங்களுக்கும் களம் தந்த ஆசிரியரின் தாராள மனதை என்னவென்று சொல்வது? அது மட்டுமல்ல. பூமணி, வண்ணநிலவன், சார்வாகனுக்கெல்லாம் இடமென்றால், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தை எப்படி கொணர இயலும்? இதையெல்லாம் எதிர்த்து கட்சி எழுத்தாளர்களும் தலைமையும் போராடிக்கொண்டிருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டாமா? கட்சித் தலைமையிடமிருந்து கேள்விகளும் எதிர்ப்பும் எழவே, தி.க.சி என்ன செய்தார்?. ***தாமரை***யை விட்டு விலகினார் என்று வல்லிக்கண்ணன் சொல்கிறார். திகசி பற்றிய இந்த உள் விவகாரங்களில் வல்லிக்கண்ணனை நம்பாமல் வேறு யாரை நம்புவது? தன் பதவியைத் துறந்த திகசி யை நாம் பாராட்டவேண்டும். இன்னொன்றுக்கும் நாம் திகசி யை பாராட்டவேண்டும். தன் மகன், வண்ணதாசன், பின் தன் திர்நேலி சீட இளவல்கள், கலாப்ரியா, வண்ணநிலவன் யாரையும் அவர் முற்போக்கு ப்ராண்ட் எழுத்தை வற்புறுத்தவில்லை. அவர்களை அவர்கள் சுதந்திரத்துக்கு விட்டு விட்டது பெரிய விஷயம் இல்லையா? யாருக்கும் இதில் சந்தேகமிருப்பின், சு.கா. வுக்கு திகசி அவ்வப்போது தரும்

பாராட்டுக்களையும் உற்சாகத்தையும் சுகா வை எழுதியிருப்பதைத் தாம நான் சுட்டவேண்டும். எந்த வகைக்கும் உட்படாத சுகாவின் எழுத்தைப் பாராட்டுவது என்றால், அதில் முற்போக்கு எங்கே என்று தேடத்தான் வேண்டும். கிடைக்காது.

தி.க.சி யின் ஆசிரிய பீடத்தில் தொ.மு.சி. ரகுநாதன் வந்து அமர்ந்தார். திகசியின் காலத்திலும் சரி, பின்னரும் சரி, ***தாமரை*** இதழ்களை அவ்வப்போது பார்க்கத் தான் எனக்குக் கிடைக்குமே தவிர, தொடர்ந்து அதை நான் கவனித்தவனில்லை.

நவீன விருட்சம் பத்திரிகைக்கு மதிப்புரை எழுதச் சொல்லி எனக்குக் கிடைத்த புத்தகம் திகசி யின் கட்டுரைகளையெல்லாம் தொகுத்திருந்த ***விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள்.*** அப்புத்தகம் என்னிடம் இல்லை. ***நவீன விருட்சம்*** இதழும் இல்லை. ***என் பார்வையில நாவல்கள், சிறுகதைகள்............. ....*** என்ற என் கட்டுரைத் தொகுப்பு 2000-ல் கலைஞன் பதிப்பகம் வெளியிட்டது, அதில் சேர்க்கப்பட்டுள்ள, தி.க.சியின் புத்தகத்துக்கு நான் எழுதிய மதிப்புரையிலிருந்து (பக்கம் 201 - 204) எழுதுகிறேன். மேலே தரப்பட்டிருக்கும் மற்ற மேற்கோள்களும் சுந்தர ராமசாமியின் கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டவை தான்.

திகசி யின் இத்தொகுப்பு பல ஆச்சரியங்களைத் தந்தது. ஆச்சரியம் என்ன, முற்போக்கும், கட்சி சேவகமும் திகசியை முற்றாக மாற்றிவிடவில்லை என்று எண்ணத்தை ஏற்படுத்தியது.

அதிலிருந்து என் வார்த்தைகள் சிலவற்றையும் திகசி யின் வார்த்தைகள் சிலவற்றையும் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அனேகமாக பலருக்கு இது திகசி யின் கேட்காத குரலாக இருக்கும்.

(இப்புத்தகத்தின்) 330 பக்கங்களும் படிக்க மிக சுவாரஸ்யமாக இருக்கின்றன. வெளித்தெரிந்த திகசியை விடுங்கள். உண்மையான திகசி யாரென்பது சுவாரஸ்யமான புதிராக இருக்கிறது. கட்சி நிர்ப்பந்தங்களை மீறி, ஒதுக்கி, ஒரு நெருக்கம் ஏற்படும் எனில், திகசி பழகுவதற்கு மிக நல்ல மனிதராக இருக்கவேண்டும்.

இனி ஒரு நேர்காணல்

கேள்வி: ஒரு நல்ல படைப்பை நீங்கள் எப்படி இனம் கண்டு கொள்வீர்கள்?

திகசி: கலாபூர்வமாக மனசுக்கு நிறைவு அளிக்கும்படியான படைப்பு எதுவும் மிகச் சிறந்த படைப்பு தான். ஒரு தனித்தன்மை இனம் காட்டிவிடும். எல்லாவற்றுக்கும் மேலாக அது நம் நெஞ்சை நெருட வேண்டும். (it must disturb) படித்தபின் என்னவோ பண்ணுகிறது. அப்படியே புரட்டிப் போட்டு விடுகிறது. படிக்குமுன் இருந்த நான் வேறு. இப்போதைய நான் வேறு என்கிற மாதிரியான பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய ரஸவாதம் எல்லா கலைகளுக்கும் உண்டு."

தி.க.சி அஞ்சலி

https://www.jeyamohan.in/48249/

தி.க.சிவசங்கரனை எனக்கு திருநெல்வேலியில் ஒரு நிகழ்ச்சியில் சுந்தர ராமசாமி அறிமுகம் செய்தார். அவருக்கு தி.க.சியின் இலக்கிய நோக்கு, அடிப்படை ரசனை ஆகியவற்றின் மீது மதிப்பில்லை. வறட்டுத்தனமான மார்க்ஸியத்தின் சரியான உதாரணம் என அவரை நினைத்தார். ஆனால் அவரது கொள்கைப்பற்றுமீது மதிப்பிருந்தது. ஆழமான நட்பும் நீடித்தது.



அது கம்யூனிஸ்டுகள் சோர்வில் மூழ்கிக்கிடந்த காலம். சோவியத் ருஷ்யா உடைந்து சிலமாதங்களே ஆகியிருந்தன. சுந்தர ராமசாமியைப்பார்த்ததும்

தி.க.சி அவர் கையைப்பிடித்துக்கொண்டு `என்ன ராமசாமி இப்படி ஆயிப்போச்சு' என்றார். தி.க.சி கண்கலங்கியபோது சுந்தர ராமசாமியும் கண்கலங்கியதாகத் தோன்றியது. அவரது வழக்கப்படி வாயை இறுக்கமாக மூடிக்கொண்டு தலையை மட்டும் அசைத்தார்.

தொடர்ந்து தி.க.சி சோவியத் ருஷ்யாவின் வீழ்ச்சியைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார். அந்த இலக்கியக்கூட்டத்தின் அமைப்பாளர்கள் வந்து அழைக்கும் வரை. சுந்தர ராமசாமிக்கு சோவியத் ருஷ்யாவின் கம்யூனிசம் மற்றும் சர்வாதிகாரம் பற்றிய கடும் விமர்சனம் இருந்தபோதிலும் அதன் வீழ்ச்சி ஒரு பெரிய சோர்வை அளித்தது என எனக்குத்தெரியும். ஆனால் அந்த அளவுக்கு வருத்தமிருக்குமென நான் நினைக்கவில்லை. திரும்பும்போது சுந்தர ராமசாமியிடம் அதைப்பற்றி கேட்டேன். அவர் காரில் அவரது உணர்ச்சிகளைச் சொல்லிக்கொண்டே வந்தார்

எனக்கு அப்போது தி.க.சி பற்றி எந்த மதிப்பும் இருக்கவில்லை. இத்தனைக்கும் என் முதல் நாவல் ரப்பர் வந்தபோது முதலில் பாராட்டி ஊக்கமூட்டி எழுதிய சிலரில் ஒருவர் அவர். அதன்பின் திசைகளின் நடுவே தொகுப்பையும் பாராட்டி எழுதியிருந்தார். சோவியத் ருஷ்யா இருந்தவரை தி.க.சியை ஒரு நிறுவன ஆதரவாளராகவே என்னால் பார்க்கமுடிந்தது. ஆனால் அந்த யுகம் முடிந்தபின்னரும் நீடித்த அவரது பற்றுறுதிதான் அவரை கொள்கையாளராக எனக்குக் காட்டியது

அதன்பின் எப்போதும் அவருடன் நன்மதிப்புடன் நல்லுறவுடன் இருந்தேன். நெல்லை செல்லும்போதெல்லாம் அவரைச் சென்று சந்திப்பதுண்டு. `வே நீ ஒரு ஃபாசிஸ்ட்...ஆனா கலைஞன்' என்று உரக்க கூவிச்செல்வார். எல்லா சந்திப்புகளுமே உற்சாகமான கேலி கிண்டல் நடுநடுவே வசைகளுடன் இருக்கும். பின்தொடரும் நிழலின் குரல் நாவலுக்காக நான் அவரால் எப்படியும் அதைவிட மும்மடங்கு பக்க அளவுக்கு திட்டப்பட்டிருப்பேன்.

இருமுறை அவரது பிறந்தநாளன்று வாழ்த்துவதற்காகச் சென்றிருந்தேன். பக்கத்தில் இருந்த ஓட்டலுக்குச்சென்று அவரதுசெலவில் இனிப்புடன் விருந்துண்டுதான் செல்லவேண்டுமென ஆணையிட்டு அதற்கு பொறுப்பாக அவரது நண்பர் ஒருவரையும் கூடவே

அனுப்பிவைத்தார்.அவருக்குப்பிடித்த கதைகள் வெளிவந்தால் தொலைபேசியில் கூப்பிட்டுப்பாராட்டுவார். கடைசியாக அறம் கதைகள் வெளிவந்தபோது ஒவ்வொரு கதைக்கும் கூப்பிட்டுப்பாராட்டினார். அவருக்கு யாரோ தினமும் அச்சுநகல் எடுத்துக்கொடுத்திருந்தனர்.

முதுமை அவரை நெடுங்காலம் நெருங்கவில்லை. காரணம் மிகமெல்லிய சிறிய உடல் என்பதே. மூச்சு, செரிமானம், இதயம் ஆகியவை பழுதின்றி இருந்தன. தொடர்ச்சியாக வாசித்தும் விவாதித்தும் எப்போதும் `களத்தில்' இருந்தார். அவ்வகையில் அவர் கம்யூனிஸ்டாக இருந்தது அவருக்கு உதவியது. அவரைச்சுற்றி எப்போதும் இளம் நண்பர்கள் இருந்தனர். மற்ற எழுத்தாளர்களுக்கு அமையாத நல்லூழ் அது. அவரது கணீர்க்குரல் இன்னொரு வரம். முதியவர்கள் தனிமைப்படுவதற்கு அவர்களின் குரல் தளர்ந்து அவர்கள் பேசுவது பிறருக்கு புரியாமல் போவது ஒரு முக்கியமான காரணம்.

அவரது வாழ்க்கையில் முக்கியமான முதல் இழப்பு வல்லிக்கண்ணன் மரணம். அப்போது அவரைப்பார்க்கச்சென்றிருந்தேன். அவர் வல்லிக்கண்ணனைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. `நானும் அவரும் சேக்காளிக' என்று மட்டும் பலமுறை திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார்.பின்னாளில் வல்லிக்கண்ணனின் படத்தைத்தான் அவரது இல்லத்தில் சட்டமிட்டு வைத்திருந்தார்

அவரது மனைவி. உடல்நலமில்லாமல் படுக்கையில் இருந்தபோது அவர்களை அவர்தான் கவனித்துக்கொண்டார். அவர் இறந்தபோது நான் ஊரில் இல்லை. சிலநாட்கள் கழித்து துக்கம் கேட்கச் சென்றிருந்தேன். `ரொம்ப முடியாம இருந்தா...போனது நல்லதுதான்...எனக்கு ஒண்ணும் துக்கமில்ல' என்றார். ஆனால் பேச்சுநடுவே அவர் அவர்களைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தபோது கண்கள் கலங்கி அழுதுவிட்டார்.

`கண்ணுல கண்ணீரா வருது...வாசிக்கவே முடியுறதில்லை...லென்ஸ் மாத்தணும்' என்றபடி கண்ணாடியைத் துடைத்து போட்டுக்கொண்டார். கம்யூனிஸ்டுகள் அழக்கூடாதே. `இதெல்லாம் எதுக்கு உங்கிட்ட சொல்றேன்னா நீ இதையெல்லாம் எழுதணும்...இதெல்லாம் ஒரு

ப்ரியட்...அந்த டைம் பற்றி எழுதலேன்னா அதெல்லாம் அப்டியே போய்டும்....சமூகவியலுக்கு இதெல்லாம் தேவை' என்றார்.

அதன்பின் அவரது முதல்மகனின் மரணமும் அவரை பெரிதும் சோர்வுறச்செய்தது. அவரது முதல்மகன் நல்ல வாசகர். அவரும் ஒரு எழுத்தாளராக வருவார் என தி.க.சி எதிர்பார்த்திருந்தார். அவர் சங்கப்பாடல்களுக்கு உரை எழுதியிருக்கிறார். எனக்கு அறிமுகமில்லை. அதற்கு துக்கம் கேட்க தி.க.சியை பார்க்க சென்றபோது அதைப்பற்றி ஒன்றுமே பேசாமல் காவல்கோட்டம் பற்றி மட்டுமே பேசிவிட்டு வந்தேன்.

தி.க.சியிடம் எப்போதும் எனக்கு மோதலும் பிரியமும் சம அளவில் கலந்த உறவிருந்தது. சென்ற தலைமுறையில் நான் மிகமிகக் கடுமையாக விமர்சனம் செய்த சிந்தனையாளர் அவரே. இலக்கியத்தில் நான் முழுமையாக நிராகரிக்கும் அரசியல்சார்ந்த குறுக்கல்வாதத்தின் முகம் அவர். என் தலைமுறையில் அவர் மிகக்கடுமையாக விமர்சனம் செய்த எழுத்தாளனும் நானே. ஆனால் எங்களுக்குள் ஒரு நல்ல நட்பு நீடித்தது. அதற்கான காரணம் அவரது அபாரமான நகைச்சுவை உணர்ச்சி.

அவரை ஒருமுறை காணச்சென்றபோது வேறு ஏதோ வழியில் நுழைந்து சந்துகளில் வழிதவறிவிட்டேன். நூறுமுறை சென்றாலும் குழப்பும் நெல்லைத்தெருக்களில் ஒன்றில் அவர் இருந்தார். எவருக்கும் எழுத்தாளர் தி.க.சிவசங்கரன் என்றால் யாரென்றே தெரியவில்லை. ஒரு பிச்சைக்காரர் 'அதோ அந்த குப்பைத்தொட்டிபக்கத்தில சாமி' என்று சுட்டிக்காட்டினார்.

அதை தி.க.சியிடம் சொன்னேன். 'ஆமா, நாங்க திரும்ப அவருகிட்ட நோட்டீசையும் ரசீதையும் நீட்டருவோம்ல...நாங்க ஒரே வர்க்கம்' என்று சிரித்தார். 'குப்பைத்தொட்டி பக்கத்தில உங்க வீடுன்னு சொன்னானே' என்றேன். உடனே அவரது சிறிய புத்தக அலமாரியைச் சுட்டிக்காட்டி 'குப்பையா வச்சிருக்கோம்ல' என்றார். அதில் என் நூல்கள் இருந்தன. 'குப்பைய அள்ளுறவன்கிட்டத்தானே அதெல்லாம் வந்து சேரும்?' என்றார்

மலேசியாவிலிருந்து வரும்போதே தி.க.சி இறந்த செய்தி வந்தது. நினைவுகள் வந்தபடியே இருந்தன. பெரும்பாலும் எல்லாமே புன்னகைக்கச் செய்யும் இனிய நினைவுகள். தி.க.சிக்கு அஞ்சலி.

தி.க.சி., சுடலை மாடன் தெரு, திருநெல்வேலி:

ஓர் இலக்கிய முகவரி

https://kungumamthozhi.wordpress.com/tag/%E0%AE%A4%E0%AE%BF-%E0%AE%95-%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%9A%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B0%E0%AE%A9%E0%AF%8D/

மகாகவி பாரதியைத் தன் ஆதர்ச குருவாக வரித்துக் கொண்டு இலக்கிய வாழ்வைத் தொடங்கியவர் மதிப்பிற்குரிய இலக்கிய ஆளுமை தி.க.சி என்கிற தி.க.சிவசங்கரன். இதனாலும் அவர் மீது என் பிரியம் அளவு கடந்திருக்கலாம். மகாகவி பாரதி என் மானசீக குரு. இளம் வயதில் கனவுகளில் மகாகவியுடன் வாழ்ந்திருக்கிறேன். அதே கருப்புக் கோட்டுடன் காட்சியளித்திருக்கிறான்.

கையெழுத்துப் பிரதியிலேயே 'ஆயுதம்' என்கிற எனது கவிதைத் தொகுப்பு முதல் பரிசுக்குத் தேர்வாகியிருந்தது. கலை இலக்கியப் பெருமன்றமும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து நடத்திய இலக்கியப் போட்டியின் சார்பில் நடத்தப்பட்ட விழாவில் கலந்துகொள்ள நண்பர் ஜெயராமனுடன் எட்டயபுரம் போயிருந்தேன். மகாகவியின் கருவறை எட்டயபுரம் ஆயிற்றே! அந்த மண்ணில் முதல் விருது பெறுவதை விட வேறென்ன மகிழ்ச்சி இருக்க முடியும்? மகாகவியின் வீட்டில் நாங்கள் இருவரும் மண்ணில் விழுந்து புரண்டோம்.

எட்டயபுரத்துக்கு அடுத்து திருநெல்வேலிதானே!

விருதுப் பட்டயங்களைச் சுமந்தபடியே திருநெல்வேலி போனோம். திருநெல்வேலி என்றால் பலருக்கும் அல்வா. உங்களைப் போலவே எங்களுக்கும் திருநெல்வேலி என்றால் தி.க.சிவசங்கரன். நாங்கள்

அனைவரும் வீட்டுக்குப் போயிருந்தோம். மேசை நிறைய புத்தகங்கள். ஒரு ஓரத்தில் தொலைபேசி என்பதாக ஞாபகம். வெள்ளை நிறம் என்று நினைக்கிறேன். எதிரில் ஒரு நாற்காலி. நாற்காலியின் மூலையில் தி.க.சி. அண்ணன் வண்ணதாசன் எங்கள் வருகையைத் தந்தைக்குச் சொல்கிறார். ஒரு குழந்தையைப் போல குதூகலமாக வரவேற்கிறார் தி.க.சி. அப்போது எனக்குத் தோன்றியது இதுதான்... இந்த இமயமலைக்குள் எத்தனைச் கூழாங்கற்கள்!

'கல்கியிலும் வண்ணக்கதிரிலும் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்... தொடர்ந்து எழுதுங்கள்'. முதுகு இல்லாதவர்களைக் கூடத் தட்டிக்கொடுக்க அவரால்தான் முடியும்!

அவரைப் பற்றிப் பேச ஆரம்பிப்போம்... அவர் நம்மைப் பற்றியும் இலக்கிய உலகத்தைப் பற்றியுமே பேசிக்கொண்டிருப்பார்.

அப்போது அவரது துணைவியார் உடல்நலமின்றி இருந்தார். அண்ணன் வண்ணதாசன் அம்மாவுடன் இருக்க, தி.க.சி இடையில் போய்ப் பார்த்துவிட்டு வந்து மறுபடியும் தன் மனைவியின் உடல்நிலை, இலக்கிய உலகத்தின் சுகாதாரம், நாம் பணியாற்றவேண்டிய திசைவழி என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்.

வண்ணதாசன் எங்களைப்பற்றித் தன் தந்தையிடம் சொல்கிற விதம் ரொம்ப நன்றாயிருக்கும். முதலில் சொல்கிறபோது காதில் விழுந்திருக்காது... அல்லது கவனம் சிதறி இருக்கும். அடுத்துக் கொஞ்சம் சத்தம் போட்டுச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்கிற போது வண்ணதாசனின் முகபாவமும் வார்த்தைகள் வெளிவந்த பிறகு மௌனம் ஆகும் உதடுகளும் பார்க்கப் பரவசமாக இருக்கும். அப்போதும் ஒரு தீவிர அரசியல்வாதியாகவும் இலக்கியவாதியாகவும் பேசிக்கொண்டே இருப்பார் தி.க.சி.

அடுத்து, எங்கள் இலக்கு பத்தமடை தோழர் தமிழ்ச்செல்வன் அவர்களைப் பார்ப்பதாக இருந்தது. தி.க.சியிடம் சொன்னோம். உடனே

ச.தமிழ்ச்செல்வன் குறித்துப் பேச ஆரம்பித்துவிட்டார். அத்தோடு தமிழ்ச்செல்வன், அவர் சார்ந்திருக்கும் இலக்கிய அமைப்பு, அதன் செயல்பாடு என்று அவர் பேச்சு விரிய ஆரம்பித்துவிட்டது. எழுத்தாளர் சங்க மாநாடுகளுக்குத் தவறாமல் வருவார் தி.க.சி. ஓரிரு நிமிடங்கள்தான் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கும் என்றாலும் உணர்வு பூர்வமாகப் பேசுவார். உற்சாகப்படுத்தும் வார்த்தைகளை சொல்லியபடியே இருப்பார்.

ஒருமுறை தினமணிக் கதிரில் 'இலக்கியப் பஞ்ச சீலம்' என்கிற கருத்தாக்கம் குறித்து விரிவாகக் குறிப்பிட்டு இருந்தார். தலித்தியம், தமிழியம், பெண்ணியம், சூழலியம், மார்க்சியம் என்று குறிப்பிட்டு இலக்கியத்தின் நோக்கம் இவற்றைச் சுற்றி இருக்க வேண்டும் என்று எழுதி இருந்தார். அதற்கு இலக்கியரீதியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று நான் கருதினேன். சென்னையில் "இலக்கியப் பஞ்ச சீலம்" என்ற தலைப்பில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தோம். அரங்கம் கொள்ளாதக் கூட்டம். என்னைப் பொறுத்தவரை இன்னும் அந்தக் கூட்டம் முடிந்ததாகத் தெரியவில்லை. இப்போதும் அந்த அரங்கில் தி.க.சி. பேசிக் கொண்டிருக்கிறார். அதுதான் தி.க.சி.

இத்தனை பெரிய கூட்டம் இருந்தும் வெறிச்சோடிக் கிடக்கிறது சுடலை மாடன் தெரு.

– நா. வே.அருள்

நூற்பட்டியல்

__மொழிபெயர்ப்பு நூல்கள்__ :

காரல் மார்க்சின் இல்வாழ்க்கை - உண்மைப் பிரசுரம் , 1951

வசந்த காலத்திலே - (ரஷ்ய நாவல்) - தமிழ்ப் புத்தகாலயம் , 1951

எது நாகரீகம் ? கலாசாரத்தைப் பற்றி (மாக்சிம் கார்க்கி கட்டுரைகள்) - தமிழ்ப் புத்தகாலயம் , 1951

சீனத்துப் பாடகன் (சீன நாவல்) - தமிழ்ப் புத்தகாலயம் , 1951

போர்வீரன் காதல் (சீன நாவல்) - தமிழ்ப் புத்தகாலயம் , 1951

குடியரசுக் கோமான் (மாக்சிம் கார்க்கி கட்டுரை) - ரவி பிரசுரம், 1952

திறனாய்வு நூல்கள் :

தி.க.சி.யின் திறனாய்வுகள் - கிறிஸ்துவ இலக்கியச் சங்கம் , 1993

விமர்சனத் தமிழ் - அன்னம், சிவகங்கை , 1993

விமர்சனங்கள் , பேட்டிகள், மதிப்புரைகள் - விஜயா பதிப்பகம் , 1994

மனக்குகை ஓவியங்கள் - பூங்கொடி பதிப்பகம் . 1999

தமிழில் விமர்சனத்துறை -சில போக்குகள்' (டிசம்பர் 2001)

கடல் படு மணல் - நிவேதிதா புத்தகப் பூங்கா - 2010

காலத்தின் குரல் - ஆவாரம்பூ வெளியீடு , 2012

இதர நூல்கள் :

தி..க.சி என்னுமொரு திறனாய்வுத் தென்றல் - மு. பரமசிவம் - நர்மதா பதிப்பகம் - 1999

தி.க.சி என்றொரு மனிதன் - (தொ.ஆ)- அ .நா .பாலகிருஷ்ணன் - ஞானியாரடிகள் மன்றம் , 2004

தி.க.சி நேர்காணல்கள் - (தொ.ஆ) - வே.முத்துக்குமார் , உயிர் எழுத்து , 2011

பிரிய சகோதர - (தொ .ஆ) சுகதேவ் & சீனி குலசேகரன் - கலைஞன் பதிப்பகம் , 2012

தந்தமைத் தவழும் வளவு வீடு - தி. சுபாஷினி , மித்ராஸ், 2012

நிழல் விடுத்து நிஜத்திற்கு (கடிதத் தொகுப்பு) குள்ளக்காளிப்பாளையம் கே . பாலசுப்பிரமணியம் , ஆவாரம்பூ வெளியீடு, 2013

தி.க.சி நாட்குறிப்புகள் - (தொ.ஆ) - வே.முத்துக்குமார், சந்தியா பதிப்பகம், 2014

தி.க.சி என்றொரு தோழமை - (தொ.ஆ) - கழனியூரன், காவ்யா பதிப்பகம், 2014

தி.க.சி எனும் ஆளுமை - (தொ.ஆ) - புதுகை.மு,.தருமராசன் / பேராசிரியர் இரா.மோகன், வானதி பதிப்பகம், 2014

தி.க.சி நாடகங்கள் - (தொ.ஆ) - வே.முத்துக்குமார், ஆவாரம்பூ வெளியீடு, 2017

தி.க.சி திரைவிமர்சனங்கள் - (தொ.ஆ) - வே.முத்துக்குமார், ஆவாரம்பூ வெளியீடு, 2017

தி.க.சி கவிதைகள் - (தொ.ஆ) - வே.முத்துக்குமார், ஆவாரம்பூ வெளியீடு, 2017

நினைவோடைக் குறிப்புகள் - (தொ.ஆ) - வே.முத்துக்குமார், சந்தியா பதிப்பகம், 2018

தி.க.சி மொழிபெயர்ப்புகள் - (தொ.ஆ) - வே.முத்துக்குமார், சந்தியா பதிப்பகம், 2019

சாகித்ய அகாடமி விருது பெற்ற
தி க சிவசங்கரன் மரணம்

https://tamil.oneindia.com/news/tamilnadu/writer-t-k-sivasankaran-dies-196481.html

நெல்லை: சாகித்ய அகாடமி விருது பெற்ற முதுபெரும் எழுத்தாளர் நெல்லை மண்ணின் மைந்தர் விமர்சகர், தி க சிவசங்கரன் நெல்லையில் காலமானார் தி. க. சிவசங்கரன் மார்க்சிய திறனாய்வாளர். 1925ல் திருநெல்வேலி நகரில் பிறந்தவர். தி.க.சி.யின் வாழ்க்கை குறித்தும்-எழுத்துலகம் குறித்தும் 2007-ஆம் ஆண்டு சென்னையில் இயங்கி வரும் தமிழ்க்கூடம்

என்ற கலை-இலக்கிய அமைப்பு ஒரு ஆவணப் படத்தை உருவாக்கியது. 21-இ,சுடலை மாடன் தெரு,திருநெல்வேலி டவுன் என்று பெயர் சூட்டப்பட்ட இப்படத்தை எழுத்தாளரும் இயக்குநருமான எஸ். ராஜகுமாரன் எழுதி-இயக்கியுள்ளார். மேலும் கண்டறிக செய்தி சுருக்கம் தமிழ் பாட்காஸ்ட் ஒரு இந்தியா தொலைக்காட்சி சேனல் செய்தி தளம் திருப்பூர் மத்திய அரிமா சங்கத்தின் 2008-க்கான சிறந்த ஆவணப்பட விருது மற்றும் தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர்கள்-கலைஞர்கள் சங்கத்தின் சிறந்த ஆவணப்பட விருது-2008 ஆகிய விருதுகள் இந்த ஆவணப்படத்திற்கு கிடைத்தன. கடந்த சில நாட்களாக உடல்நிலை சரியில்லாத காரணத்தால் பாளையங்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், 25.3.2014 இரவு 11.30 மணியளவில் காலமானார். இவரது மதிப்புரைகளும் கட்டுரைகளும் முதிய வயதில்தான் திகசி கட்டுரைகள் என இரு பகுதிகளாக தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இத்தொகுதிகளுக்கு 2000 ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது.



மறைவுக்கு முன் நல்லகண்ணுவை பார்க்க விரும்பிய தி.க.சி.

23.ந் தேதி இந்திய கம்யூ.கட்சியை சார்ந்த சேவியர், தி.க.சி.யை பார்க்க சென்றபோது அவரிடம் தி.க.சி. அவருடைய சக தோழர், மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணுவை நான் சந்திக்கவேண்டும் சொல்லியுள்ளார்.

நலம் விசாரித்தப்பின் சிறிது நேரம் அவரோடு அமர்ந்த நல்லக் கண்ணு புறப்பட்டு சென்றுள்ளார். அதன் பின்னர் மரணத்தைத் தழுவியுள்ளார். இரவில் அவர் மறைந்த செய்தி கேட்டு நல்லக்கண்ணு வேதனை அடைந்துள்ளார். தி.க.சி.க்கு மார்ச் 30 பிறந்தநாளாகும். அன்றுடன் அவருக்கு 90 வயது நிறைவு பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தி.க. சிவசங்கரன் (1925-2014)
எனும் ஆளுமை

வீ.அரசு

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamapr14/26386-1925-2014

“... சென்ற பதினைந்து ஆண்டுகளில் (1945 - 1960), ஆரம்பத்தில் அத்தி பூத்தது போலவும், பிறகு இங்கொன்று அங்கொன்றாகவும், அப்பால் ஆண்டுதோறும் கணிசமான அளவிலும் நடந்த, பாரதி, கம்பன், வள்ளுவன், இளங்கோ விழாக்களிலும், அண்மையில் வள்ளலார், வேதநாயகம் பிள்ளை, மனோன்மணியம் சுந்தரனார், மறைமலையடிகள், கவிமணி, புதுமைப் பித்தன், கல்கி, டி.கே.சி நினைவு நாட்களிலும் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் முதலியார், என்.எஸ்.கே. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் விழாக்களிலும் ஜீவா, ரகுநாதன், எஸ்.ஆர்.கே. முகவை போன்றோரும் மற்றவர் களும் கலந்துகொண்டு புதிய முறையில் விமர்சனக் கருத்துகளை வழங்கி வந்தார்கள். இந்தக் கருத்துகளில் சில பல நூல் வடிவம் பெற்றன.

மேற்கூறியவர்களோடு ஒரு திசைப் பயணிகளாக மேலும் பலர் - குறிப்பாக எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் அணிவகுத்து நின்றனர். ஜனநாயகம், சாந்தி, சரஸ்வதி, தாமரை போன்ற கலை- இலக்கிய இதழ்களின் வழியாக, கலை - இலக்கிய வளர்ச்சிக்குப் புதுநெறி காட்டப் போராடினர்.”

(தோழர். ப.ஜீவானந்தம் கோவை- கலை இலக்கிய மாநாடு: மதிப்பீடும் கடப்பாடும் ‘தாமரை.’ தலையங்கம். ஜூலை 1961) தோழர் தி.க.சி. என்று எல்லோராலும் அழைக்கப்படும் தி.க.சிவசங்கரன் அவர்களின் ஆளுமை உருவாக்கம் உருப்பெறத் தொடங்கிய காலம்தான், மேலே ஜீவா விவரித்திருக்கும் காலம் ஆகும். தமிழ்ச்சூழலில் இடதுசாரி கருத்துசார்ந்த நிலைபாட்டில் வாழ்ந்த பல்வேறு ஆளுமைகள் குறித்த விரிவான பதிவுகள் செய்யப்பட்டிருப் பதாகக் கூறமுடியாது. அவர்கள் வாழ்ந்த காலம் நெருக்கடிக்குள்ளான காலம். தகவல்கள் விரிவாகப் பதிவு செய்யப்படாத காலம்.

இன்றைய சூழலில் பல்வேறு இடதுசாரி ஆளுமைகள் குறித்தத் தேடலை மேற்கொண்டு, அவர்கள் குறித்தப் பதிவு களை செய்யவேண்டிய கடமை நமக்குண்டு. ஆதாரபூர்வமான தரவுகளைக் கொண்டு இடது சாரிச் கருத்துநிலையாளர்களைப் பொதுவெளியில் கொண்டாட வேண்டும். அந்தக் கொண்டாட்டம் புதிய வரலாறுகளை அறிதலாகவும் இளம் செயற் பாட்டாளர்களுக்கு உத்வேகம் தரும் அனுபவமாகவும் அமையக்கூடும். இந்தக் கண்ணோட்டத்தில் தி.க.சி. என்ற ஆளுமையை இங்குப் பதிவு செய்ய முயலுகிறேன். அவர் மறைந்த இத்தருணத்தில் (25.03.2014) அவருக்குச் செய்யும் அறிவார்ந்த அஞ்சலியாகவும் இதனைக் கொள்ளலாம்.

தி.க.சி.யின் ஆளுமையைப் புரிந்துகொள்ள அவரது வாழ்க்கை நிகழ்வுகளைப் பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்வோம்:

- நெல்லை வாலிபர் சங்கத்துடன் இணைந்து, நண்பர்களுடன் ‘இளந்தமிழன்’ கையெழுத்துப் பத்திரிக்கை நடத்துதல் மற்றும் வல்லிச கண்ணன் அவர்களோடு தொடர்புகொண்டு செயல்பட்ட காலம். (1941- 1948)

- நெல்லையில் ‘கலைஞர் கழகம்’ என்னும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் செயல் பட்ட தி.க.சி. (1947- 1954).

- நெல்லையில் ‘முற்போக்கு எழுத்தாளர் சங்கம்’ என்னும் அமைப்பில் நண்பர் களோடு செயல்பட்ட தி.க.சி. (1955- 1958)

- சிந்து பூந்துறை சண்முகம் அண்ணாச்சி அவர்களுடன் இணைந்து நூல் வெளி யீட்டுத் துறையில் செயல்பட்ட திகசி. (1952- 1962)

- வங்கி ஊழியராக (1948- 1964) வாழ்ந்த தி.க.சி. அவ்வமைப்பில் எவ்வகையான தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபட்டார். அதன் விளைவுகள் எவ்வகையில் இருந்தன என்ற விவரணங்கள்.

தமது ஏழாவது வயதில் தந்தையை இழந்த தி.க.சி. தனது தாயின் அரவணைப்பில் வளர்ந்த தாகக் கூறுகிறார். இந்துக் கல்லூரியில் மாண வனாக இருக்கும்போது (1941) இடதுசாரிக் கண் ணோட்டமுடைய நெல்லை வாலிபர் சங்கத்துடன் இணைந்து செயல்படத் தொடங்குகிறார்.

கை யெழுத்துப் பத்திரிக்கை நடத்துகிறார்கள். 'இதய ஒலி' எனும் கையெழுத்துப் பத்திரிக்கையை நடத்திக் கொண்டிருந்த வல்லிக்கண்ணனைச் சந்திக்கிறார் நண்பர்களுடன். தாங்கள் நடத்தும் 'இளந்தமிழன்' இதழில் வல்லிக்கண்ணன் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். அரசாங்க வேலையை உதறிவிட்டு முழுநேர எழுத்தாளராக செயல்பட்டுக் கொண்டிருந்த வல்லிக்கண்ணன் அவர்களோடு 1941இல் தி.க.சிக்கு ஏற்பட்ட உறவு, இவரது ஆளுமை வளர்ச்சியில் பெரும் தாக்கம் செலுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. தி.க.சி. வல்லிக்கண்ணனைத் தமது குருநாதர் என்றே சொல்லிக்கொண்டார்.

சென்னையில் தி.க.சி.யோடு பேசும் வாய்ப்பு ஏற்பட்டால், வல்லிக்கண்ணன் பற்றி பேசாமல் இருக்கமாட்டார். அதைப்போல் வல்லிக்கண்ணன் அவர்களைச் சந்தித்தால், தி.க.சி. பற்றி நிறைய பேசுவார். சோசலிச கருத்தாக்கம் மீது நம்பிக்கை கொண்ட நண்பர்களாக இவர்கள் வாழ்ந்தனர். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, சென்னை நகரத்தில் நடைபெறும் முற்போக்கான இலக்கியக் கலைநிகழ்வுகள் அனைத்திலும் இவ்விரட்டை யரைச் சந்திக்க முடியும். சென்னை நகரத்தில் கலை இலக்கியம் தொடர்பான ஈடுபாடு உடைய இளைஞர்களிடத்தில் இவ்விருவரது தாக்கம் கணிசமான அளவில் உண்டென்றே கூறமுடியும்.

இளைஞனாக வளரும்போதே, வாசிப்பதில் மிகுந்த ஈடுபாடு உடையவராகவும் ஒரு கட்டத்திற்குப் பிறகு பாரதி மீது ஆழ்ந்த ஈடுபாடு மிக்கவராகவும் மாறி, பாரதி எழுத்துகளோடு வாழத் தொடங் கினார். 1940-1950 காலச்சூழல் என்பது பிரித்தானி யர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும் கால மாக இருந்த அதே நேரத்தில் இடதுசாரி இயக்கங்கள் வீரியத்தோடு வளர்ந்து கொண்டிருந்த காலம் அது. தி.க.சி. இடதுசாரி கருத்துநிலைகளை உள் வாங்கிய இளைஞனாகவே வளரத் தொடங்கினார்.

1947இல் தொ.மு.சி. ரகுநாதன் அவர்களுடனும் இணைந்து 'கலைஞர் கழகம்' என்னும் அமைப்பில் பல நண்பர்களுடனும் செயல்படத் தொடங்கினார். இந்த அமைப்பு குறித்து தி.க.சி. தனது 1948ஆம் ஆண்டு (4. 1. 48) நாட்குறிப்பேட்டில் பின்வருமாறு பதிவு செய்கிறார். "இன்றைய கழகக் கூட்டத்திற்கு (கலைஞர் கழகம்) சம்பந்த மூர்த்தி தலைமை வகித்தார். கு.ஸ்ரீனிவாசனின் நாடகத்தை கு.ஸ்ரீ.யே வாசித்தார். சபாபதியின்

(கோவில்பட்டி பஞ்சப் பிரதேசத்துக்குத் தலைவர் சுற்றுப்பிரயாணம் விஷயத்தைப் பற்றிய) கண்டனத் தீர்மானத்தைப் பற்றிய கடுமையான விவாதம் நடத்த, அத்தீர்மானம் வாபஸாயிற்று". (தி.க.சி. நாட்குறிப்புகள்: 25: 2014).

இப்பகுதியில் உள்ள செய்தியின் மூலம் கலை இலக்கியத்துறையில் தி.க.சி.யின் செயல்பாடுகள் எவ்வகையில் இருந்தன? என்பது பற்றித் தெரிந்து கொள்ளமுடிகிறது. கோவில்பட்டிப் பகுதியில் ஏற்பட்ட பஞ்சம் குறித்த விவாதத்தையும் இக் குழுவினர் மேற்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. நாட்குறிப்பேட்டில் கோவில்பட்டிப் பஞ்சம் தொடர் பான விரிவான செய்திகள் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

அண்மையில் அச்சாகி வெளிவந்துள்ள 'தி.க.சி. நாட்குறிப்புகள் (தொகுப்பு: வே.முத்துக் குமார்) எனும் நூலின் மூலம் தி.க.சி என்ற மனிதரின் அரசியல் செயல்பாடுகள், தொழிற்சங்க செயல் பாடுகள், வாசிப்புப் பழக்கம், அவரது ஈடுபாடுகள், குடும்ப உறவுகள் ஆகிய பல செய்திகளின் விரி வான பரிமாணத்தைப் பெறமுடிகிறது. 1940கள் தொடங்கி அந்தப் பத்தாண்டுகளின் இறுதிக் காலங்களில் தி.க.சி.யின் செயல்பாடுகளை அறிய உதவும் இவ்வாவணத்தின் மூலம், அவரது இயல் பான பண்புகள், மனிதாபிமான அணுகுமுறைகள் ஆகிய பல கூறுகளை அறிவதற்கான தரவாக அமைந்திருக்கிறது.

தொ.மு.சி. தமது பேட்டி ஒன்றில் (இரா. சீனி வாசன்: சாந்தி இதழ் குறித்த ஆய்வேடு). கலைஞர் கழகம் குறித்தும் அதில் டி. செல்வராஜ் மற்றும் தி.க.சி. ஆகியோர் செயல்பாடுகள் குறித்தும் கூறி யிருக்கிறார். அவர் அந்தப் பேட்டியில் 1954இல் தி.க.சி, டி. செல்வராஜ் ஆகியோரோடு இணைந்து நெல்லையில் 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' உருவாக்கியது குறித்துப் பதிவு செய்துள்ளார். சங்கத்தின் மூலமாக புதுமைப்பித்தன் நினைவு சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தினர். 'சாந்தி' இதழில் வெளிவந்த சுந்தரராமசாமி அவர்களின் 'தண்ணீர்' கதைக்கு ரூ. 100 பரிசளிக்கப்பட்டது. இவ்விழா நாடகக்கலைஞர் தி.க.சண்முகம் அவர்கள் தலைமையில்

1955இல் நடந்தது. இவ்வமைப்பில் ப. சீனிவாசன், நா. வானமாமலை ஆகியோரும் இணைந்து செயல்பட்டனர்.

தொ.மு.சி. ரகுநாதன், நா. வானமாமலை ஆகியோருடன் இணைந்து இக்காலங்களில் தி.க.சி. செயல்பட்டார். திருநெல் வேலிப் பகுதியில் இடதுசாரிக் கண்ணோட்டத் துடன் கலை இலக்கியங்களில் ஈடுபடுபவர்களாக அக்காலத்தில் கி. ராஜநாராயணன், சுந்தரராம சாமி ஆகியோர் செயல்பட்டனர். இவர்களுடைய செயல்பாடு நெல்லை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் தொடர்புடையதாக இருந்தது. 1954இல் ரகுநாதன் நடத்திய சாந்தி இதழில் வெளியான 40 கதைகளில் 10 கதைகள் சுந்தர ராமசாமியின் கதைகள் என்பதை அறியமுடிகிறது. அன்றைய இடதுசாரி இயக்க விவசாயத் தொழி லாளர் சங்கத்தில் கி. ராஜநாரயணன் முக்கியப் பங்கு எடுத்துச் செயல்பட்டார். இந்தச் சூழலை அடிப்படையாகக் கொண்டே தி.க.சி.யை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நெல்லை சிந்துபூந்துறையில் வாழ்ந்த தோழர் சண்முகம் அண்ணாச்சி, தமிழில் இடதுசாரி எழுத்து களை அச்சிட்டு, 'நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்' மூலம் வெளிக்கொண்டு வந்தார். இவருக்கு உறு துணையாக இருந்து செயல்பட்டவர் தி.க.சி. இப் பதிப்பகத்தின் மூலம் அடிப்படையான மார்க்சிய நூல்கள் பல தமிழில் மொழியாக்கம் செய்யப் பட்டு அச்சிடப்பட்டன. ஜனசக்தி பிரசுராலயம் 1940களில் செய்துகொண்டிருந்த பணியை 1950 களில் இவர்கள் செய்தார்கள். அவர்கள் வெளியிட்ட சில நூல்கள் வருமாறு: "அரசியல் போதனை மலர்கள்", "பாட்டாளி வர்க்கமும் பாட்டாளிக் கட்சியும்" மற்றும் பல்வேறு லெனின் நூல்கள்.

"வீர நினைவுகள்" (ஜீலியஸ் பூசிக்), "நீல விழியாள்" (கார்க்கி கதைகள்) மற்றும் பல்வேறு படைப்புகள். சீன இலக்கியங்களை தி.க.சி இக்காலத்தில் மொழி யாக்கம் செய்தார். அவை இப்பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தன. நா.வா. மொழியாக்கம் செய்த நூல்களும் இப்பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தன. தோத்தாத்ரி எழுதிய அறிவியல் நூல்களையும் இவர்கள் வெளியிட்டனர்.

1950களில் வளமான இடதுசாரி கண்ணோட்டம் சார்ந்த அச்சு ஊடகம் நெல்லையில் செயல்படுவதற்கு தி.க.சி.யின் பங்களிப்பு முதன்மையானது. இவ்வகையான தகவல்கள் இன்னும் விரிவாகப் பதிவாகவில்லை. அவை முழுமையாக வெளிவரும்போது தி.க.சி. பங்களிப்பின் ஆழத்தைப் புரிந்துகொள்ள முடியும்.'அறிவு' (1936) என்னும் இதழ் சாத்தான் குளம். அ. இராகவன் மற்றும் தோழர். ப. ஜீவா ஆகியோரால் நடத்தப்பட்ட முதல் இடதுசாரி கருத்துநிலை சார்ந்த இதழ் என்று கூறமுடியும். 1937இல் ஜனசக்தி அப்பணியைத் தொடர்ந்து நடந்தத் தொடங்கியது.

1940களில் இறுதியில் 'ஜனயுகம்', 'ஜனநாயகம்', 'முன்னணி' ஆகிய இதழ்கள் இடது சாரி கருத்துச் சார்பில் கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப்பட்டவை. இவ்விதழ்களின் தொடர்ச்சி யாக, இஸ்மத் பாஷா 'சமரன்' (1952) கே.சி.எஸ். அருணாச்சலம் அவர்களின் 'விடிவெள்ளி' (1952), தொ.மு.சி. ரகுநாதனின் 'சாந்தி' (1954), விஜய பாஸ்கரன் அவர்களின் 'சரஸ்வதி (1954) ஆகிய இதழ்கள் ஐம்பதுகளில் வெளிவந்தன. இவற்றின் உச்ச வளர்ச்சியாக 'தாமரை' (1959) வெளிவரத் தொடங்கியது.

இவ்வகையான இடதுசாரி இதழ் களோடு தி.க.சி. கொண்டிருந்த உறவு ஆழமானது. இவ்விதழ்களில் இவர் மேற்கொண்ட பல்வேறு விவாதங்கள், இடதுசாரி கருத்துநிலை சார்ந்தவர் களிடத்தில் தாக்கங்களை உருவாக்கியது. எடுத்துக் காட்டாக சரஸ்வதியில் நடந்த விவாதத்தைக் கூறமுடியும். 'வீர வழிபாடு வேண்டாம்' என்று புதுமைப்பித்தனை விமர்சனம் செய்து தி.க.சி. சரஸ்வதியில் எழுதினார்.

புதுமைப்பித்தன் மறைந்த பின் 1951இல் புதுமைப்பித்தன் மலரை சுந்தரராம சாமி கொண்டு வந்தார். 1948இல் புதுமைப்பித்தன் வாழ்க்கை வரலாற்றை தொ.மு.சி. எழுதி வெளி யிட்டார். இந்தச் சூழலில் புதுமைப்பித்தன் குறித்த தி.க.சி.யின் விவாதங்கள் பல்வேறு தரப்பிலும் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டது. புதுமைப்பித்தன் ஆக்கங்களில் உள்ள 'நம்பிக்கை வறட்சி' எனும் கருத்துநிலையை சோசலிச எதார்த்தவாதக் கண் ணோட்டத்தில் தி.க.சி. அணுகினார். இவ்வகையில்

1950களில் நிகழ்ந்த இடதுசாரிக் கருத்துநிலை சார்ந்த அனைத்துப் பணிகளிலும், கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்து செயல்பட்டவராக தி.க.சி.யைச் கூறமுடியும். விரிவான விவரங்களுடன் இத்தன்மை குறித்து விவாதிக்கும் தேவை இருப்பதாகக் கருதுகிறேன்.

கலை இலக்கியம் தொடர்பான இயக்கப் பணிகள் மற்றும் அச்சு ஊடகம் சார்ந்த செயல் பாடுகள் குறித்து மட்டும் நம்மால் ஓரளவு அறிந்து கொள்ளமுடிகிறது. 1945- 1964 காலத்தில் வங்கி ஊழியராகச் செயல்பட்டதின் மூலம் தொழிற் சங்கவாதியாக தி.க.சி. செயல்பட்டார். அவரது 1948ஆம் ஆண்டு நாட்குறிப்பேட்டில் இச்செயல் பாடுகளுக்குச்சில பதிவுகள் உள்ளன. இது குறித்து தி.க.சி. பின்வரும் பதிவைச் செய்துள்ளார்.

“19 ஆண்டுகளாக, 1945- 1964 வரை வங்கி ஊழிய ராகவும், தொழிற்சங்கவாதியாகவும் தமிழகத்திலும் கேரளத்திலும் நான் பெற்ற அனுபவங்களை ஒரு நாவலாகச் சித்திரிக்க வேண்டும் என்கிற எனது பேராசை, பல்வேறு காரணங்களால் இன்று வரையில் நிறைவேறவே இல்லை”.

தி.க.சி. நாட்குறிப்பு 16: 2014) தி.க.சியின் இந்தப் பக்கம் குறித்து அறியாமல் போனது பெரும் இழப்பு. தொழிற்சங்க ஈடுபட்டால் பல்வேறு ஊர்களுக்கும் அவர் இடமாற்றம் செய்யப்பட்டதும், இறுதியாகக் கொச்சிக்கு இடம் மாற்றம் செய்ததையும் அறி கிறோம். அந்த வாழ்க்கையின் கொடுமையால் அதிலிருந்து 1964இல் வெளியேறவும் செய்தார். தொழிற்சங்க தி.க.சியை திறனாய்வாளர் தி.க.சி.க்குள் காண இயலாமல் போனது மனதில் பாரமாய் அழுத்துகிறது. அன்றைய தொழிற்சங்க வரலாறு என்பது இடதுசாரி இயக்க வரலாறுகளின் முக்கிய மான ஓர் அங்கம்.

1941-64 இடைப்பட்ட கால தி.க.சி.யின் பல்வேறு பயணங்களை மேலே விவாதித் தோம். அடுத்த கட்ட அவரது பயணத்தைப் பதிவு செய்ய முயல்வோம்.

தி.க.சி எனும் ஆளுமையைப் புரிந்துகொள் வதற்கு இளமைக்கால இயக்கச் செயல்பாடுகளில் ஈடுபடத் தொடங்கிய காலம் முதல் வங்கிப் பணியை விட்டுவிட்டு சென்னையில் சோவியத் செய்தித் துறையில் அலுவலராகப் பணியேற்பதற்கு முன்பான காலத்தை (1941- 1964) ஒரு தொகுதியாகக் கொள்ள லாம். சென்னை வாழ்க்கையைத் தொடங்கி, சோவியத் நாடு அலுவலகம், மற்றும் 'தாமரை' இதழ்ப்பணி (1965- 1972) ஆகிய காலத்தை இன் னொரு தொகுதியாகக் கொள்ளலாம். இதில் சோவியத் செய்தித்துறை குறித்த தி.க.சி.யின் பதிவு வருமாறு.

"சோவியத் செய்தித்துறையில் தோழர் ஏ.எஸ். மூர்த்தியின் (சம்பந்த மூர்த்தி) இடையறாத ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் 'சரஸ்வதி விஜய பாஸ்கரன், தொ.மு.சி. ரகுநாதன், மாஜினி, கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் மற்றும் பல நண்பர் களுடன் 25 ஆண்டுகளாக பணியாற்றியதை ஓர் ஆவணமாகப் பதிவு செய்யலாம். அதுவும் என்னால் இயலவில்லை. மிக வருந்துகிறேன்.' (தி.க.சி. நாட் குறிப்பு. 18: 2014). தி.க.சி.யின் தொழிற்சங்க வாழ்க்கை குறித்து அறிய இயலாமல் இருப்பது போலவே அவரது சோவியத் செய்தித்துறை சார்ந்த வாழ்க் கையும் நமக்குக் கிடைக்கவில்லை. தன்னைச் சமூகத்திற்கு ஒப்படைத்த மனிதர்களின் வாழ்க்கை குறித்தத் தரவுகள் இவ்விதம் அறிய முடியாமல் போகிறது.

தி.க.சி.யின் 'தாமரை' இதழ்ப் பங்களிப்பு அனைத்து தரப்பிலும் விதந்து பேசப்படுகிறது. அவரது தாமரை இதழ் சார்ந்த பணிகளின் மூலம், கண்டறியலாகும் ஆளுமைக் கூறுகளை நாம் பின்கண்டவாறு தொகுக்கலாம்.

- 1950களில் பல்வேறு இடதுசாரி கலை இலக்கிய அமைப்புகளின் செயல்பாட்டில் தன்னை இணைத்துக் கொண்டவர் தி.க.சி. இந்த மரபின் தொடர்ச்சியாக, தாமரை இதழ் மூலம் அவர் பதிவு செய்திருக்கும் பல்வேறு கலை இலக்கிய அமைப்புகள் தொடர்பான விவரணங்கள்.

- பாரதி மீது அவருக்கிருந்த ஈடுபாடு காரண மாக 'தாமரை' இதழ் வழி கட்டமைந்த 'பாரதி இயல் குறித்த ஆக்கங்கள்.

- சோவியத்செய்தித் துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பதை வாய்ப்பாகப் பயன்படுத்தி, சோவியத் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகிய பிற குறித்தப் பதிவு களை 'தாமரை' இதழில் இடம் பெறச் செய்தமை.

- கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட்ட பல் வேறு தலைவர்களின் அரிய ஆக்கங்களை தாமரையில் வெளிவரச் செய்த அரிய பதிவுகள்.

- தமிழ் இலக்கியம் படித்துக் கொண்டிருந்த மற்றும் பயிற்றுவித்த தமிழாசிரியர்கள் ஆக்கங்களை வெளியிட்டுள்ள பாங்கு.

- 'கதைக்கொரு கரு' என்னும் தொடர் மூலம் பல்வேறு படைப்பாளிகளின் படைப்புச் சூழல் குறித்துப் பதிவாகியுள்ள படைப்பு வரலாறு.

- ஈழத்துப் படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு முதன்மை கொடுத்து வெளியிட்ட சிறப்பு.

- அட்டைப்படங்களில் படைப்பாளிகளின் நிழற்படங்களை வெளியிட்டு அங்கீகரித்தத் தன்மை.

- 'எழுத்து' இதழ் (1959) வழி உருவான புதுக் கவிதை மரபின் இன்னொரு பிரிவினரை, முதன்மைப்படுத்தி வெளியிட்டதின் மூலம், புதுக்கவிதை மரபில் புதிய மரபுகளை இனம் காட்டியமை.

- 'மலரும் அரும்புகள்' எனும் தலைப்பில் முகமறியாத புதிய சிறுகதைப் படைப்பாளி களை இனம் கண்டு அவர்களது ஆக்கங் களை வெளியிட்ட மிக அரிய நிகழ்வு.

தி.க.சி. பொறுப்பில் (1965 - 1972) சுமார் எட்டு ஆண்டுகள் தாமரை இதழில் ஆக்கங்கள் வெளி வந்திருப்பதைக் காண முடிகிறது. மேலே தரப் பட்டுள்ள பல்வேறு கூறுகளையும் உரையாடலுக் குட்படுத்த தி.க.சி காலத் தாமரை இடமளிப்பதைக் காண்கிறோம். தமிழக இடதுசாரிக் கண்ணோட்டம் சார்ந்த ஆக்கங்கள் குறித்த வரலாற்றில் இவை பெறு மிடம் குறித்த உரையாடலை மேற்கொள்ளலாம்.

பொதுவெளியில் செயல்படத் தொடங்கிய காலம் முதல் இயக்கம் சார்ந்து செயல்படுவதில் நம்பிக்கையுடையவராக தி.க.சி. இருந்தார். 1941- 1964 இடைப்பட்ட காலத்தில் அவரது செயல் பாடுகள் மூலம் இதனைட் புரிந்துகொள்ள பல் வேறு நிகழ்வுகளை முன்னர் விவாதித்தோம். அவர தாமரையில் பணியாற்றிய காலத்தில், இத்தன்மையை மேலும் வளர்த்தெடுத்துள்ளார்.

தமிழ்நாடு வாசகர் பேரவை (தாமரை: மார்ச். 1968), பூம்பொழில் இலக்கிய வட்டம், கோவை (நவம். 1968) ஸ்ரீவில்லிப்புத்தூர் இலக்கிய வட்டம் (அக். 1970), பொள்ளாச்சி மக்கள் எழுத்தாளர் மன்றம். (அக் 1970), திருச்சி மக்கள் இலக்கியக் குழு (அக். 1970), இராசபாளையம் இலக்கிய வாசகர் குழு (மே 1970), பரமக்குடி மக்கள் இலக்கிய மன்றம் (மே 1970), தமிழ் இலக்கியப் பேரவை, பெங்களூர் (ஜூன் 1970) மக்கள் எழுத்தாளர் சங்கம், சென்னை (ஜூலை 1971) சென்னை ஆகிய அமைப்புகள், கலை இலக்கியம் தொடர்பாகச் செயல்பட்ட பதிவு களைத் தாமரை இதழ்களில் காண முடிகிறது. இவ்வமைப்புகளில் ‘தாமரை’ இதழ்கள் குறித்த விமர்சனக் கூட்டங்கள் நடைபெற்றதை அறி கிறோம். சமகாலத்தில் வெளிவந்த நாவல்கள் குறித்த திறனாய்வுக் கூட்டங்கள் நடைபெற்றதை அறிய முடிகிறது.

எடுத்துக்காட்டாக, திருச்சி மக்கள் இலக்கியக்குழு, ஈழத்து எழுத்தாளர் செ.கணேசலிங்கம் அவர்களோடு நடத்திய உரையாடல் பதிவாகியுள்ளது. மதுரை வாசகர் வட்டத்தில் ‘தீபம்’ இதழில் தொடராக வெளி வந்த அசோகமித்திரனின் ‘கரைந்த நிழல்கள்’ குறித்த விமர்சனக் கூட்டம் நடைபெற்றதை அறிகிறோம். இதைப்போல் தி. ஜானகிராமனின் ‘அம்மா வந்தாள்’ நாவலை அந்த ஆண்டின் சிறந்த நாவலாக இக்குழு பரிந்துரை செய்த செய்தியும் இடம்பெற்றுள்ளது. கோவையில் இயங்கிய பூம் பொழில் இலக்கிய வட்டம், புதுக்கவிதை குறித்த இரண்டு நாள் கருத்தரங்கம் நடத்தியிருப்பதை அறிகிறோம். இதனை முல்லை ஆதவன் முன்னின்று நடத்தியுள்ளார்.

மேலே குறித்துள்ள சிறுசிறு அமைப்புகளின் செயல்பாடுகளை தி.க.சி. பதிவு செய்துள்ளார். இவ்வமைப்புகளில் செயல்பட்டவர்கள் பின்னர்

இடதுசாரி கண்ணோட்டமுடையவர்களாக செயல் பட தொடங்கியிருப்பதைக் காண்கிறோம். கலை இலக்கியச் செயல்பாடுகளை மிக விரிந்த தளத்தில் இடதுசாரிப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டவர்களை தாமரை இதழின் மூலம் பதிவு செய்த செயல், மிக முக்கியமானது. இவ்வகையான அமைப்புகள், தமிழில் இடதுசாரி மரபு சார்ந்த ஆக்கங்கள் வளருவதற்கு தளம் அமைத்ததை, நுணுக்கமான விவரங்கள் மற்றும் கள ஆய்வுகள் வழி உறுதிப்படுத்த முடியும். தி.க.சி. என்ற ஆளுமையின் தொலைநோக்காக இதனைக் கருதமுடியும்.

‘தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு’ என்று சிங்காரவேலர் வாழ்க்கை வரலாற்று நூலில் 1927- 1930 ஆம் ஆண்டுகளில் சுயமரியாதை இயக்கத்தில் மூலம் நூற்றுக்கணக்கான படிப் பகங்கள் தலைவர்களின் பெயர்களில் தமிழகத்தில் உருவாக்கப்பட்டது குறித்து சி.எஸ். சுப்பிர மணியன் அவர்கள் பதிவு செய்துள்ளார். தமிழ்ச் சூழலில் அன்று உருவாகிய சுயமரியாதை இயக்க எழுச்சியும் 1960களில் உருவான இடதுசாரிக் கண்ணோட்ட ஆக்க இலக்கிய உருவாக்கத்தையும் இணைத்துக்காண வேண்டும். தமிழ்ச் சமூகத்தின் நுண் அலகுகளில் உருவான சமூக மாற்றமாக இதனைப் புரிந்துகொள்ள முடியும். அவை மேலும் மேலும் தொடர்ந்தனவா? இல்லையா? என்பது வேறு விவாதம். ஆனால் இவ்வகையான கலை இலக்கிய அமைப்புகள் குறித்தப் பதிவை தாமரை செய்திருப்பதும் அதற்கு மூலமாக தி.க.சி. இருந்ததும் இன்றைய சூழலில் விதந்து பேச வேண்டிய ஒன்றாகக் கருதவேண்டும்.

பாரதி மீது தி.க.சி. கொண்டிருந்த மிக ஆழமான ஈடுபாட்டின் மூலம், ஜீவா வளர்த்தெடுத்த பாரதி இயலை அதன் அடுத்த கட்டத்திற்குக்கொண்டு சென்றுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் தாமரை இதழ் பாரதி தொடர்பான இதழாகவே வெளிவந்திருப்பதைக் காண்கிறோம். 1950களில் ‘சரஸ்வதி’ இதழ் மூலம் பாரதி ஆய்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தொ.மு.சி, தாமரை இதழ் களில் பாரதி ஆய்வுகளை மிக விரிவாக மேற் கொண்டிருக்கிறார்.

பாரதி இயலில் தொ.மு.சி.யின் தனித்த இடத்தை அவரது ‘பாரதி: காலமும் கருத்தும்’, நூல்வழி அறியமுடியும். அதில் இடம் பெற்றுள்ள பல

கட்டுரைகள் தாமரை இதழ்களில், தி.க.சி. பொறுப்பாக இருந்தபோது வெளிவந்தவை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்; செப். 1966 ‘பாரதி மலரில் பாரதி குறித்துக் கட்டுரை எழுதி யவர்கள், ரகுநாதன், பேரா. எஸ். இராமநாதன், இளம்பாரதி, ஆர். சூடாமணி, நா.பார்த்தசாரதி, பெ.நா. அப்புசாமி உள்ளிட்ட 12 பேர். இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. இவ்வகையில் ஜீவாவுக்குப் பிறகு பாரதி குறித்த ஆய்வில் மிகப் பெரும் வீச்சை உருவாக்கியது. தாமரை என்று சொல்லமுடியும்.

1967 செப். தாமரை பாரதிதாசன் மலராக வெளிவந்தது. இடதுசாரி கண்ணோட்டத்தை முதன்மைப்படுத்திப் பேசியவர்கள், பாரதிதாசனை மிகவும் காலம் கழித்தே அங்கீகரித்தார்கள். ஆனால் தி.க.சி. தனது குருநாதர் வல்லிக்கண்ணன் மரபில் பாரதிதாசனை தொடக்கக் காலம் முதல் கொண் டாடினார். இதன் வெளிப்பாடே பாரதிதாசன் மலர். பாரதிதாசன் குறித்த இம்மலரில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் விதந்து பேசத்தக்கவை. பாரதிதாசனும் இடதுசாரி இயக்கமும் என்று நாம் அடையாளப்படுத்துவோமானால் அதில் முதல் நபராக தி.க.சி. செயல்பட்டிருப்பது வரலாற்றுப் போக்கில் தனித்துப் பேசத்தக்கது.

1967 அக். தாமரை இதழ் சோவியத் யூனியன் பொன்விழா மலராக வெளிவந்தது. சோவியத் படைப்பாளிகள் பலரது ஆக்கங்களை வெளியிட்ட தோடு, சோவியத் விமர்சகர்களின் கலை இலக்கியம் தொடர்பான கட்டுரைகள் தாமரை இதழில் இந்தக் காலத்தில் தொடர்ந்து வெளிவந்தன. சோசலிச எதார்த்தவாதம், சோசலிச எதார்த்த விமரிசன வாதம் ஆகிய பல கோட்பாடுகள் குறித்து பல கட்டுரைகள் வெளிவந்தன.

தமிழ் இலக்கியம் மற்றும் கலை குறித்து ஆய்வுகள் செய்த சோவியத் ஆய்வாளர்கள் தாமரையில் அறிமுகப்படுத்தப் பட்டனர். கார்க்கியின் கதைகள் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டன. சோவியத் செய்தித் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்ததன் மூலம் பெற்ற வளங்களை தி.க.சி. தாமரையில் பதிவு செய்திருக்கிறார். 1950களில் தமிழ்ச் சூழலில் பரவலாக அறியப்பட்டிருந்த சோவியத் கலை இலக்கியம் தொடர்பான கூறுகள் 1960களில் தாமரை மூலமாக நிலைபேறு கொள்வதில் தி.க.சி.யின் இடம் தனித்தது. மிக முக்கியமானது.

கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேரத் தொண்டர்களாகவும் தலைவர்களாகவும்
பணியாற்றிய பலரின் ஆக்கங்களை தாமரை வெளிக்கொண்டு வந்துள்ளது. பேரா. நா.வானமாமலை, தோழர் சிந்துபூந்துறை சண்முகம், தோழர்கள் ப. மாணிக்கம், மணலி. கந்தசாமி கே. பாலதண்டாயுதம், ஆர். நல்லகண்ணு, கே.டி.கே. தங்கமணி, பேரா. கே.இராமநாதன் மற்றும் தோழர்கள் தா. பாண்டியன், பொன்னி வளவன் ஆகியோர் இக்காலத்தில் தாமரையில் தொடர்ந்து எழுதியிருப்பதைக் காண்கிறோம். கட்சியில் நேரடியாகச் செயல்படும் தோழர்கள் கலை - இலக்கிய மரபு குறித்துக் கொண்டிருந்த கருத்துநிலை பதிவாகியுள்ளது. தோழர் கே. பால தண்டாயுதம் அவர்களின் தத்துவார்த்த உரை யாடல்கள் சார்ந்த கட்டுரைகள் தரம் மிக்கவை. தாமரையில் இக்காலத்தில் அவர் எழுதியவை பின்னர் நூல்வடிவில் வெளிவந்தன. மனிதநேயம் என்பதை தத்துவ நிலைப்பாட்டிலிருந்து உரை யாடலுக்கு உட்படுத்தியது அவரது எழுத்து.

தமிழ் மாணவர்களாகவும் தமிழாசிரியர் களாகவும் இருந்த பலர் தாமரை இதழில் எழுதினர். எழில் முதல்வன், ஆறு. அழகப்பன், முல்லை ஆதவன், தா.வே. வீராசாமி, க.ப.அறவாணன், கி. நாச்சிமுத்து ப. மருதநாயகம், அ. அ. மணவாளன், முத்துசண்முகம் ஆகிய பிறர் இக்காலங்களில் பல்வேறு கட்டுரைகளை தாமரையில் எழுதினர். நாட்டார் வழக்காற்றியல், புதுக்கவிதை ஆகிய பிற துறைக் கட்டுரைகள் அவை. 1959-இல் தாமரை தொடங்கியபோதே, தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களை தோழர். ஜீவா தாமரையில் எழுதச் செய்திருப்பதைக் காண்கிறோம். அந்த மரபை தி.க.சியும் தொடர்ந்து செயல்படுத்தி வந்து உள்ளார் என்பதைக் காண்கிறோம்.

நவீனப் படைப்பாளிகள் கதை எழுதும் சூழல், மனநிலை ஆகிய பிறவற்றைப் பதிவு செய்யும் ‘கதைக்கொரு கரு’ எனும் தொடரை எழுத்தாளர் களைக் கொண்டு எழுதச் செய்து வெளியிட்டார். கி. ராஜநாராயணன் தொடங்கி பல எழுத்தாளர்கள் இப்பகுதியில் எழுதியுள்ளனர். இப்பகுதியை தொகுத்துத் தனிநூலாகக் கொண்டு வரும் தேவை இருக்கிறது. ஈழத்துப் படைப்பாளர்கள் பலரும் தாமரையில்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். செ.கணேசலிங்கன், கே. டேனியல், ஆழியான், பெனடிக் பாலன், செ. யோகநாதன் டொமினிக் ஜீவா, நீர்வை. பொன்னையன் ஆகியோருடைய சிறுகதைகள் தாமரையில் வெளிவந்துள்ளன. 'மலரும் அரும்பு' எனும் பகுதியிலும் சிறுகதை மலரிலும் (1967-ஜூலை) இவர்களுடைய கதைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்தில் இடதுசாரிக் கண் ணோட்டம் சார்ந்த ஆக்கங்களை வெளிக்கொண்டு வருவதற்கான சூழல் குறைவாக இருந்தபோது, தாமரை அந்த இடத்தை நிறைவு செய்தது.

செ. கணேசலிங்கம், கே. டேனியல் போன்றோர் ஆக்கங்கள் தமிழக இதழ்களில் மிகுதியாக வெளிவந்தன. இதில் தாமரையின் இடம் தனித்தது. இவ்விதமான நிகழ்வுக்கு பின்புலமாக தி.க.சி. என்ற மனிதர் இருந்தார் என்பதை வரலாற்றுக் கண் ணோட்டத்தோடு பார்க்கும்போது அதன் முக்கியத் துவத்தை இன்று நாம் உணரமுடிகிறது.

தாமரை அட்டைப்படங்களில் பெரும்பாலான படைப்பாளிகளின் படம் இடம்பெறத் தொடங்கியது இக்காலத்தில். பல்வேறு சோவியத் படைப் பாளர்கள், பாரதி, பாரதிதாசன் படங்களை வெளி யிட்டதை நாம் தனித்த ஒன்றாகக் கருதமுடியாது. ஆனால், கே.சி.எஸ்.அருணாச்சலம், கு. அழகிரி சாமி, ஆர். சண்முகசுந்தரம், நா. வானமாமலை, டொமினிக் ஜீவா, வில்லிசைக் கலைஞர் கார்க்கி மற்றும் பிச்சைக் குட்டிப் பிள்ளை, சிந்துபூந்துறை அண்ணாச்சி ஆகியோரின் படங்கள் இடம்பெற்ற நிகழ்வை தனித்துவமாகப் பார்க்கும் தேவை இருப்பதாகக் கருதுகிறேன்.

சமகாலத்தில் செயல்படு வோரை இவ்வகையில் அங்கீகாரம் செய்யும் மரபு இடதுசாரி இயக்கங்களில் குறைவாகவே இருந் துள்ளது. சமகாலத்தில் செயல்படுவோரைக் கொண்டாடுவதன் மூலம், இயக்கச் செயல்பாடுகள் வீரியமாக வளர வாய்ப்பு உண்டு. இந்தப் பணியை தி.க.சி. செய்திருக்கிறார். நா. வா. அவர்களின் ஐம்பது ஆண்டு அகவையைக் கொண்டாடும் அட்டைப்படம் விதந்து பேசவேண்டிய ஒன்று.

1959இல் வெளிவரத் தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதை மரபில் தனக்கென தனி இடத்தைக் கொண்டு செயல்பட்டது. இந்த மரபின் தொடர்ச்சியாகவும் அதே வேளையில் மாற்றாகவும் செயல்பட்ட பாங்கு

தி.க.சி. கால தாமரைக்கு உண்டு. நா. காமராசன், மீரா. புவியரசு, சிற்பி, பரிணாமன், கே. முருகையன், கோவேந்தன் ஆகிய பலரின் கவிதைகளை வெளியிட்டதோடு, நா.காமராசன் கவிதைகள் போன்றவை குறித்த விரிவான விமர்சனங்களும் தாமரையில் வெளி வந்தன. இடதுசாரிக் கண்ணோட்டமுடைய அறிஞர் களான நா. வானமாமலை போன்றோர் புதுக் கவிதை பற்றிக் கொண்டிருந்த விமரிசனங்களை உள்வாங்கியதோடு, அந்த மரபு அடுத்த நிலைக்கு வளருவதற்கு தாமரை கால்கோல் செய்தது. இக் கவிஞர்கள் குறித்த தி.க.சி.யின் பதிவுகள் சிறப் பாகவே இருந்ததைக் காணமுடிகிறது. நா. காம ராசன் ஆக்கங்கள் குறித்து தி.க.சி. செய்துள்ள பதிவு வருமாறு:

"'பகுத்தறிவு, சோசலிசம் என்கிற அடிப்படை இலட்சியங்கள் எனக்குண்டு. அவற்றைக் கலா போதையோடு நான் பாடுவேன்' என்று கருப்பு மலர்கள் முன்னுரையில் காமராசன் கூறுகிறார். இதை நான் உளமார வரவேற்கிறேன். பாராட்டு கிறேன். ஆனால் அந்தக் 'கலாபோதை' அவரை மாயாவாதம் (ஆலஎவ|உஎைஅ), அப்பாலைத் தத்துவம் என்ற சரிவுப் பாதைகளில் சில வேளைகளில் தள்ளி விடுகிறது என்பதையும், இந்தத் தத்துவங்கள் சோசலிசத்திற்கும் பகுத்தறிவுக்கும் முரணானவை என்பதையும் தோழமை உணர் வோடு நான் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

" (தாமரை: ஜூலை. 1971). தி.க.சி. நா.காம ராசன் ஆக்கங்களில் நம்பிக்கை வாதமும் நம்பிக்கையின்மை வாதமும் மாறிமாறி வருவதையும் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வகையில் உருவான நா. காம ராசன், மீரா, புவியரசு போன்றவர்கள் இதற்குப் பின் உருவான வானம்பாடிக் கவி மரபில் மிகத் தாக்கம் செலுத்தினார்கள்: எழுத்து இதழ்க் கவி மரபுக்கு மாற்றாக வானம்பாடிக் கவிமரபு உருவானது. இதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததில் இக்காலத் தாமரையின் பங்கு மிக முக்கியமானது. நவீன தமிழ்க் கவிதை வரலாற்றில் எழுத்து மரபிற்கு மாற்றான வானம்பாடி கவிதை மரபு என்ற வரலாற்று நிகழ்வை தாமரை சாத்தியப்படுத்தி யிருப்பதை நாம் இதுவரை பதிவு செய்யாமல் விட்டுவிட்டோம். இந்த வரலாற்றுக்கு மூலவராக தி.க.சி செயல்பட்டிருப்பதைப் பதிவு செய்யும் கடமை நமக்குண்டு.

சே. டேனியல், வல்லிக்கண்ணன், வீர. வேலுச் சாமி, சார்வாகன், நீல. பத்மநாபன், கி. ராஜ நாராயணன், கர்ணன், வை. ரங்கநாதன், செ. கணேசலிங்கம், பெனடிக் பாலன், ஆ. மாதவன், அசோகமித்திரன், ஆர். சூடாமணி, ம. இராஜராம், அழ. கிருஷ்ணமூர்த்தி, உ. ரா. வரதராசன், பா. செயப்பிரகாசம், வண்ணநிலவன், ஆழியான், தஞ்சை பிரகாஷ், பொன்னீலன், ம.ந.ராமசாமி, செ. யோகநாதன், வேந்தன், சே. இராமசாமி, ஆ. பழனியப்பன், வள்ளி, அபராஜிதன் பூமணி, சி.ஆர். இரவீந்திரன், டி. செல்வராஜ், முத்தானந்தன், ரங்கநாதன், அகஸ்தியர், நீர்வை. பொன்னையன், நாகை. ப. ஜீவா, களந்தை பீர் முகமது ஆகிய பலரின் சிறுகதைகள் தாமரையில் இக்காலத்தில் வெளிவந்துள்ளன. இப்பட்டியல் முழுமையானது அன்று. விடுபாடுகள் உள்ளன.

தனது முதல் படைப்பை எழுதுபவர்களை 'மலரும் அரும்பு' என்னும் தலைப்பில் கதைகள் வெளிவந்துள்ளன. இப்பகுதியில் இப்பட்டியலில் உள்ள வீர.வேலுச் சாமி, உ. ரா. வரதராசன், வண்ணநிலவன், பூமணி, வேந்தன், ப. ஜீவா, வள்ளி, ம.ந.ராமசாமி, களந்தை பீர் முகமது ஆகிய பலர் உள்ளனர். இதுவும் முழுமையன்று. முன்னரே கதை எழுதியவர் களோடு முதன் முதன் கதை எழுதியவர்களை 'மலரும் அரும்பு' என்னும் அடையோடு வெளி யிட்ட தாமரையின் செயல்பாடு, தமிழ்ப் படைப்பு வரலாற்றில் மிகவும் விதந்து பேச வேண்டிய ஒன்று. இதற்குப் பின்புலமாக தி.க.சி. இருந்தார். இப்படைப்பாளிகள் யார்? என்ற உரையாடல் முக்கியமானது.

1930கள் தொடங்கி தமிழில் உருவாகி வந்த ஆக்க இலக்கிய வாணர்கள் என்போர் ஆங்கில மொழி வழி வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள். அதனையே பழக்கமாகவும் கொண்டிருந்தனர். தமிழ்ப்புனைவுலகம் உருப்பெற்ற சூழலில் அத் தன்மை தவிர்க்க முடியாத ஒன்று. இயல்பான நடைமுறையும்கூட. இந்தத் தொடர்ச்சியில் தான் இந்தியாவில் உள்ள பிறமொழி இலக்கியங்களும் ஆங்கிலமொழி இலக்கியங்களும், சோவியத், சீனம் போன்ற நாடுகளிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்ட இலக்கியங்களிலும் தமிழ்ச்சூழலில் வாசிக்கப்பட்டன.

தமிழில் உருவான புதிய புனைகதையாளர்களும் இந்தப் பின்புலத்திலிரு

தான் உருவானார்கள். தாமரை அறிமுகப்படுத்திய படைப்பாளிகள் மேற்குறித்த நிலையில் முற்றிலும் வேறானவர்கள். ஆங்கிலமொழி வாசிப்பதற்கான வாய்ப்போ, பயிற்சியோ இவர்களுக்குக் கிடைக்க வில்லை. புதுமைப்பித்தன், கு. அழகிரிசாமி, கி. ராஜநாராயணன் மரபுசார்ந்த கதைகளை வாசித்தவர்கள் இவர்கள். முதல் தலைமுறை எழுத்துப்பயிற்சி பெற்ற குக்கிராமங்களைச் சேர்ந்த வர்கள். இவர்களுடைய ஆக்கங்கள் புதுமைப் பித்தன் மரபின் தொடர்ச்சியாக உருப்பெற்றவை. இதில் தாமரை முன்னத்தி ஏர் பிடித்தது. இதற்கு மூலமாக இருந்தவர் தி.க.சி. தி.க.சி.யின் இந்தப் பங்களிப்பை தமிழ்ச்சமூகம் அங்கீகரித்துள்ளது.

தமிழ்ப் படைப்புலக வரலாற்றில் தி.க.சி.க்கு மிக தனித்த இடமிருக்கிறது. அது தமிழ்ப்புனைவு மரபை மடைமாற்றம் செய்த செயல். இந்தச் செயலே பின்னர் பெரும் மரபாக வடிவம் பெற்று உள்ளது. இந்தப் பின்புலத்தில் தி.க.சி என்னும் ஆளுமை தமிழ் புனைகதை மரபை ஆல்போல் தழைக்கச் செய்தாலும் ஆலமரத்தின் கீழுள்ள விதையாக மறைந்து, ஒதுங்கி, தன்னை முன்னிலைப் படுத்தாத, அவரது அறமரபை, தமிழ்ச்சமூகம் கொண்டாட வேண்டும். கொண்டாடும். இந்த மரபை உருவாக்கிய தி.க.சி. என்னும் மனிதன் என்றும் நினைக்கப்படுவார். இத்தன்மை குறித்து தி.க.சி. அவர்களின் பதிவு பின்வருமாறு.

“நான் சோவியத் செய்தித்துறை ஆசிரியர் குழுவில் ஒருவனாகப் பணியேற்றேன். இங்கு பணியாற்றிய காலத்திலேயே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கலை- இலக்கிய இதழான ஜீவாவின் தாமரையில் 1965- 1972 வரையில் பொறுப்பாசிரி யனாக கடமையாற்றும் பேறும் எனக்குக் கிடைத்தது. இந்த மகத்தான பொறுப்பை எமக்களித்த கட்சித் தலைமைக்கு என்னுடைய நன்றி என்றும் உரியது.

‘தாமரையுகம்’ என்ற பெயரில், தாமரையின் சாதனைகள் பற்றியும் முற்போக்கு கலை இலக்கி யத்தின் வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு பற்றியும் ஒரு தனி நூலே எழுதலாம். அந்தப் பொறுப்பை தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பதிவு செய்யும் ஆய்வாளர்கள் வசம்விட்டுவிடுகிறேன்.’

(தி.க.சி.டைரி குறிப்புகள். 18:2014) தி.க.சி. யின் இந்த வேண்டுகோளை நிறைவேற்றும் பொறுப்பு நமக் குண்டு. அன்றைய சூழலில் 'எழுத்து' (சி.சு.செல்லப்பா) "தீபம்" (1965 - நா. பார்த்தசாரதி) 'இலக்கிய வட்டம்' (1964. க.நா.சு) 'கணையாழி' (1965) 'கண்ண தாசன்' (1968) ஆகிய பல இதழ்கள் வெளிவந்தன.

இதே காலத்தில் தி.க.சியின் தாமரையும் வெளி வந்தது. மேற்குறித்த இதழ்களிலிருந்து தாமரை எங்கே வேறுபட்டு, எங்கே ஒன்றிணைந்து, தமிழின் நவீன கலை இலக்கியச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்தது என்னும் வரலாறு மிக முக்கிய மானது என்பதைப் பதிவு செய்ய வேண்டும். அந்த வரலாற்றுக்கு மூலமாக தி.க.சி என்னும் மனிதர் செயல்பட்டு இருக்கிறார். தாமரையின் ஒன்பதாம் ஆண்டு நிறைவுகுறித்த தலையங்கம் பின்வருமாறு அமைகிறது. "புதிய சிந்தனைகள், புதிய வடிவங்கள், புதிய முயற்சிகள் அத்தனைக்கும் தாமரை இடம் கொடுத்துள்ளது.

இலக்கியத் தரம் மிக்க கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஆராய்ச்சிகள் முதலிய பல்சுவைப் படைப்புகளையும் தாமரை வாசகர் களுக்கு ஈந்துள்ளது. தரமுள்ள எழுத்துக்கும் தமிழ் இலக்கிய உலகில் இடம் உண்டு என்ற நம்பிக்கையை படைப்பாளிகளிடையில் தோற்று வித்தது தான் தனது பெரும் சாதனையாக தாமரை எண்ணுகிறது." (ஜூலை 1968) இந்தப் பதிவை தி.க.சி. செய்திருக்கலாம். இந்தத் தன்மை முழுமையாக தாமரையில் நடைமுறைப்படுத்தப் பட்டதை தி.க.சிக்கான அஞ்சலியாகப் பதிவு செய்கிறேன்.

இவ்வகையில் தாமரையில் இக்காலத்தில் தி.க.சி எழுதியது குறைவு. எழுதச் செய்யும் பணியே அவரது நோக்கமாக இருந்தது. 1941-1964 மற்றும் 1965-1972 கால தி.க.சியை நாம் உரையாடலுக்கு உட்படுத்தினோம். 1972-2014 என்ற பிற்கால அவரது வாழ்க்கை குறித்து எழுதுவதற்கான தரவுகளைத் தேட வேண்டியுள்ளது. விரிவான தேடலில் அதனைப் பதிவு செய்யவேண்டும். தரவுகளின்றி எப்படிப் பதிவு செய்வது? ஆனால் இந்தக் காலம் குறித்து தி.க.சி கூறியுள்ள பதிவை இங்கு

நினைவுப்படுத்திக்கொண்டு அவருக்கான அஞ்சலியை நிறைவுசெய்ய விரும்புகிறேன். அப் பகுதி வருமாறு:

“இந்தக் கால் நூற்றாண்டில் வெளிவந்த தீபம், கணையாழி, கண்ணதாசன், சி.சு.செல்லப்பாவின் எழுத்து, க.நா.சு.வின் இலக்கிய வட்டம், கோமலின் சுபமங்களா, செம்மலர் கோவையிலிருந்து வெளி வந்த வானம்பாடி முதலிய இதழ்களின் வளர்ச்சிக்கும் எனது பங்களிப்பை செலுத்தியதில் நான் மிகுந்த மனநிறைவடைகிறேன். அதேபோல் மதிப்பிற் குரிய அன்பர்கள் ப.லட்சுமணன் - பாரதி நடத்தி வந்த ‘இலக்கியச் சிந்தனை’ அமைப்பின் மாதாந்திர கூட்டங்களில் எழுத்தாளர் என்.ஆர்.தாசன் போன்ற நண்பர்களுடன் நான் பங்கேற்றதுண்டு. இந்த வருடங்களில்தான் எனது தேடல்களும் படைப் பாற்றல்களும் பகிர்தல்களும் சிகரத்தை நோக்கிச் சென்றன.

தமிழ்ப்படைப்பாளிகள், பதிப்பாளர்கள், ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள் ஆகியோரின் பேரன்பையும் அங்கீகாரத்தையும் நான் பெற்றேன்.” (தி.க.சி. நாட்குறிப்புகள் 18-19:2014) இந்தப் பதிவு மூலம் ஓரளவு இந்த காலத்திய தி.க.சியை புரிந்துக் கொள்ளலாம். தமிழ் தேசிய மரபிலிருந்து இந்திய தேசிய மரபை புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தமது இறுதிக்காலங்களில் அவர் பதிவு செய்து உள்ளார். இதுதொடர்பான தரவுகளைக்கொண்டு இக்கட்டுரையை வேறொரு சந்தர்ப்பத்தில் விரித்து எழுத வேண்டும். தி.க.சி. என்னும் ஆளுமை தமிழ்ச் சமூக வரலாற்றில் என்றும் பேசப்படும் ஆளுமை என்பதை அவருக்கான அஞ்சலியாக பதிவு செய் வோம். என்றும் தி.க.சி. நம்மோடிருப்பார்.

குறிப்பு: இக்கட்டுரை எழுத என்னுடைய சேகரிப்பில் உள்ள 1960-1975 கால தாமரை இதழ்கள் பெரிதும் உதவியாக அமைந்தன. தி.க.சி.யின் 90-ஆம் ஆண்டு பிறந்தநாளில் வெளியிட சந்தியா பதிப்பக நண்பர் நடராசன், தி.க.சி., நாட்குறிப்புகள் என்னும் 1948-ஆம் ஆண்டுக்கான அவரது நாட்குறிப்பேட்டை மிகக் குறுகிய கால அவகாசத்தில் எனக்குக் கொடுத்தார். இக்கட்டுரை உருவாக்கத்தில் இந்நூலின் பங்களிப்பு பெரிது. நண்பர் நடராசனுக்கு நன்றி. பனுவல் புத்தக நிறுவனத்தின் நண்பர்கள் சிவ.செந்தில் நாதன், அமுதரசன் ஆகியோர் 1.4.2014 அன்று தி.க.சிக்கு

இரங்கல் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். அங்கு நான் பேசிய பேச்சின் விரிவே இக்கட்டுரை. அவர்களுக்கும் நன்றி.

தி.க.சி- உரையாடலில் வாழ்ந்தவர்

https://www.jeyamohan.in/172805/



தமிழில் மிக முக்கியமான பல படைப்பாளிகள் பற்றிய செய்திகளே கிடைக்காத சூழலில் விமர்சகரான தி.க.சிவசங்கரனின் வாழ்க்கை ஏறத்தாழ முழுமையாக பலரால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. அவருடைய கம்யூனிஸ்டுக் கட்சிச் சார்பு அதற்கு ஒரு காரணம் என்றாலும் வாழ்நாள் முழுக்க அடுத்த தலைமுறையுடன் இலக்கிய உரையாடலை நிகழ்த்த அவர் தயாராக இருந்ததே அதைவிட முதன்மையான காரணம் என்று படுகிறது.

தி.க.சி.

ஏகலைவனை உருவாக்கும் தபால் கார்டு!

இரா.மோகன்ராஜன்

https://keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/26457-2014-05-06-09-00-54

இத்தனை வருடங்களும்
இதன் நிழல் வாங்கி
இதன் பழம் தின்னும்

பறவைகள் பார்த்து
இதன் துளிரில் துளிர்த்து
சருகில் சரசரக்க நடந்து
திரிகிறவன் எனினும்
இந்த மரத்தை முழுதாகப்
பார்த்ததில்லை என்று புரிய
நேற்றுவரை ஆயிற்று
ஆயுசு போதாது

ஒரு மரம் பார்க்க.

-

கல்யாண்ஜ

திருநெல்வேலி கணபதி சிவசங்கரன், சுருக்கமாக தி.க.சி என்று இலக்கிய குடும்பத்துள் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம், தவிர்க்க இயலாத குரலாக ஒலித்த மூதறிஞர் தி.க.சிவசங்கரனின் மறைவு ஒரு மனோரஞ்சித மலரைப் போன்ற உதிர்வின் மணமிக்கதாகும்.

பட்டய அறிஞர்கள் கோலோச்சிய காலத்தில் பட்டறிவைக் கொண்டு இலக்கிய வெளியில் புகுந்த தி.க.சி. விரைவிலேயே தனக்கான இடத்தை மென்மையும், திடமுமாக தக்கவைத்துக் கொண்டார். 1942-ல் எழுத வந்து 1952 க்குள் சிறுகதை எழுதுவதை நிறுத்திக் கொண்டதை தமிழ் இலக்கியத்திற்கு நல்ல காலம் எனவும், 'களவும் கற்று மறப்பது போல என்று தான் விமர்சனத் துறைக்கு மாறிக் கொண்டதை வேடிக்கையாக குறிப்பிடுவார். இவரை எழுத்துலகில் சுகப்பிரசவம் செய்த மூத்த இலக்கியவாதி வல்லிக்கண்ணனைப் பின் பற்றியதாக அது இருந்தது. பாரதி கவிதை வழி தீரா கவி தாகமும், விடுதலை உணர்வும் பெற்று சுதந்திரப் போரில் தமது சமகால நண்பராக சி.சு.செல்லப்பாவைப் போன்றே தம்மையும் ஒரு போராளியாக்கிக் கொண்டார். சி.சு. வின் எழுத்து, 'கலை, கலைக்காகவே' என்றபோது சிறையில் பெற்ற பொதுவுடைமை நட்பு, தி.க.சியை 'கலை, மக்களுக்காக' என்று சொல்ல வைத்தது.

நெல்லையில் தி.க.சி. நடத்தி வந்த வாலிபர் சங்கத்தின் 'இளந்தமிழன் கையெழுத்து இதழில் அவரது அயல் வீட்டுக்காரரான வல்லிக்கண்ணன் ஆசிரியர் பொறுப்பில் இருந்தபோது, தி.க.சியின் முதல் சிறுகதையான

'வண்டிக்காரன்' வெளிவந்தது. பு.பி யின் அக்கால சமூக சமச்சீரின்மையின் ஆவேசம் தொற்றிக் கொண்டவராக தி.க.சியின் கதைகளும், எழுத்துக்களும் வெளிவரத் தொடங்கின. ஓய்வற்ற உழைப்பையும், பொழுதையும் கோரும் மனித வாழ்வின் வறுமையின் அவலத்தை அக்கதை பேசிற்று. பின்னர் அதுவே பிரசண்ட விகடனில் அச்சில் வந்த அவரது முதல் சிறுகதையாகவும் அமைந்தது.

எழுத்தே வாழ்வு என்றானபோது, அவர் எழுதாத விடயமே இல்லை என்றாயிற்று. வங்கிப் பணியை உதறினார். 1969 முதல் சோவியத் யூனியனின் சென்னைத் தூதரகத்தில் பத்திரிகைப் பணியேற்று 25 ஆண்டுகள் தீவிர மொழி பெயர்ப்பு இலக்கியத்தில் ஈடுபட்டார். 'கவிக்குயில் மலர்கள், கிராமஊழியன், கலாமோகினி', போன்றவற்றில் கட்டுரை, கவிதைகள் பெருமளவு எழுதினார். வாராவின் நடையைபோல நடைசித்திரங்கள் எழுதுவதில் தனக்கென்று ஒரு தெளிந்த நடையை மேற்கொண்டார். அது போலவே கவிதை தளத்தில் ந.பி.யை, பாரதியை, பாரதிதாசனை முன்மாதியாகக் கொண்டு ஒரு மரபார்ந்த வீச்சை கைக்கொண்டார். 'துருவன்' என்ற பெயரில் எழுதியதும் அவர்தான். மத்திய காலங்களில் திரைப்படங்கள் குறித்த அவதானிப்புடன் கூடிய கூரிய விமர்சனங்களை மக்கள் முன்வைத்தார். பின்னர் தீவிர விமர்சகராக அறியப்பட்ட காலத்தில் தி.க.சி., நாவா (வானமாமலை) வின் வேண்டுகோளுக்கிணங்க மு.வ.வின் நூல்களுக்கு விரிந்த மார்க்சியப் பார்வையில் தமது திறனாய்வினை எழுதத் தொடங்க, அதுவே அவரை தனித்த அடையாளமாக்கியது.

பிறகான காலங்களில் எழுத்து துறைக்கு வந்து சேரும் தனது கவனத்திற்குட்பட்ட படைப்புகள் யாவற்றையும் அவரது விமர்சனத் தென்றல் வருடாமல் விட்டதில்லை. சமரசமற்ற நேர்மையும், இளந்தலை முறையினரை வளர்த்தெடுப்பதிலுள்ள மூத்த தலைமுறையின் கரிசனமும் கண்டிப்புமே பண்பட்ட நாகரிகமான அவரது விமர்சனப் பார்வையை நம்மை தென்றலுக்கு ஒப்பிடச் சொல்கிறது. நீயெல்லாம் எழுதவில்லை என்று யார் அழுதா?! என்பது போன்ற 'நேர்மையான' இன்றைய எழுத்து மேதாவிகள் போல அவரது எழுத்துகள் புயல் போல சீறியதில்லை,

யாரொருவர் மீதும் விழுந்து குருதி வழியப் பிறாண்டியதில்லை. விமர்சனத் துறையின் அதிகபட்ச நேர்மையைக் கொண்டிருந்தார் தி.க.சி.

புதுமைப்பித்தன் அலை வீசிக் கொண்டிருந்த காலத்தில், புதுமைப்பித்தன் நினைவு மலரிலேயே புதுமைப்பித்தனிடத்தில் புதுமையும் உண்டு பித்தமும் உண்டு என்று எழுதத் தயங்கவில்லை அவர். அதாவது புதுமைப்பித்தன் படைப்பில் பிற்போக்குத் தன்மையும் உண்டு என்பதையே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தனது நெருங்கிய நண்பரும் இலக்கியவாதியுமான வல்லிக்கண்ணனின் இலக்கிய நோக்கை முழுமையாக ஆதரித்தவர் இல்லை தி.க.சி. இதை வல்லிக் கண்ணனே குறிப்பிடுகிறார். வல்லிக்கண்ணனின் கதைகள் கயிலைப் பதிப்பக வெளியீடாக வந்தபோது அதை கடுமையாக விமர்சித்து எழுதினார். முற்போக்கு அரங்கிலே தோன்றிய பின் நவீனத்துவவாதிகளையும் கூட அதே காட்டத்துடன் எதிர்த்து வந்தார். சின்ன அறிவுசீவிக் கூட்டமான அவர்கள் வறட்டுத்தனம் நிரம்பியவர்கள் என்றார். இவர்கள்தான் புதுமைப்பித்தன் போன்றவர்களை சாதியத்திற்குள் அடைப்பவர்கள் என சாடினார். தனது கொள்கைக்கு நேர் எதிர் இடத்தில் இருந்தாலும் அவர்களது படைப்புகளை மதிப்பிட்டு பாராட்ட கொஞ்சமும் தயங்காத முதுபெரும் விமர்சகர் தி.க.சி. மட்டுமே. தத்துவநோக்கமும், பொதுவாழ்வில் அர்ப்பணிப்பும் அபூர்வமாக இணைந்து நிற்கும் அரிதான படைப்பாளிகளை பெரிதும் நேசிப்பவராக இருந்தார் அவர். அதனால்தான் சி.சு.செ, தொ.மு.சி. வல்லிக்கண்ணன் போன்றோரையும் வசீகரிப்பவராக இருந்தார்.

வறட்டு முற்போக்கு வாதம் இலக்கியத்தின் அழகியலையும் அதன் நோக்கத்தையுமே சிதைத்துவிடும் என்பதில் தி.க.சி.க்கு மாற்றுக் கருத்து இருந்ததில்லை அதே நேரம் வெறும் அழகியல் என்பது பிணத்திற்கு சமம் என்று கருதினார். அதனால்தான், பா.செயப்பிரகாசம், பொன்னீலன் போன்ற முற்போக்கு படைப்பாளிகளின் எழுத்துக்களை பெரிதும் வரவேற்றார். பொன்னீலனின் பாதைதான், பாரதி, பாரதிதாசன், ஜீவாவின் தடம் என்பதை உறுதியாக நம்பினார். எதிர்கால முற்போக்கு இலக்கியம் இவர்களிடமிருந்தே செழித்து வளரும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அதேசமயம் சமூக நீதிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் என தடையாக இருக்கும் எவ்வகை இலக்கியத்தையும் முனைமுகத்து நின்று

எதிர்ப்பதில் அவர் சோர்விலா வீரர். எவ்வகை விமர்சனமும் தட்டிச் கொடுப்பதாக இருக்க வேண்டுமே தவிர தாக்குதலாக மாற இடம் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இன்றைய விமர்சனப்பாங்கு என்பது வெறும் புகைச்சலும், குழுவாதமும் நிறைந்தது என்பதை நினைக்கையில், தி.க.சி.யின் விமர்சனக் கரிசனம் எத்தனை முக்கியத்துவமுடையது என்பது விளங்கும்.

வளரும் படைப்பாளிகளை தட்டிக் கொடுப்பதிலும், வளர்ந்த படைப்பாளிகளை தட்டிக் கேட்கவும் தி.க.சி.யின் விமர்சனப் பார்வை சமரசப்பட்டுக் கொண்டதில்லை. அவரது அளவுகோல் என்பது அவரைப் போலவே எளிமையானதும் கூட. சிறந்த படைப்பாளி, சிறந்த மனிதனாகவும் இருக்க வேண்டும் என்பதே அவரது எப்போதைக்குமான முன் நிபந்தனையாக இருந்துவந்தது.

தமது இலக்கிய பயணத்திற்கு தடையாக இருக்கும் என்று திருமணம் செய்து கொள்ளாத முதுபெரும் படைப்பாளிகளுக்கு மத்தியில் நிறைவான குடும்ப வாழ்வை மேற்கொண்டார் தி.க.சி. பல இலக்கியவாதிகளின் வாரிசுகள் எழுத்து பிழைப்பதற்கான வழியல்ல என்று அந்தப் பக்கமே தலைவைத்துப் படுப்பதில்லை. உண்மையில் எழுத்து ஒருவகை வாழ்வு தவம். ஒரு சரியான படைப்பாளியின் பிள்ளை சரியான மனிதனாகவும், படைப்பாளியாகவும் இருப்பான் என்பதை தி.க.சி.யின் நிழலில் வளர்ந்த பிள்ளை வண்ணதாசன் (கல்யாண்ஜி) எழுத்து சொல்வதாக இருக்கிறது. வேறெந்த தமது சிறந்த படைப்பை போலவே தி.க.சி. தமது மகன் குறித்து பெருமைப்பட்டுச் கொள்ளலாம். அது நியாயமானதும் கூட.

ஈராயிரம் ஆண்டு தொடக்கத்தில், விமர்சனங்கள்- மதிப்புரைகள்- பேட்டிகள் என்ற நூலுக்காக சாகித்திய அகாதெமியின் விருது தி.க.சி க்கு கிடைத்தது என்பது விருதுக்கு கிடைத்த பெருமையாகும்! விருதுகளைத் தேடி, 'அலைந்து', 'வாங்கும்' காலத்தில் அவரைத் தேடி வந்தது தமிழ் பெற்ற அவதானமாகும். தி.க.சி. இலக்கிய செயற்பாட்டாளர் என்பார், மூத்த தமிழறிஞர் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி. மனிதர்களைப் போற்றுவதும், மனித நேயத்தை வளர்ப்பதுமே தி.க.சியின் அடிப்படை இலக்கியக் கொள்கை என்பார் வல்லிக்கண்ணன். தாமரை, இவர் காலத்தில்தான்

பொற்றாமரையாயிற்று. 6 மொழி பெயர்ப்பு நூல்கள், 4 திறனாய்வு நூல்கள் தி.க.சி.யின் இலக்கியப்பணியில் விளைந்தவை. கேரளாவில் தாம் வங்கிப் பணியாற்றிய காலத்தை நாவலாக எழுதும் அவரது அனுபவம் அவருடனே பின் சென்றுவிட்டது நெடுங்கதை உலகின் பேரிழப்பாகும்.

தமிழில் இலக்கிய விமர்சனத்துறை என்பது பெரிதாக வளராததற்கு நேர்மையும், திறந்த மனதும் இல்லாததும், விமர்சகர் என்பவர் திட்டித் தீர்த்துக் கொண்டே இருப்பவர், வெகுசன விரோதி என்பன போன்ற மனோநிலையும் காரணமாக இருந்த நிலையில் தி.க.சி. படைப்பாளிக்கும் விமர்சகருக்கும் இடையே தோழமையையும் நட்புறவையும் வளர்ப்பவராக இருந்தார். படைப்பை நோக்கிய விமர்சனம் எந்நிலையிலும் படைப்பாளியைத் தாக்காவண்ணம் அவரது ஆளுமை இருந்தது. இன்றைக்கு விமர்சனம் என்கிற பெயரில் பெரும்பாலும் தனிநபர் தாக்குதலுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. தனிநபரை முன்வைத்து படைப்பை நிராகரிக்கும் துறையாகவே இன்றைய விமர்சனத் துறையின் போக்கு இருந்து கொண்டுள்ளது.

தலைமுறை இலக்கிய வாதிகளுக்கிடையே காலத்தின் பாலமாக, மரபின் தொடர்ச்சியாக நின்ற தி.க.சி. தமது 90 வது அகவையை எட்டும் முன்பாகவே தம்மை நம்மிலிருந்து துண்டித்துக் கொண்டுவிட்டார். பலரும் அவரை தபால் கார்டு இலக்கியவாதி என்று எள்ளியதுண்டு. நமது படைப்புகள் பற்றி திருநெல்வேலியிலிருந்து தி.க.சி. என்ன எழுதியிருக்கிறார் என்று அன்றைய திங்கள் இதழைத் திறந்து வாசகர் கடிதப் பகுதியில் தேடிப் பிடித்து படிப்பது எம்மைப் போன்ற படைப்பாளிகளின் அன்றாடமாக இருந்தது. அந்த அய்ம்பது காசு தபால் கார்டுதான் எம்மைப் போன்ற ஏகலைவர்களை, பல இலக்கியவாதிகளை வளர்த்தெடுக்கும், அடையாளம் காட்டும் முகவரியாக இருந்தது என்பதை யாதொருவராலும் மறுக்கமுடியாது.

ஒரு நேர்காணலில் தி.க.சி. இப்படி சொன்னார், தி.க.சி என்ற மனிதன் இறந்துவிட்டால், ஒரு எழுத்தாளன் என்று கூட வேண்டாம், ஒரு நல்ல மனிதன் உற்ற தோழன் போய்விட்டான் என்று நினைத்து கண்ணீர்விட ஒரு நூறு பேர் போதும் என்றார். தி.க.சி. போன்ற நல்ல மனிதருக்காக,

... சிந்தும் ஒரு துளிக் கண்ணீர் என்பது உண்மையில் நூறு பேருக்குச் சமம்தான்.!

- இரா.மோகன்ராஜன்

காணொளிகள்

01] **மதுரத்வனி அழியாத ரேகைகள்-பணியும்) தி. க. சிவசங்கரன்,ஆசிரியர் (தாமரை)**
https://www.youtube.com/watch?v=8_gkil4cg84 [59:04]

02] **தி. க. சிவசங்கரன் | தமிழ் வெள்ளி - 3 | முனைவர் சங்கர சரவணன்**
https://www.youtube.com/watch?v=AxnUdWZBpKg [54:13]
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் நடத்தும் "உரைவெளி" கலந்துரையாடலுக்கான களத்தில் முனைவர் சங்கர சரவணன் ' தி. க. சிவசங்கரன் ' என்னும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

(😊)(😊) திக சிவசங்கரன் (😊)(😊)

